மாநகர சபை, யாழ்ப்பாணம்


# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2041 தை 17 சனிக்கிழமை (30.01.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 065


# பொதுத் தேர்தலுக்கு முன் அரசு தேர்தல் முறையை மாற்ற முயற்சி

## எதிரணி எம்.பிக்களின் ஆதரவைப் பெற எத்தனம்

கொழும்பு, ஜனவரி 30

**பொதுத் தேர்தலுக்கான அறிவிப்பை விடுக்கும் நோக்கில் தற்போதைய நாடாளுமன்றம் எந்நேரமும் கலைக்கப்படலாம் என்ற பேச்சு பலமாக அடிபடுகின்றபோதிலும்-**

**அதற்கு முன்பதாக பொதுத் தேர்தல் நடைமுறையை மாற்றி அமைப்பதற்கான கடைசி நேர முயற்சிகளில் அரசு ஈடுபட்டிருப்பதாக விடயமறிந்த வட்டாரங்கள் தகவல் வெளியிட்டிருக்கின்றன.**

அதன் பொருட்டு தேவையான நாடாளுமன்றப் பலத்தை - நாடாளுமன்றின் மூன்றில் இரண்டு பங்கு எம்.பிக்களின் ஆதரவை - திரட்டுவதில் ஈடுபட்டுள்ள அரசு, அதற்காக எதிரணியில் மேலும் 19 எம்.பிக்களின் ஒத்துழைப்பைப் பெறும் நோக்கோடு அவர்களுடன் தொடர்பாடல்களை மேற்கொண்டிருக்கின்றது என தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் அரசுத் தரப்பு எம்.பியுமான விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.

தற்போதைய விகிதாசாரத் தேர்தல் முறைமையின் கீழான பொதுத் தேர்தலில் நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை ஆசனங்களைத் தான்

(23ஆம் பக்கம் பார்க்க)

## பொன்சேகாவின் அலுவலகம் முற்றுகை!

கொழும்பு, ஜன. 30

கொழும்பு றோயல் கல்லூரிக்கு சமீபமாக உள்ள சரத் பொன்சேகாவின் அலுவலகம் நேற்று விசேட அதிரடிப்படையினரால் சுற்றிவளைக்கப்பட்டு சோதனையிடப்பட்டது.

இந்த சுற்றிவளைப்பில் முகமூடி அணிந்த சுமார் 150 படையினர் ஈடுபட்டனர் என்றும் அலுவலகத்தில் இருந்த சிலர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (சி)

## இருபது வேட்பாளர்கள் கட்டுப்பணம் இழந்தனர்

கொழும்பு, ஜன. 30

நடைபெற்று முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட 22 வேட்பாளர்களில் 20 பேர் தமது கட்டுப்பணத்தை இழந்துள்ளனர் என தேர்தல்கள் செயலகம் அறிவித்துள்ளது.

பதிவுசெய்யப்பட்ட 15 அரசியல் கட்சிகளின் வேட்பாளர்களும், சுயேச்சையாகப் போட்டியிட்ட ஐந்துபேரும் தமது கட்டுப்பணத்தை இழந்துள்ளனர் என்றும் செயலகம் குறிப்பிட்டுள்ளது.

இவர்களில் அரசியல் சட்சிகள் சார்பாகப் போட்டியிட்ட வேட்பாளர் ஒருவர் 50 ஆயிரம் ரூபா வீதமும், சுயேச்சையாகப் போட்டியிட்ட வேட்பாளர் ஒருவர் 75 ஆயிரம் ரூபா வீதமும் கட்டுப்பணம் செலுத்தியிருந்தனர்.

கட்டுப்பணத்தை இழந்த 20 வேட்பாளர் களாலும் மொத்தம் 11 லட்சத்து 25 ஆயிரம்ரூபா தேர்தல்கள் செயலகத்திற்கு செலுத்தப்பட்டிருந்தது.

அரசியல் கட்சிவேட்பாளர்கள் 15 பேரும்

(24ஆம் பக்கம் பார்க்க)

### தேர்தல் ஆணையாளர் அழுத்தங்களுக்கு ஆளானாரா?

## ஜனநாயகம் இன்று ஆபத்தான நிலையில்: அதனைத் தோற்கடிக்க அனுமதிக்கக் கூடாது



### சகலரும் ஒத்துழைக்கக் கோருகிறார் ரணில்

கொழும்பு, ஜன.30

தேர்தல் முடிவுகளை வெளியிட்டு உரையாற்றிய தேர்தல் ஆணையாளரின் கருத்துக்கள் மூலம் அவர் ஏதேனும் அழுத்தங்களுக்கு உள்ளாகியிருக்கலாம் எனத் தெரியவருகிறது. இந்த நிலைமையானது ஜனநாயகம் தொடர்பான மிகவும் பயங்கரமானதும் ஆபத்தானதுமான ஒன்றாகும் - என்று ஐக்கிய தேசிய முன்னணியின் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பிலுள்ள அவரது அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே ரணில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் அவர் கூறியவை வருமாறு -

தேர்தல் ஆணையாளரின் உரையின் மூலம் அவர் எதிர்பார்த்தவாறு ஜனாதிபதித் தேர்தல் பணிகளை முன்னெடுக்க முடியவில்லை என்பது தெரியவந்துள்ளது. உண்மையில் அவருக்கு என்ன நேர்ந்தது?. தேர்தல் நடைபெற்ற தினத்தின்று இரவு தேர்தல் ஆணையாளர் ஏதேனும் அழுத்தங்களை எதிர்நோக்கினாரா?. அல்லது அதற்கு முன்னர் அழுத்தங்களுக்கு அடிபணிந்தாரா? அச்சுறுத்தலை எதிர்நோக்கினாரா?

தேர்தல் ஆணையாளர் இதற்கு முன்னர் தேர்தல்கள் முடிவுற்ற பின்னர் வெளி

(24ஆம் பக்கம் பார்க்க)

## பொன்சேகாவின் பாதுகாப்பு குறித்து உன்னிப்பாகக் கண்காணிக்கப்படும்

### அமெரிக்க அரசாங்கத் தரப்புச் சொல்கிறது

கொழும்பு, ஜன. 30

ஜெனரல் சரத் பொன்சேகாவின் பாதுகாப்பு தொடர்பில் உன்னிப்பாக கண்காணிக்கப்படும் - என்று அமெரிக்கா அறிவித்துள்ளது.

சரத் பொன்சேகாவுடன் தொடர்புகள் ஏற்படுத்தப்படும் எனவும், அவரது எதிர்

(24ஆம் பக்கம் பார்க்க)

## பொன்சேகா வெளிநாடு செல்ல தடை ஏதும் விதிக்கப்படவில்லை

### அரசுத் தரப்பு தெளிவுபடுத்துகிறது

கொழும்பு, ஜன. 30

எதிர்க்கட்சிகளின் பொதுவேட்பாளராகப் போட்டியிட்ட முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் சரத் பொன்சேகா நாட்டைவிட்டு வெளியேறுவதற்குத் தடை ஏதும் விதிக்கப்படவில்லை. அதேபோல அவரது நடமாட்டத்துக்குக் கட்டுப்பாடும் ஏதும் விதிக்கப்படவில்லை.

- இவ்வாறு இலங்கை அரசுத் தரப்பில் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

தேசியப் பாதுகாப்புக்கான ஊடக மத்திய நிலையத்தின் பணிப்பாளர் நாயகமான லக்ஷ்மன் குலுகல்ல இத்தகவலை வெளியிட்டார்.

இதேவேளை, ஜெனரல் சரத் பொன்சேகாவின் வெளிநாட்டுப் பயணங்களுக்கோ அல்லது அவரது பாஸ்போர்ட் தொடர்பிலோ

(24ஆம் பக்கம் பார்க்க)

## வாக்கு எண்ணுதலில் மிகப்பெரும் மோசடியாம் கடுமையாகக் குற்றம் சுமத்துகிறது ஐ.தே.க.

கொழும்பு, ஜன.30

நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் வாக்குகள் எண்ணும்போது மிகப்பெரும் மோசடிகள் இடம்பெற்றுள்ளன என்றும் இதற்கு எதிராக ஐக்கிய தேசியக் கட்சி நீதிமன்றம் செல்லப்போகின்றது எனவும் நேற்றுத் தெரிவித்தது.

இந்த மோசடிகள் தொடர்பான விவரங்கள் சர்வதேச நாடுகளுக்கும் இந்நாட்டு மக்களுக்கும் தெரியப்படுத்தப்படும் என்றும் அக்கட்சி தெரிவித்துள்ளது.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்

(23ஆம் பக்கம் பார்க்க)


அறிமுகப்படுத்துகிறோம்

யாழ் நகரிலும், கொழும்பிலும் ஒரே சுவை, ஒரே தரம், ஒரே விலை

Cosy Hotel & Restaurant

Open 06.00am to 11.00pm

விசேட வடஇந்திய காலை உணவு

பூரி, சப்பாத்தி, பரோட்டா, நாண், சைவ, அசைவ கறிவகைகளும் மற்றும்

Indian, Chinese, Panjabi & Jaffna Foods

கொசி உணவகம் Feel like home

இல: 25, புகையிரத நிலைய வீதி, வெள்ளவத்தை. HOTLINE: 0112504020

இல:15, சிறாம்பியடி ஒழுங்கை, யாழ்ப்பாணம். HOTLINE: 021 2225899


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெப்ரவரியில் நாடாளுமன்றம் கலைப்பு?

கொழும்பு, ஜன. 30

எதிர்வரும் பெப்ரவரி நான்காம் திகதி நடைபெறும் சுதந்திரதினக் கொண்டாட்டங்களை அடுத்து சில தினங்களில் நாடாளுமன்றத்தைக் கலைப்பதற்கு ஜனாதிபதி முடிவெடுத்துள்ளார் என அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலில், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஈட்டிய அமோக வெற்றியைத் தொடர்ந்து நடக்கவுள்ள நாடாளுமன்றத் தேர்தலிலும் ஆளும் கட்சியால் பெருவெற்றியை ஈட்ட முடியுமென்ற நம்பிக்கையிலேயே இத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகவும் அரசியல் வட்டாரங்கள் ஊகம் வெளியிட்டுள்ளன.

இதை ஊர்ஜிதப்படுத்தும் வகையில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றில், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பிரதம செயலாளர் அமைச்சர் மைத்திரிபால சிறிசேனவும் இது தொடர்பான கருத்துகளை வெளியிட்டிருந்தார். நாடாளுமன்றத் தேர்தலுக்கான நடவடிக்கைகளை உடன் ஆரம்பிக்குமாறு கட்சியின் சகல அமைப்பாளர்களுக்கும் ஏற்கனவே அறிவுறுத்தல் கொடுக்கப்பட்டுள்ளது என்று அவர் கூறியிருந்தார்.

தேர்தலில் போட்டியிடவுள்ள ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் வேட்பாளர்களைத் தெரிவுசெய்யும் பணியில் கட்சியின் உயர்மட்டக்குழு ஈடுபட்டுள்ள தென்றும்-

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புக்கு ஆதரவு தெரிவிக்கும் ஏனைய கட்சிகளில் வேட்பாளர்களைத் தேந்தெடுக்க குறிப்பிட்ட கட்சிகளுடன் பேச்சுகள் நடைபெறவுள்ளன என்றும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, முதல்நான்கு மாதங்களுக்கென சமர்ப்பிக்கப்பட்ட இடைக்கால வரவு- செலவுத்திட்டம் ஏப்ரல் 30 ஆம்திகதியுடன் முடிவடைவதால் அதற்குமுன் நாடாளுமன்றத் தேர்தல் நடத்தப்பட வேண்டுமென்றும் அவர் அங்கு சுட்டிக் காட்டியிருந்தார். (அ-சி)

## யாழ்.வலய அதிபர்கள் கூட்டம் இன்று

அச்சுவேலி, ஜன.30

யாழ்.கல்வி வலய அதிபர்கள்கூட்டம் இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். கல்வி வலய முகாமைத்துவ மண்டபத்தில் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் தலைமையில் நடைபெறும்.

2010 ஆண்டுக்கான கல்வி அபிவிருத்திக்கான வேலைத்திட்டங்கள், இடம்பெயர்ந்த மாணவர்களின் கல்வி மேம்பாடு, ஆசிரியர்களின் பிரச்சினைகள் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடவிருப்பதால் சகல அதிபர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ஒ-11)

## மகஜன சம்பத சீட்டிழுப்பு முடிவுகள்

தேசிய லொத்தர் சபையின் 2202ஆம் இலக்க நேற்று நடந்த சீட்டிழுப் பில் 'S' என்ற ஆங்கில எழுத்தும் 7/7/1/1/4/4ஆகிய இலக்கங்களும் அதிர்ஷ்டத்துக் குரியனவாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளன.

இதன் பிரகாரம் சுப்பர் பரிசும் வெல்லப்படவில்லை. முதலாம் பரிசான 20 இலட் சம் ரூபா ஒருவரால் வெல்லப்பட்டுள்ளது.

7/1/1/4/4 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 7 பேருக்கு இரண்டாவது பரிசாகத் தலா ஒரு இலட்சம் ரூபா கிடைக்கவுள்ளது.

1/1/4/4 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 80 பேருக்கு மூன்றாம் பரிசாகத் தலா 10 ஆயிரம் ரூபா கிடைக்கவுள்ளது.

1/4/4 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 766 பேருக்கு நான்காம் பரிசாகத் தலா ஆயிரம் ரூபா கிடைக்கவுள்ளது.

4/4 என்ற இலக்கங்களைச் சரியாகக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 7,689பேருக்கு ஐந்தாம் பரிசாகத் தலா நூறு ரூபா கிடைக்கவுள்ளது.

4 என்ற இலக்கத்தை மட்டும் கொண்ட 75,957 பேருக்கு ஆறாம் பரிசாகத் தலா இருபது ரூபா கிடைக்கவுள்ளது.

வலமிருந்து இடமான வடிவமைப்பில் 4/1/1/7/7 என்ற இலக்கங்களைச் சரியா கக் கொண்ட 8பேருக்கு ஏழாம் பரிசாக தலா 10ஆயிரம் ரூபா கிடைக்கவுள்ளது.

1/1/7/7 என்ற இலக்கங்களைச் சரியா கக் கொண்ட 71பேருக்கு எட்டாம் பரிசா கத் தலா ஆயிரம் ரூபா கிடைக்கவுள்ளது.

1/7/7 என்ற இலக்கங்களைச் சரியாகக் கொண்ட 773 பேருக்கு ஒன்பதாம் பரிசா கத் தலா நூறு ரூபா கிடைக்கவுள்ளது.

7/7 என்ற இலக்கங்களைச் சரியாகக் கொண்ட 7,613 பேருக்கு பத்தாம் பரிசாகத் தலா ஐம்பது ரூபா கிடைக்கவுள்ளது.

'S' என்ற ஆங்கில எழுத்தை மட்டும் சரியாகக் கொண்ட 30,414 பேருக்கு பதினோராம் பரிசாகத் தலா இருபது ரூபா கிடைக்கவுள்ளது. (6)

# ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் தேசிய ஒற்றுமையை ஏற்படுத்த முடியாது

## ஜே.வி.பியின் ரில்வின் சில்வா சொல்கிறார்

கொழும்பு, ஜன.30

நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் தமிழ், முஸ்லிம் மக்களின் வாக்குகள் ஜெனரல் சரத் பொன்சேகாவுக்கே அளிக்கப்பட்டுள்ளன. தமிழ், முஸ்லிம் மக்கள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை கைவிட்டுள்ளனர். இந்தத் தேர்தல் பெறுபேறுகளை நோக்கும்போது மஹிந்த ராஜபக்ஷவால் தேசிய ஒற்றுமையை ஏற்படுத்த முடியாது.''

- இவ்வாறு ஜே.வி.பியின் பொது செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்தார்.

பத்தரமுல்லையிலுள்ள கட்சித் தலைமையகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் கூறியவை வருமாறு:-

ஜனாதிபதித் தேர்தல் முடிவுகளை நாம் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளப்போவதில்லை. இந்தத் தேர்தல் முடிவுகளானது மக்களின் உண்மையான விருப்பை பிரதிபலிக்கவில்லை. மக்களின் உண்மையான விருப்பு திரிவுப்படுத்தப்பட்டுள்ளது.

வடக்கு மக்கள் இந்தத் தேர்தலின் பங்குதாரர்கள் இல்லை என்பதையே அரசின் செயல்பாடு காண்பிக்கின்றது. முஸ்லிம் மக்கள் ஜனாதிபதி மீது நம்பிக்கை கொள்ளவில்லை என்பதையே தேர்தல் வெளிப்படுத்தியுள்ளது.

இந்தத் தேர்தல் சட்டம் முற்றாக மீறப்பட்டுள்ளமை காரணமாக இந்தத் தேர்தலை நாம் ஜனநாயக ரீதியான தேர்தலாக பார்க்கவில்லை. மாறாக இந்தத் தேர்தலானது ஆரம்பம் முதல் இறுதிவரையில் முற்று முழுவதாகவே ஊழல், மோசடி நிறைந்தது என்பது நிச்சயமாகும். இந்த மோசடி மிக்க தேர்தல் நடவடிக்கையின் பெறுபேறே தற்போதுள்ளது. இந்தப் பெறுபேறுகளை மக்களின் உண்மையான தீர்ப்பாகவோ, விருப்பாகவோ நாம் ஏற்றுக்கொள்ளவில்லை.

இந்தத் தேர்தலை அறிந்த ஆரம்பத்தில் வடக்கு மக்களின் விருப்பை ஆணையாளர் அறியவேண்டும் என அரசு தரப்பில் கூறப்பட்டது. எனினும், அரசே வடக்கு மக்களுக்குத் தடங்கலை ஏற்படுத்தியது. வடக்கு மக்களை வாக்களிக்க அனுமதிக்கவில்லை. இதனால் யாழ். மாவட்டத்தில் வாக்களிப்பு வீதம் நூற்றுக்கு 23 ஆக காணப்பட்டது.

அதேபோன்று வவுனியா முகாம்களில் நூற்றுக்கு 10 வீதமளவிலேயே வாக்களிப்பு இடம்பெற்றுள்ளது. இப்படிப் பார்க்கும்போது தமிழ் மக்கள் இந்தத் தேர்தலில் பங்குதாரர்களாக இணைத்துக் கொள்ளப்படவில்லை. வழங்கப்பட்ட வாக்குகள் கூட ஜெனரலுக்கே உள்ளது. அப்படிப் பார்க்கையில் ஜனாதிபதியால் தேசிய ஒற்றுமையை கட்டியெழுப்ப முடியாது என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. தமிழ் மக்களும் முஸ்லிம் மக்களும் மஹிந்த ராஜபக்ஷவை கைவிட்டுள்ளனர். அந்த வகையில் இதனை தேசிய ரீதியான பெறுபேறாக நோக்கமுடியாது. இந்தத் தேர்தல் பெறுபேறுகளை நோக்கும்போது மஹிந்த ராஜபக்ஷவால் தேசிய ஒற்றுமையை ஏற்படுத்த முடியாது என்பதும், தமிழ், முஸ்லிம் மக்கள் அவர் மீது நம்பிக்கை கொள்ளவில்லை என்பதும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன. - என்றார். (அ-சி)

## உழவர் தின விழா

யாழ்ப்பாணம், ஜன.30

சாவகச்சேரி கண்டுவில் ஒழுங்கை புவேந்தன் பாலர் பாரம்பரிப்பு நிலைய சிறார் களின் பாரம்பரிய உழவர் தின விழா இன்று முற்பகல் 10 மணிக்கு நிலை யத் தலைவர் வை. இராசரத்தினம் தலைமையில் நடைபெறும். (ஒ-207)

# பயங்கரவாதம் தலையெடுப்பதை மக்கள் நிராகரித்து விட்டனர்

## அத்துரலியே ரத்னதேரர் எம்.பி. கூறுகிறார்

கொழும்பு, ஜன.30

முப்பது வருடங்களாக இந்நாட்டை உலுக்கிவந்த பயங்கரவாதம் மீண்டும் தலைதூக்காமல் இருப்பதற்காகவே மக்கள் ஜனாதிபதி மஹிந்தவுக்கு தங்கள் ஆணையை வழங்கியுள்ளனர் என ஜாதிக ஹெலஉறுமய நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலியே ரத்ன தேரர் தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சிகளின் பொதுவேட்பாளரான ஜெனரல் சரத் பொன்சேகாவை மக்கள் நிராகரித்துள்ளனர். இதன்மூலம் அக்கட்சிகளின் பொய்யான பிரசாரங்களையும், ஜனாதிபதி மஹிந்தவின் மீது ஏற்படுத்திய பாரிய அவதூறுகளையும் அவர்கள் நம்பவில்லையென்பதை தீர்க்கமாக வெளிக்காட்டியுள்ளனர் என்றும் அவர் தெரிவித்தார்.

அத்துடன் ஜே.வி.பியின் குறுகிய நோக்கங்களும், பொய் வாக்குறுதிகளும் மக்கள் மத்தியில் எடுபடவில்லை.

தற்போதைய அரசைத் தோற்கடிக்க அவர்கள் செய்த சதிகளை மக்கள் நன்றாக இனம் கண்டுள்ளனர்.

எமது நாட்டுக்கான ஸ்திரப் பொருளாதாரத்தீர்வு, அரசமைப்பில் மாற்றங்கள் ஆகியவை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் தலைமைத்துவத்தில் மட்டுமே நிறைவேற முடியும் - என அவர் மேலும் தெரிவித்தார்.

# பொதுத் தேர்தலில் போட்டியிட அரசு பெயர்ப்பட்டியல் தயாரிக்கும் நடவடிக்கையில்

பொதுத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களில் தகவல்களைத் திரட்டி பெயர்ப்பட்டியலை தயாரிக்கும் நடவடிக்கைகளை அரசு நேற்று முன்தினம் முதல் ஆரம்பித்துள்ளதாக ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் பொதுச் செயலாளரும், அமைச்சருமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வெற்றி பெற்றதை அடுத்து ஐக்கியமக்கள் சுதந்திர முன்னணி ஏற்பாடு செய்திருந்த விஷேட செய்தியாளர் மாநாடு நேற்று முன்தினம் காலை நடைபெற்றது.

பண்டாராநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற இந்த செய்தியாளர் மாநாட்டில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொது செயலாளரும் அமைச்சருமான சுஷில் பிரேம ஜயந்த், அமைச்சர்களான கலாநிதி சரத் அமுனுகம, பேராசிரியர் ஜீ.எல். பீரீஸ், ரிஷாத் பதியுதீன், சம்பிக ரணவக்க, தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ஸ ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்த மாநாட்டில் அமைச்சர் மைத்திரிபால மேலும் கூறியவை வருமாறு:-

நாடாளுமன்றம் வெகுவிரைவில் கலைக்கப்பட்டு பொது தேர்தல் ஒன்றை நடத்துவதற்கான அறிவித்தல் இன்னும் ஓரிரு வாரங்களில் விடுக்கப்படும். அத்துடன் ஜனாதிபதிக்கு கிடைக்கபெற்ற 60 வீத வாக்குகளை தக்கவைத்துக் கொண்டு எதிர்க் கட்சிக்கு வழங்கப்பட்ட 40 வீத வாக்குகளையும் வெற்றி கொள்ளும் முயற்சிகள் முன்னெடுக்கப்படும்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி பொதுத் தேர்தல் ஒன்றுக்கு முகம் கொடுப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை உடனடியாக ஆரம்பித்துள்ளது. தற்போதைய நாடாளுமன்றத்தின் காலம் எதிர்வரும் ஏப்ரல் மாதத்தில் முடிவடைய வுள்ளது. இந்த நிலையில் அரசமைப்பின் பிரகாரம் பொதுத் தேர்தல் ஒன்றுக்கான அறிவிப்பு வெகுவிரைவில் விடுக்கப்படும்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசில் அங்கம் வகிக்கும் கட்சிகளுடனான பேச்சுகள் இன்னும் ஓரிரு தினங்களில் நடைபெறவுள்ளது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் என்ற வகையில் இதற்கான ஆலோசனைகளை வழங்கியுள்ளேன். ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையில் இந்த நாட்டை முன்னேற்ற எதிர்க்கட்சியின் 40 வீத வாக்காளர்களும் எம்முடன் கைகோர்க்குமாறு வேண்டுகோள் விடுக்கின்றேன்.

## மரண அறிவித்தல்

### ஐயாத்துரை குருக்கள் தியாகராசா குருக்கள்

(இளைப்பாறிய ஆசிரியரும், பத்திரகாளி தேவஸ்தானம், வீரமகாகாளி தேவஸ்தான ஆதீன கர்த்தாவுமானவர்)

கெருடாவிலைப் பிறப்பிடமாகவும், தொண்டைமானாறை வசிப்பிடமாகவும் கொண்ட ஐயாத்துரை குருக்கள் தியாகராசா குருக்கள் நேற்று (29.01.2010) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை குருக்கள்- செங்கமலம் அம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான திரு.திருமதி திருஞானசம்பந்தர் குருக்கள் தம்பதிகளின் அன்பு மருமகனும், உலகமாதாவின் அன்புக் கணவரும், சரஸ்வதி (பேபி), தேவமாலா (கிளி) ஆகியோரின் அன்புத் தந்தையும், விசாகரத்தினக்குருக்கள் (தொண்டைமானாறு வீரமகாகாளி அம்மன், கொம்பத்தன மனோன்மணி அம்மன் தேவஸ்தானங்களின் பிரதமகுரு), நா.கேதீஸ்வரக்குருக்கள் (அனுராதபுரம்-இருபாலை லிங்கப்பிள்ளையார் தேவஸ்தான பிரதம குரு) ஆகியோரின் மாமனாரும், விதுஷா, கசிநேசன், துளசிநேசன், சுபகரி, மாதங்கி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(30.01.2010) சனிக்கிழமை நண்பகல் 12மணிக்கு அவருடைய இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் காட்டுப்புலம் இந்து மயானத்தில் பி.ப 3மணிக்கு தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

வீரமகாகாளி அம்மன் தேவஸ்தானம், தொண்டைமானாறு.

தகவல்: உலகமாதா (மனைவி).


## உடன் விற்பனைக்கு

[illegible] மற்றும் திரில் குளிர் சாதனப் பெட்டி விற்பனைக்குண்டு.

தொடர்பு:- 021- [illegible]

(மாலை 5.00 மணி முதல் 8 மணி வரை)


## மரண அறிவித்தல்

### சிதம்பரப்பிள்ளை சீவரத்தினம்

(ஓய்வு பெற்ற ஆசிரியர், சன்மார்க்க ம.வி, முன்னாள் சைவப்பரிபாலன சபை காரியதரிசி)



சிறாம்பியடியைப் பிறப்பிடமாகவும், 39/5, அம்மன் வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணத்தை நிரந்தர வதிவிடமாகவும் கொண்ட சிதம்பரப்பிள்ளை சீவரத்தினம் 27.01.2010 புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிதம்பரப்பிள்ளை- தங்கமுத்து தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான தம்பையா- தங்கம்மா தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற பாக்கியத்தின் (ஆசிரியர்) அன்புக் கணவரும், பகீரதன் (பாபு), ஜீவபகீரதி (ரதி), சத்திய சீலன் (சீலன்), வாகீசன் ஆகியோரின் அன்புத்தந்தையும், கல்பனா, குணரத்தினம், சிவானி, மோகமதி ஆகியோரின் அன்பு மாமனாரும், ஆர்த்தி, சரணியன், நிர்விக்கா, மயூரன், அஷ்வின், நிவிஷா ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற சிவராசா மற்றும் மங்கையர்க்கரசி, நவரத்தினம், இராசலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரனும், பாக்கியம், புனிதவதி, காலஞ்சென்ற ஞானசேகரம் மற்றும் சண்முகலிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (31.01.2010) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச்செல்லப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

39/05, அம்மன் வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். தொ.பே: 0772718336

தகவல்: பிள்ளைகள், சி.நவரட்ணம் (சகோதரன்). (94367)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# பதவிக் காலம் குறித்த சர்ச்சை

தற்போதைய ஜனாதிபதித் தேர்தலில் வெற்றியீட்டியுள்ள மஹிந்த ராஜபக்ஷ தமது இரண்டாவது பதவிக் காலத்தை எப்போது ஆரம்பிக்கப் போகின்றார்? அது எப்போது ஆரம்பித்து, எப்போது முடியும்? இந்தத் தேர்தல் முடிவு அறிவிக்கப்பட்ட தினமான 2010 ஜனவரி 27 ஆம் திகதி ஆரம்பமாகுமா? அல்லது 2010 நவம்பரில் தொடங்குமா? அப்படியும் அல்லாமல் 2011 நவம்பரில்தான் ஆரம்பமாகுமா? - இதுவே இப்போது அரசியல் வட்டாரங்களில் பரபரப்பாக எழுப்பப்படும் கேள்விகள்.

அதாவது, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் இரண்டாவது பதவிக் காலம் 2016 ஜனவரியிலா, 2016 நவம்பரிலா அல்லது 2017 நவம்பரிலா முடிவடையும் என்பதுதான் சர்ச்சை.

இது தொடர்பாக உயர்நீதிமன்றத்திடம் தாம் ஆலோசனை கோரவிருக்கின்றார் என்பதை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஏற்கனவே தெளிவுபடுத்தி விட்டார்.

இந்த சர்ச்சையை சற்று ஆழமாக நோக்குவது பொருத்தமானது.

1978 அரசமைப்பின்படி ஒரு ஜனாதிபதியின் பதவிக்காலம் ஆறு ஆண்டுகள். ஒருவர் இரண்டு தடவைகள் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டு பதவி வகிக்க முடியும். ஆக, ஒவ்வொரு ஆறு ஆண்டுகளுக்கும் ஒரு தடவை ஜனாதிபதித் தேர்தல் என்பதுதான் இந்த அரசமைப்பின் மூல ஏற்பாடு.

ஆனால் 1982 இல் அரசமைப்பின் மூன்றாவது திருத்தம் மூலம் அதனை மாற்றியமைத்தார் அப்போதைய ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனா.

அதன்படி, தமது முதலாவது பதவிக் காலத்தில் ஆட்சியில் இருக்கும் ஒரு ஜனாதிபதி தமது நான்கு ஆண்டுகால ஆட்சி முடிந்த பின்னர் அடுத்த இரு ஆண்டுகளுக்குள் தாம் விரும்பியபடி முற்கூட்டியே அடுத்த தேர்தலுக்கு உத்தரவிடலாம்.

அந்தத் தேர்தலில் அவர் தோற்றால், மறுபுறத்தில் வெற்றி பெற்றவர் உடனடியாக ஜனாதிபதியாகிவிடுவார்.

அப்படியில்லாமல், தேர்தலுக்கு உத்தரவிட்ட ஜனாதிபதியே வெற்றி பெறுவாரானால் அவரது இரண்டாவது பதவிக் காலத்தை எப்போது ஆரம்பிப்பது என்பது குறித்து அந்த அரசமைப்பின் 3 ஆவது திருத்தம் தெளிவுபடுத்தியிருந்தது.

அதன்படி, அந்த ஜனாதிபதியின் முதலாவது பதவிக் காலம் எப்போது தொடங்குகின்றதோ, அதற்கு நேரொத்த திகதி (Corresponds to the date), புதிய தேர்தலின் பின்னர் எப்போது வருகிறதோ அதனையே அடுத்த பதவிக் காலத்துக்கான ஆரம்பமாகக் கருதவேண்டும் எனத் தெளிவுபடுத்துகின்றது அத்திருத்தம்.

இதனையே சற்று விளக்கமாகப் பார்ப்பதானால், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் முதலாவது பதவிக் காலம் 2005 நவம்பர் 19 ஆம் திகதி ஆரம்பமானது. தற்போதைய இரண்டாவது பதவிக்காலத்துக்கான தேர்தல் 2010 ஜனவரியில் நடந்தது. ஆக, முதலாவது பதவிக் காலத்துக்கு நேரொத்த திகதி 2010 நவம்பர் 19 இல் வருகிறது. அன்றுதான் அவரது இரண்டாவது பதவிக் காலம் ஆரம்பமாகின்றது என்கிறது அரசமைப்பின் மூன்றாவது திருத்தத்தின் வாசகம்.

ஆனாலும், இந்த சட்ட வியாக்கியானத்துக்கு ஆதரவாகவும், முரணாகவும் சில சட்ட ஏற்பாடுகளும், முன் நிகழ்வு உதாரணங்களும் இருக்கின்றமையையும் கூட நாம் மறுப்பதற்கில்லை.

அதாவது -

அரசமைப்பின் மூன்றாம் திருத்தத்தின் மூன்றாவது பிரிவின்படி ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்படும் ஒருவர் அத்தெரிவுக்கான பதவியை அடுத்த இரண்டு வாரத்துக்குள் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

அதேசமயம், இவ்வாறு ஜனாதிபதி ஒருவர் இரண்டாவது பதவிக் காலத்துக்கான பதவியை ஏற்பது தொடர்பில் முன்னாள் பிரதம நீதியரசர்கள் இருவரின் வழிகாட்டுதல் நடவடிக்கைகளும் இங்கு அவதானிக்கத் தக்கவை.

அவர்களில் ஒருவர் எழுபதுகளின் பிற்பகுதியிலும் எண்பதுகளின் ஆரம்பத்திலும் பிரதம நீதியரசராக இருந்த நெவில் சமரக்கோன். அடுத்தவர் ஆறு மாதங்களுக்கு முன்னர் ஓய்வு பெற்ற பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா.

இந்த நாட்டின் முதலாவது நிறைவேற்று அதிகார ஜனாதிபதியின் பதவிக் காலம் 1978 பெப்ரவரி 4 ஆம் திகதி தொடங்குகின்றது என அரசமைப்பின் 160ஆவது பிரிவு கூறுகின்றது. அதன்படி முதலாவது ஜனாதிபதியான ஜே.ஆர். ஜெயவர்த்தனாவின் முதலாவது பதவிக் காலம் 1978 பெப்ரவரி 4இல் ஆரம்பமாயிற்று. அவர் 1984 பெப்ரவரி வரை அப்பதவியில் நீடித்திருக்கலாம். ஆனால் அவர் 1982 ஓகஸ்டில் அரசமைப்பின் 3ஆவது திருத்தத்தை நாடாளுமன்றத்தில் நிறைவேற்ற வைத்து, அதனைப் பயன்படுத்தி அடுத்த ஜனாதிபதித் தேர்தலை 1982 ஒக்டோபரில் அவர் நடத்தி அதில் வெற்றியும் பெற்றார்.

ஆனால், அவரது இரண்டாவது பதவிக் காலத்துக்கான பதவியேற்பு வைபவத்தை 4 மாதங்கள் கழித்து - முதலாவது பதவியேற்பு தினத்துக்கு நேரொத்த திகதியில் - 1983 பெப்ரவரி 4 ஆம் திகதி அப்போதைய பிரதம நீதியரசர் நெவில் சமரக்கோன் நடத்தி வைத்தார்.

அதை முன்வழிகாட்டுதலாக இப்போது கொள்வோமாயின், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தமது அடுத்த பதவிக் காலத்தை 2010 நவம்பரில் - இன்னும் பத்து மாதங்கள் கழித்து - ஆரம்பிக்க முடியும்.

ஆனால் ஜனாதிபதி சந்திரிகா விடயத்தில் அப்போதைய பிரதம நீதியரசர் சரத் என்.சில்வாவோ வேறு விதமாகச் செயற்பட்டு முன்மாதிரித் தீர்ப்பு ஒன்றை எழுத்தில் வடித்து வைத்துவிட்டுச் சென்றிருக்கின்றார்.

அரசமைப்பின் மூன்றாவது திருத்தத்துக்கு பொருள் கோடும் விடயத்தில் அவர், அந்த வாசகத்தில் உள்ள சட்ட ஏற்பாட்டுக்கு வியாக்கியானம் கொடுக்காமல் இயற்கை நீதிக்கு முக்கியத்துவம் கொடுத்துத் தீர்ப்பளித்திருக்கின்றார்.

இரண்டாவது பதவிக்காலத்துக்கான தேர்தலை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க எப்போது நடத்தி வெற்றி பெற்றாரோ அன்றிலிருந்தே அவரது இரண்டாவது பதவிக் காலம் ஆரம்பிக்கின்றது. பின்னர் வரும் ஒரு நாளில் அது ஆரம்பமாவதாகக் கொள்வது தவறானது, இயற்கை நீதிக்கு மாறானது, பொருத்தமற்றது என்று அவர் ஏனைய இரு நீதியரசர்களுடன் சேர்ந்து தீர்ப்பு எழுதி வைத்துள்ளார். இத்தீர்ப்புக் காரணமாக ஜனாதிபதி சந்திரிகா மேலும் ஓராண்டு பதவியில் நீடிக்க முடியாமல் 2005 நவம்பரிலேயே பதவியிலிருந்து வெளியேறத் தக்கதாக அடுத்த ஜனாதிபதித் தேர்தல் நடக்க வேண்டியதாயிற்று.

சரத் என்.சில்வாவின் முன் உதாரணத் தீர்ப்பை இப்போது பின்பற்றுவதாயின் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் இரண்டாவது பதவிக்காலம் இப்போதே ஆரம்பமாகின்றது என்பதுதான் பொருள்.

இந்த சர்ச்சைக்குத் தற்போதைய உயர்நீதிமன்றம் எப்படித் தீர்வு கூறப் போகின்றது? முன்னைய பிரதம நீதியரசர்கள் மற்றும் மூன்று நீதியரசர்கள் கொண்ட உயர் நீதிமன்ற ஆயம் ஆகியவற்றின் வழிகாட்டுதல்களைப் பரிசீலித்து முடிவு செய்ய வேண்டியிருப்பதால், இந்த சர்ச்சை குறித்து இப்போது மூன்றுக்கு மேற்பட்ட நீதியரசர்களைக் கொண்ட உயர்நீதிமன்ற ஆயம் விசாரிக்கக் கூடும்.என எதிர்பார்க்கலாம்.

உயர்நீதிமன்றம் தனது ஆலோசனையை வழங்கி, அது வெளியாகும் வரை இச்சர்ச்சை தொடரவே செய்யும்.

# இந்திய கலைஞர்களின் பரத நாட்டியத்தை பார்த்து ரசித்து மகிழ்ந்த யாழ்.மக்கள்

யாழ்ப்பாணம், ஜன.30

இந்தியாவின் 61ஆவது குடியரசு தினத்தை முன்னிட்டு இந்தியக் கலாசார நிலையத்தினரால் இலங்கையின் பல பாகங்களிலும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள ''ரஸோடிபனா- ரஸங்களின் உற்பத்தி'' எனும் பரத நாட்டிய தொடர் நிகழ்சியில் யாழ்.மாவட்டத்தில் நிகழ்வின் இரண்டாவது நிகழ்வு நேற்று யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது.

யாழ்.அரச அதிபர் கே.கணேஷ் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா கலந்து கொண்டார். சிறப்பு விருந்தினராக இந்தியக் கலாசார நிலையத்தின் பணிப்பாளரும் தூதரகத்தின் அதிகாரியுமான டிங்கார் அஸ்தானா பங்கு பற்றினார். யாழ்.மாவட்ட மேலதிக அரச அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம், யாழ்.மாநகர சபை முதல்வர் யோகேஸ்வரி பற்குணராஜா உட்பட பலரும் விசேட விருந்தினராகக் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் நல்லூர் பிரதேச செயலர் ப.செந்தில்நந்தனன் வரவேற்புரையையும், டிங்கார் அஸ்தானா சிறப்புரையையும் ஆற்றினர்.

நீண்ட காலத்தின் பின்னர் யாழ். நகரில் நடைபெற்ற இந்திய கலைஞர்களின் இந்த சிறப்பான பரத நாட்டிய நிகழ்வை ரசித்துத் தாங்கள் மெய் மறந்து போனதாக பார்வையாளர்கள் பலரும் தெரிவித்தனர்.

[illegible] புகழ்பூத்த நடன விற்பன்னர்களான சீதாராமன் ஸ்ரீதர்-அனுராதா தம்பதிகளின் பரத நாட்டிய நிகழ்வு இடம்பெற்றது.

இதில் பக்கவாத்திய கலைஞர்களாக பாரதிவேணுகோபால், கார்த்திக் சத்யகுமார், ஹர்ஷா சமஹ, நரசிம்கமூர்த்தி ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

யாழ்.மாநகர முதல்வர் யோகேஸ்வரி பற்குணராஜா நன்றி உரை நிகழ்த்தினார். பெரும் எண்ணிக்கையான ரசிகர்கள் நாட்டிய நிகழ்வைக் கண்டு ரசிக்க வந்திருந்தனர். (ஒ-16)

(படங்கள் 23 ஆம் பக்கத்தில்)

# சண்டிலிப்பாயில் கணனிப் பயிற்சி

யாழ்ப்பாணம், ஜன.30

இலங்கைச் செஞ்சிலுவைச்சங்கம் சண்டிலிப்பாய் பிரிவில் புதிய கணனி பயிற்சி நெறியை எதிர்வரும் 15ஆம் திகதி ஆரம்பிக்கவுள்ளது. பயிற்சி பெற விரும்புபவர்கள் விண்ணப்பபடிவங்களை 3ஆம் கட்டை, மானிப்பாய் வீதி, ஆனைக்கோட்டை எனும் முகவரியில் அமைந்துள்ள பிரிவுக் காரியாலயத்தில் பெற்று 10ஆம் திகதிக்கு முன்னதாக தமது பதிவுகளை மேற்கொள்ள வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ)

## இன்று ஆரம்பமாகும் ஜி.சீ.ஈ (சா/த) பரீட்சை

# விடைத்தாள் மதிப்பீட்டுப்பணியில் 300ஆசிரியர் பங்குபற்றுகின்றனர்

அச்சுவேலி, ஜன.30

ஜி.சீ.ஈ சாதாரண தரப்பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டுப் பணியின் இரண்டாம் கட்டம் யாழ். இந்து மகளிர் கல்லூரியில் இன்று சனிக்கிழமை முதல் எதிர்வரும் 7ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை 9 தினங்களுக்கு நடைபெறவுள்ளன.

யாழ்ப்பாணத்தில் 21மதிப்பீட்டுக் குழுக்கள் பணியில் ஈடுபடவுள்ளன. இந்தக் குழுக்கள் ஒவ்வொன்றிலும் பிரதம பரீட்சகர், உதவிப்பரீட்சகர் மற்றும் எண்கணிதப்பரிசோதகர்கள் உட்பட 15பேர் வரையில் ஈடுபடவுள்ளனர். இந்தப் பணியில் முன்னூறுக்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் ஈடுபடவுள்ளனர்.

இரண்டாம் கட்ட விடைத்தாள் மதிப்பீட்டுப்பணியில் ஜி.சீ.ஈ சாதாரண தரம் பழைய பாடத்திட்டத்தில் உள்ள பாடங்களும் புதிய பாடத்திட்டத்தில் தொகுதிப்பாடங்களில் உள்ள பாடங்களின் விடைத்தாள்களும் மதிப்பீடு செய்யப்படவுள்ளன. (ஒ-11)

# வலி.தென்மேற்கு பிரதேசத்தில் 13 பேருக்கு வீடமைப்புக் கடன்

நவாலி, ஜன.30

வலி. தென்மேற்கு, சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையினர் 13 பேருக்கு ஒரு லட்சம் ரூபாவை கடனாக வழங்கியுள்ளனர்.

ஏற்கனவே இக் கடனைப் பெற்ற பலர் இது வரை அப்பணத்தைப் திரும்பச் செலுத் தாததினால் 5 லட்சம் ரூபா வரை நிலுவையாக உள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது.

இவர்கள் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு நீதிமன்ற மூலம் பணம் அறவிடவுள்ளதாக வீடமைப்பு உத்தியோகத்தர் எஸ்.தெய்வேந்திரம் தெரிவித்துள்ளார். (1-100)

# சுவிஸ் பெண் ஊடகவியலாளரை நாட்டை விட்டு வெளியேற உத்தரவு!

கொழும்பு, ஜன. 30

ஜனாதிபதித் தேர்தல் பற்றிய செய்திகளைச் சேகரிப்பதற்காக இலங்கை வந்திருக்கும் சுவிட்ஸர்லாந்து நாட்டுப் பெண் பத்திரிகையாளரான கரின் வென்ஜர் என்பவரை நாளை மறுதினம் திங்கட்கிழமைக்கு முன்னர் நாட்டை விட்டு வெளியேறுமாறு இலங்கை அரசு பணித்திருக்கின்றது.

சுவிஸ் பொது வானொலியின் செய்தியாளரான அவரின் விஸா அனுமதி ரத்துச் செய்யப்பட்டிருப்பதாக சிரேஷ்ட குடிவரவுக் கட்டுப்பாட்டாளர் பி.பி.அபேக்கோன் தெரிவித்தார். தகவல் திணைக்களத்தின் ஊடகப் பணிப்பாளரின் உத்தரவுக்கு அமையவே அவரது விஸா அனுமதி ரத்துச் செய்யப்பட்டதாகத் தெரிவித்துள்ள அபேக்கோன், அதற்கான காரணம் தமக்குத் தெரியாது என்றும் தெரிவித்தார்.

சம்பந்தப்பட்ட சுவிஸ் செய்தியாளரைத் திங்கட்கிழமைக்கு முன்னர் நாட்டை விட்டு வெளியேறுமாறு குடிவரவு கட்டுப்பாட்டாளர் எழுத்து மூலம் பணித்திருக்கின்றார் என்றும், ஊடக அடையாள அட்டைக்கான அந்தச் செய்தியாளரின் விண்ணப்பப்படிவம் நிராகரிக்கப்பட்டுள்ளது என்றும் கூறப்பட்டது.

எனினும், தமக்கு ஏற்கனவே இலங்கைத் தகவல் திணைக்களத்தின் ஊடக அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ளது என்றும் -

பத்திரிகையாளர் என்ற முறையில் பெப்ரவரி 17 ஆம் திகதிவரை வலுவுடையதான விஸா தமக்கு வழங்கப்பட்டுள்ளது என்றும் - அந்த ஊடகவியலாளர் தெரிவித்துள்ளார்.

''கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் இடம்பெற்றவை எனக் கருதப்படும் குளறுபடிகள், முறைகேடுகள் குறித்து அரச தரப்பு ஊடகவியலாளர் மாநாட்டில் அரச தரப்புக்கு அதிருப்தி தரக்கூடிய கேள்விகளைத் நான் எழுப்பிய காரணத்தால் இப்படி நாட்டை விட்டு வெளியேற்றப்படும் நிலை எனக்கு ஏற்பட்டுள்ளது என நான் கருதுகின்றேன்'' - என்றார் அவர். (அ-சி)

# கோண்டாவிலில் இன்று பொன்விழா நிகழ்வுகள்

கோண்டாவில், ஜன.30

கோண்டாவில் தில்லையம்பதி மத்திய கிராம முன்னேற்றச் சங்கம், மத்திய சனசமூக நிலையம் ஆகியவற்றின் 50ஆவது ஆண்டு நிறைவு பொன்விழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 2மணிக்கு தலைவர் சி.ஆனந்தராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக வணிக முகாமைத்துவ பீடாதிபதி பேராசிரியர் க.தேவராஜாவும், சிறப்பு விருந்தினர்களாக நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனனும், ஓய்வு பெற்ற கிராம அலுவலர் க.கனகலிங்கம் ஆகியோரும் கலந்து கொள்வர்.

இன்றைய நிகழ்வில் பொன்விழா சிறப்பு மலர் வெளியீடு, தில்லையம்பதி அறநெறிப்பாடசாலை மாணவர்களின் பட்டி மண்டபம், நாடகம், நடனம் போன்றவற்றுடன் பரமசாமி குழுவினரின் பக்தி கானங்கள் இசை நிகழ்வும் இடம்பெறவுள்ளன. (ஒ-49)

## அம்மா பகவான் சத்சங்கம்

வடமராட்சி, ஜன.30

கெருடாவில் அம்பிகை கலாமன்றத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3மணிக்கு அம்மா பகவான் சத்சங்கம் நடைபெறவுள்ளது.

இதில் சங்கீத ஆசிரியை திருமதி கமலா ஜெகதீஸ்வரசர்மாவின் பஜனைப் பாடலைத் தொடர்ந்து ஐஸ்வர்ய கலச பூசை, கூட்டுப்பிரார்த்தனை, தீட்சை வழங்குதல் என்பன இடம்பெறும். (1-236)

# உத்தியோகபூர்வ தேர்தல் முடிவை மதித்து நடக்க அரசியல் கட்சிகளுக்கு ஐ.நா.செயலர் கோரிக்கை

கொழும்பு, ஜன. 30

இலங்கையில் ஜனாதிபதித் தேர்தல் குறிப்பிடத்தக்க அளவுக்கு வன்முறையற்றதாக அமைந்தமை குறித்து ஆறுதல் வெளியிட்டுள்ள ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் பான் கீ-மூன் அரசியல் கட்சிகளிடம், உத்தியோகபூர்வ தேர்தல் முடிவுகளை மதித்து நடக்குமாறும் தங்களது கரிசனைகளுக்கு அமைதி வழியில் தீர்வு காணுமாறும் கோரியுள்ளார்.

நியூயோர்க்கில் ஐ.நா. தலைமையகத்தில் செய்தியாளர்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில் இதனைக் குறிப்பிட்டுள்ள பான் கீ-மூன் தேர்தலில் கடும் போட்டி இடம்பெற்றமையை உணர்கிறார் எனவும் தெரிவித்துள்ளார்.

தேர்தல் பிரசார காலத்தில் இடம்பெற்ற வன்முறைகளின் எண்ணிக்கைகள் குறித்து தான் கவலையடைந்துள்ளார் எனவும், கடந்த செவ்வாய்க்கிழமை நடந்த வாக்களிப்பில் சிறிய வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்ற போதிலும் குறிப்பிடத்தக்க அளவுக்கு அமைதியாக இடம்பெற்றமை குறித்து தாம் ஆறுதல் அடைகிறார் எனவும் தெரிவித்துள்ளார்.

நாட்டின் எதிர்காலத்தைக் கருத்தில்கொண்டு பொறுமையுடனும், பொறுப்புடனும் செயற்பட வேண்டிய தன் அவசியத்தை அனைத்துத் தரப்பும் உணர்ந்துகொள்வார்கள் என எதிர்பார்ப்பு வெளியிட்டுள்ள பான் கீ-மூன் இது எதிர்காலத் தேர்தலுக்கும், நாட்டின் ஒருமைப்பாட்டுக்கும் உகந்ததாக அமையும் என்றும் தெரிவித்துள்ளார். (அ-சி)

## நாளை

| | | |
|---|---|---|
| தை | 18 | 31.01.2010 |
| | | ஞாயிற்றுக்கிழமை |
| திதி: | | பிரதமை |
| | | மு.ப. 10.32 வரை |
| நட்சத்திரம்: | | ஆயிலியம் |
| | | மு.ப. 11.55 வரை |
| சுபநேரம்: | | 09.36-11.06 வரை |
| ராகுகாலம்: | | 05.06-06.66 வரை |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மூளாய் கூட்டுறவு வைத்தியசாலையில் இன்று மகப்பேற்று விடுதி திறப்பு

யாழ்ப்பாணம்.ஜன.30

மூளாய் கூட்டுறவு வைத்தியசாலை சங்கத்தில் இரத்தினம் அறக்கட்டளை நிதியத்தினரால் புனரமைக்கப்பட்ட மகப்பேற்று விடுதி இன்று சனிக்கிழமை பி.ப 3.30 மணிக்குத் திறந்துவைக்கப்படவுள்ளது.

சமாதான நீதிவான் விசுவநாதர் வேலுப்பிள்ளை தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதமவிருந்தினராக யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி அ.கேதீஸ்வரனும், சிறப்பு விருந்தினர்களாக போதனா வைத்தியசாலை மகப்பேற்று வைத்திய நிபுணர்களான அ.சிறிதரன், கே.சுரேஷ்குமார் ஆகியோர் கலந்துகொள்வர். (1-16)


**Computer Express**
Institute of Information Technology

மாணவர்களுக்கும், கணனி ஆர்வலர்களுக்கும், ஊழியர்களுக்கும் தொழில்சார் கணனிக் கற்கை நெறிகள் ஆரம்பமாகின்றன...

Duration:- 1week

**Diploma in Film Technology & Video Editing**

Adobe Photoshop, Cool 3D Studio, VCD Cutter, Capturing, Pinnacle Studio, Adobe Premiere — Internet & e mail

**Diploma in Hardware Engineering & Net working**

System Configuration, Hardware Devices Assembling, Repairing, Trouble Shooting Installation of Hardware & Software, Project Works — Internet & e mail

**Diploma in Graphic Designing & Adverdisement Marketing**

Photoshop, Macromedia Flash, Corel Draw, Cool 3d Studio — Internet & e mail

உறுதியானதும் ஸ்திரமுள்ளதுமான எதிர்காலத்தை வளமாக்கிக்கொள்ள இன்றே எம்நிறுவனத்துடன் இணைந்து மேற்காணும் கற்கை நெறிகளை கற்றுக்கொள்ளுங்கள்.

No 167, Kasthuriyar Road, Jaffna. T.P-021 2228250

Clsss start at 01.02.2010 - 09 Am




வடக்கு, கிழக்கு வாக்காளப் பெருமக்களுக்கு எனது பெருமார்ந்த நன்றிகள்


கடந்த ஜனாதிபதித் தேர்தலில் சரத் பொன்சேகாவுக்கு வாக்களித்த வடக்கு,கிழக்கு வாக்காளப் பெருமக்களுக்கும், எங்களுக்கு பெரும் ஒத்துழைப்பு தந்த தமிழ்க்கட்சிகளுக்கும் யாழ்.பல்கலைக்கழக மாணவ ஒன்றியத்துக்கும் பல்கலைக்கழக மாணவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

சா.சத்தியேந்திரா
யாழ்.மாவட்ட பிரதான ஐக்கிய தேசியக்கட்சி அமைப்பாளர்
26 B, சமிற் பிளட்ஸ், யாவத்த றோட், கொழும்பு-5
(சி/564511)


## துயர் பகிர்வு

யா/கலட்டி மெ.மி.தமிழ்க்கலவன் பாடசாலை இசை ஆசிரியை திருமதி வ.பாக்கியராஜா அவர்களது அன்புத் தாயார்

**நடராசா பரமேஸ்வரி**

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

இசை ஆசிரியர் கழகம், யாழ்.வலயம்.
(94361)

## நீங்காத நினைவுகளுடன்

௨ஆம் ஆண்டில் — மண்ணில் 08 ★ 06 ★ 1931 — மனதில் 22 ★ 01 ★ 2008



17ஆம் ஆண்டில் — மண்ணில் 26 ★ 08 ★ 1968 — மனதில் 03 ★ 01 ★ 1994



அமரர் **சின்னையா இராசதுரை**

அமரர் **இராசதுரை இராசேஸ்வரன்**

ஆயிரம் ஆண்டுகள் ஒடி மறைந்தாலும்
ஆறாது எம் மனம் அழியாது உம் உருவம்
தேறாது நாங்கள் தேம்பி அழுதாலும்
தேடி எம்மிடம் வந்துவிடமாட்டீரோ
உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்...

நாவற்காடு, அச்சுவேலி. (94363) உங்கள் நினைவில் வாழும், குடும்பத்தினர்.


## சாரங்கன் தொழிலகம்

இன்று 30.01.2010 சனிக்கிழமையிலிருந்து எமது தொழிலகத்தில் உடைந்த சகல விதமான வாகன பிளாஸ்ரிக் பொருள்கள் உரிய முறையில் ஒட்டிக்கொடுக்கப்படும்,அத்துடன் சகல விதமான பூச்சாடிகள்,டிசையின் பூக்கறள்கள், தூக்குக்கல் போன்றவற்றை எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.

சாரங்கன் பிளாஸ்ரிக் கட்டட தொழிலகம்
கண்டி வீதி, மீசாலை சந்தி, சாவகச்சேரி.
(சி/564512) தொ.பே-0712733487

## சுய தொழில்...

சுயதொழில் ஒன்றை ஆரம்பிக்க இருக்கும் உங்களுக்கு பூபதி காட்சியறையில்......

தொடர்பு: 0777427777 (சி/564519)

## அச்சகத்திற்கு உடன் தேவை

பைண்டிங் வேலை செய்யக்கூடிய 2பேருக்கு வேலை வாய்ப்புண்டு. நேரடியாக வரவும்.

மாருதி ஒப்செற் பிறிண்டர்ஸ்
நெல்லியடி ம.ம.வி.வீதி, நெல்லியடி.
(C/564517)

## எழுதுவினைஞர் தேவை

சாரதி பயிற்சிப் பாடசாலைக்கு ஆங்கிலத்தில் தேர்ச்சி பெற்ற பெண் எழுதுவினைஞர் தேவை.

தொடர்புகளுக்கு:

கிருபா லேணர்ஸ், 226,கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 077 7225292, 0212224353 (94361)

## வேலையாள்கள் தேவை

காசாளர், ரீ மேக்கர், சப்பிளையர் (உணவு பரிமாறுபவர்) தேவை. உடன் தொடர்பு கொள்ளவும்.

ராஜா கிறீம் ஹவுஸ் & ஹோட்டல்
46, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(சி/564512)

## தவறிவிட்டது

குழுக்கண்டி ஒழுங்கை, கட்டப்பிராய் என்னும் முகவரியுடைய சிவசுப்பிரமணியம் மதிவதனி என்பவரது தே.அடையாள அட்டை (806173193V). கடந்த 9.11.2010அன்று சிவப்பு நிறப்பையுடன் உடுவிலுக்கும், திருநெல்வேலிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் பின்வரும் விலாசத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

வெள்ளவிநாயகர் வெதுப்பகம்,
(94348) G.P.Sவீதி, கல்வியங்காடு.T.P No: 0214901447


## அல்லாரை முன்பள்ளி கால்கோள் விழா

யாழ்ப்பாணம்.ஜன.30

கொடிகாமம் அல்லாரை ஐங்கரன் முன்பள்ளி நிறுவுநர் தினவிழாவும் கால்கோள் விழாவும் இன்று மு.ப 10மணிக்கு ஐங்கரன் முன்பள்ளி மண்டபத்தில் இடம் பெறவுள்ளன.

முன்பள்ளி அபிவிருத்திச் சங்கத் தலைவர் ஜெ.சிவபாதசுந்தரம் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் தென்மராட்சிப் பிரதேசசபைச் செயலர் வே.சிவராஜலிங்கம் பிரதம விருந்தினராகவும், தென்மராட்சிக் கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் (முன்பள்ளி) சு.பாக்கியராஜா, தென்மராட்சிப் பிரதேச சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி செ.ஜெகதீசன், அல்லாரை அ.த.க. பாடசாலை அதிபர் க.யோகராஜா ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்வர். இந்த நிகழ்வில் சிறுவர் வரவேற்பு, ஏடு தொடக்கல், சிறுவர்களின் நடன நிகழ்வு என்பன நடைபெறவுள்ளன. (ஒ-207-14)

## பொறியியலாளர் சங்கப் பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம்.ஜன.30

இலங்கைப் பொறியியலாளர் சங்கத்தின் வருடாந்தப் பொது கூட்டம் இன்று சனிக்கிழமை மு.ப 9.30 மணிக்கு யூரோவில் மாநாட்டுமண்டபத்தில் நடைபெறவுள்ளது.பொறியியலாளர் சங்கத் தலைவர் இ.முத்துரட்ணானந்தன் தலைமையில் நடைபெறவுள்ள இக் கூட்டத்தில் வடமாகாண பொறியியலாளர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (04-16)

## வீட்டுக்கிருத்திய அழைப்பு

தோற்றம் 12 . 03 . 1924



மறைவு 31 . 12 . 2009

### அமரர் ஆறுமுகம் மார்க்கண்டு

கடந்த 31.12.2009 அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பத்தலைவரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு இன்று (30.01.2010) சனிக்கிழமை எமது இல்லத்தில் மு.ப 11.00 மணியளவில் நடைபெறும். இந்நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

113/1, பாரதி வீதி, கச்சேரி, யாழ்ப்பாணம். (94356) குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்

### மாணிக்கம் முத்தம்மா



சித்தன்கேணியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட மாணிக்கம் முத்தம்மா 27.01.2010 அன்று சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பேரம்பலம், மற்றும் நல்லம்மா, சின்னம்மா, பரமேஸ்வரி, தங்கராசா ஆகியோரின் பாசமிகு சகோதரியும், சரஸ்வதி, சின்னத்துரை, சண்முகம்,கிருஷ்ணமூர்த்தி, மனோன்மணி ஆகியோரின் மைத்துனியும், நல்லமுத்து (புஸ்பம்), தெய்வேந்திரம், இராசேந்திரம், ஞானேந்திரன், புலேந்திரன், இந்திரா, இராயேஸ்வரி, சற்குணம், குணரத்தினம் ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற கனகசபை மற்றும் அரியமலர், அகிலேஸ்வரி, ரஞ்சினி, நாகேஸ்வரி, பாலச்சந்திரன், கருணாகரன், சியாமளாதேவி, சாந்தினி ஆகியோரின் மாமியாரும், சிறிதரன், ஜெயகாந்தன், கலாஜினி, துஷாஜினி, கலியுகதாசன், டிறோசன், நிறோசன், துஷியந்தன், தர்சனா, கபிஷனா, தாரணி, தணியச்செல்வி, கனிஸ்ரிகா, சாயிதா, கிருஷாந், பிரசாந், மாருணா, கயானன், வேணுஜன், லோஜனா, நிறோசன், லோஜினி ஆகியோரின் செல்வப் பேர்த்தியும், மதிஷனின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (31.01.2010) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று மு.ப11 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக விளாவெளி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கீரிமலை வீதி, சித்தன்கேணி. (94354) குடும்பத்தினர்.

### பொன்னம்பலம் நடனசபாபதி (புகையிலை வர்த்தகர்)

மண்டைத்தீவு, 6ஆம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும் 29, கஜபா பிளேஸ், கிருளப்பனையை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் நடனசபாபதி நேற்று முன்தினம் (28.01.2010) வியாழக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் - காசுபதி தம்பதியினரின் மகனும். காலஞ்சென்றவர்களான நாகநாதர் - செல்லம்மா தம்பதியினரின் மருமகனும் காலஞ்சென்ற சிவபாக்கியத்தின் கணவரும். சிவசக்தியின் அன்புத்தந்தையும் லிங்கநாதனின் மாமனாரும். அரிசூதனாவின் பேரனும். தையலம்மா காலஞ்சென்றவர்களான கனகம்மா, சிவஞானசுந்தரம், கண்மணி, செகராஜசேகரம், புவனேஸ்வரி ஆகியோரின் சகோதரனும். காலஞ்சென்ற திருநாவுக்கரசு மற்றும் மகேஸ்வரி, ஜெயலட்சுமி ஆகியோரது மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.01.2010) சனிக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் கொழும்பில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

தகவல்:
குடும்பத்தினர்
29, கஜபா பிளேஸ்.கிருளப்பன,கொழும்பு. T.P. 0114928247 (94355)
359/ 34, நல்லலேட்சுமி எவேனியூ, கோயில் வீதி,நல்லூர்.


## வரலாறு எம்மை விடுதலை செய்யட்டும்

2010 ஜனாதிபதித் தேர்தலும் அதுவிட்டுச்செல்லும் பாடங்களும்

பொதுக் கூட்டமும் கலந்துரையாடலும்

தலைமை: ந. தமிழ்அழகன்

சிறப்புரை:

கரு. பரணவிதாரன
ஸ்ரீ லங்கா குடிமகினி கூட்டுத்தான நிறைவேற்று அதிகாரி

முருகுப்பிள்ளை ஸ்ரீபதி
யாழ். பல்கலைக்கழக பேரவை உறுப்பினர்

செல்வி கோசலை மனோகரன்
சட்டத்தரணி

மனோரஞ்சன்
சமூக ஆய்வியலாளர்

யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்க மண்டபம்

ஞாயிறு 31 3:00 - 6:00

(சி/564516)

குடிமக்கள் குரலுக்கான மேடை - Forum For Citizen's Voice


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# ‘தமிழ்ப்பண்பாடு இன்றும் நிலைத்திருக்கும் யாழ்ப்பாணத்தில் நடன நிகழ்வைச் செய்வது மனதுக்கு ஆனந்தத்தைத் தருகிறது’

## - இந்திய நடனக் கலைஞர் ஸ்ரீதர்



நேர்காணல்: ஆ.பிரியந்தினி

குடாநாட்டில் நடன நிகழ்வுகளை நடத்துவதற்கு வருகைதந்திருந்த பரதநாட்டியக் கலைஞரான ஸ்ரீதர் தன்னுடைய யாழ்.விஜய அனுபவங்களையும், நாட்டிய நுட்பங்களையும் உதயன் வாசகர்களுடன் இங்கு பகிர்ந்துகொள்கிறார்.

**கேள்வி:** நீங்கள் ஒரு சமாதானச் சூழலில் இலங்கை வந்துள்ளீர்கள். இக் காலப்பகுதியில் இங்கு வந்து நடன நிகழ்வுகளை நிகழ்த்துவது பற்றி என்ன நினைக்கின்றீர்கள்?

**பதில்:** என்னைப்பொறுத்தவரையில் இலங்கை என்பது எனக்கு ஒரு வேறு நாடாகத் தெரியவில்லை. இந்தியாவின் வடபகுதி அல்லது தென்பகுதிக்குச் சென்றது போல ஓர் உணர்வுதான். இராமாயண காலம் தொடக்கம் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் உள்ள உறவு தொடர்ந்த வண்ணம் உள்ளது. மேலும் இலங்கை மக்கள் இந்தியப்பண்பாட்டை அறிந்தவர்களாகவும் அதனைப் பேணுபவர்களாகவும் உள்ளனர். எனவே இவ்வாறான ஓர் இடத்திற்கு அதுவும் தமிழ்ப் பண்பாடு உள்ள யாழ்ப்பாணத்தில் நிகழ்வுகள் செய்வது எனக்கு மிகவும் மகிழ்வாக இருந்தது.

**கேள்வி:** இலங்கை வந்த போது தங்களுக்கான வரவேற்பு எவ்வாறு இருந்தது?

**பதில்:** இலங்கையின் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் இந்தியத் தூதரகம் எம்மைச் சிறப்பாக வரவேற்றது. இந்தியாவில் கூட இந்த அளவில் சட்டரீதியான அமைப்புக்களிடம் இருந்து வரவேற்பு கிடைப்பது அரிது. ஆனாலும் இந்திய தேசத்திற்கு வெளியே இவ்வாறான வரவேற்பு எனக்கு மிகுந்த உற்சாகத்தைத் தந்துள்ளது.

**கேள்வி:** இலங்கை மக்களின் கலை ரசனை மற்றும் ரசிகர்களிடம் இருந்து



உங்களுக்கு எவ்வாறான வரவேற்புக் கிடைத்தது?

**பதில்:** என்னைப் பொறுத்தவரையில் இலங்கை மக்கள் எங்கள் பரதநாட்டியத்தில் அதிக ஆர்வம் காட்டி வருகின்றார்கள். கொழும்பில் உள்ள ‘கலாஷேத்ரா’ நல்ல எடுத்துக் காட்டு. மேலும் இலங்கை மாணவர்கள் பரத நாட்டியத்தை முழு ஈடுபாட்டுடன் பயில் வதைப் பார்க்கும்போது மிகவும் பெருமையாக உள்ளது. மகாத்மா காந்தியைப் பற்றி இந்தியர்கள் ஆய்வு செய்ததை விட வெளிநாட்டவர்களே அதிகம் ஆய்வு செய்தார்கள் என்பது அனைவருக்கும் தெரியும்.

அது போல எமது பாரதப் பண்பாட்டில் வெளிநாடுகளில் உள்ளவர்கள் காட்டும் ஆர்வம், பற்று என்னை மெய்சிலிர்க்க வைக்கின்றது.

மேலும் யாழ்ப்பாணத்தில் பரத நாட்டியம் பயிலும் மாணவர்கள் என்னைச் சந்தித்து உரையாடினார்கள். அவர்கள் வெறும் வார்த்தை அளவில் மட்டுமல்லாமல் ஓர் உணர்ச்சிபூர்வ முகபாவத்துடன் எமது நடன நிகழ்வுகளைப் பாராட்டிப் பேசும் போது அவ்வார்த்தைகள் என் ஆழ்மனதைத் தொட்டு என்னைப் பரவசப்படுத்தின.

**கேள்வி:** தங்களுடைய நாட்டியம் எவ்வகையான மரபுகளைப் பின்பற்றுகின்றது?

**பதில்:** எமது பரத நாட்டியம் பாரம்பரியத்தை அடிப்படையாகக் கொண்டது. நான் கர்நாடகாவைச் சேர்ந்தவனாயினும் சென்னைக் கலாஷேத்ராவில் நாட்டியத்தைப் பயின்றேன். அங்கு பந்தநல்லூர் மரபு பின்பற்றப்பட்டது. ஆனால் இன்று கலாஷேத்ரா மரபு பின்பற்றப்படுகின்றது. நடனக் கலை என்பது ஒரு நதியினைப் போல் பல மாற்றங்களையும் திருப்பங்களையும் கொண்டது. இவ்வாறு தஞ்சாவூர் மரபு, பந்தநல்லூர் மரபு, கலாஷேத்ரா மரபு என்று காலத்திற்கு ஏற்ப மாறிக் கொண்டிருப்பது தவிர்க்க முடியாத ஒன்று.

**கேள்வி:** தங்களுடைய நடன நிகழ்வுகள் தனித்துக் கலை அம்சங்கள் மட்டுமே வெளிப்படுத்துகின்றனவா அல்லது சமுதாய நோக்கோடு வேறு பல அம்சங்களையும் உள்ளடக்கியுள்ளனவா?

**பதில்:** நிச்சயமாக எமது நடன செயற்பாடுகளில் சமூகப் பிரச்சினைகளும் முன்வைக்கப்பட்டுள்ளன. குறிப்பாகப் பெண்கள் தொடர்பாக அன்றைய பெண்களுக்கும் இன்றைய பெண்களுக்கும் இடையேயான மாற்றம் அது தொடர்பான முரண்பாடுகளையும் முன்வைத்து நடன நிகழ்வுகள் நடத்தி இருக்கின்றோம். நாம் நடனத்தைத் தனித்து ஒரு கலை என்று நோக்காமல் வேதசாஸ்திர மரபுகளுடன் தொடர்பு படுத்தி ஓர் ஆழ்ந்த பார்வையில் முழுமையாக நோக்குகின்றோம்.

**கேள்வி:** நீங்கள் இலங்கை தவிர வேறு எந்த நாடுகளில் தங்கள் கலைப் பணியை மேற்கொண்டீர்கள்?

**பதில்:** பல நாடுகளுக்குச் சென்றுள்ளோம். குறிப்பாக அமெரிக்கா, லண்டன், ஜேர்மனி, சுவிஸ், பிரான்ஸ் சிங்கப்பூர் போன்றவற்றைக் குறிப்பிடலாம். அங்கு எமது பாரதப்பண்பாட்டை வெளிப்படுத்தியது மனத்திற்கு ஒரு பசுமையான நிகழ்வாயும் உவப்பாயும் உள்ளது.

**கேள்வி:** இவ்வாறு வேறு பாரம்பரியம் கொண்ட நாடுகளில் நடன நிகழ்வு செய்யும் போது தங்களுடைய அனுபவம் மற்றும் அம்மக்களிடம் கிடைத்த வரவேற்பு எவ்வாறு இருந்தது?

**பதில்:** அவர்கள் வேறு பண்பாடு கொண்டவர்களாக இருந்தாலும் எமது நிகழ்வுகளை மிகவும் ஆர்வத்துடன் ரசித்தனர். அங்கு சென்றும் நாங்கள் எமது பாரம்பரிய உடையிலேயே இருந்தோம்.அதனால் எமது இந்தியப் பண்பாட்டை சிறப்பாகக் கூறி எம் மக்கள் எமக்கு நல்ல வரவேற்பை அளித்தார்கள்.

**கேள்வி:** இவ்வாறான தங்களின் வெளிநாட்டுப் பயணத்தின் போது ஏதாவது மறக்க முடியாத அனுபவங்கள் ஏற்பட்டனவா?

**பதில்:** ஆம் ஒரு தடவை பிரான்ஸில் எமது நடன நிகழ்வுகளை ஒழுங்கு படுத்தி இருந்தோம்.அங்கு ரசிகர்களின் ஞாபக ஏட்டில கையெழுத்து இட்டபோது நான் வழமை போல ஆங்கிலத்தில் இட்டேன். ஆனால் அங்கு ஒரு ரசிகர் கேட்ட கேள்வி என்னை வியப்பில் ஆழ்த்தியது. அதாவது ‘‘நீங்கள் ஆங்கிலேயர் அல்ல, அவ்வாறான போது ஏன் ஆங்கிலத்தில் கையொப்பம் இட்டீர்கள்?’’ என்றார். நான் உடனடியாக அவரிடம் மன்னிப்புக் கோரிப் பின் சமஸ்கிருதத்தில் கையொப்பம் இட்டேன். இது மறக்க முடியாத ஒரு சந்தர்ப்பம்.

**கேள்வி:** இறுதியாக இந்தியாவின் தொப்புள் கொடி உறவான இலங்கை மக்களுக்கு நீங்கள் என்ன சொல்ல விரும்புகின்றீர்கள்?

**பதில்:** இலங்கை மிகவும் அழகான நாடு. நகர மயமாக்கம் ஏற்பட்டாலும் அதனுடைய இயற்கை மாறவில்லை. இலங்கை மக்கள் வரவேற்கும் பண்பாடுகள் கொண்டவர்கள். இவர்கள் கல்வியறிவு, பண்பாடு என்பவற்றில் உயர் நிலையில் உள்ளனர். இந் நிலை தொடர்ந்து சமாதானம் நிலவி நாடு மேலும் அபிவிருத்தியடைய எனது வாழ்த்துக்கள்.

**படங்கள்: சுகந்தன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவுக்குள் ஆயுதங்களுடன் புலிகளின் முக்கிய தளபதிகள்?

## உளவுத் துறை எச்சரிக்கை

டில்லி, ஜன. 30

விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த முக்கிய தளபதிகள் ஆயுதங்களோடு இந்தியாவிற்குள் வந்திருக்கின்றனர் - என்று மத்திய உளவுத் துறை தெரிவித்துள்ளது.

பழைய போதைப்பொருள் கடத்தல் வழக்கில் பொலிஸாரால் தேடப்பட்டு வந்தவர் இராமேஸ்வரம் கிழக்குக் கடைப் பகுதியைச் சேர்ந்த செல்வகுமார் (வயது - 27) என்கிற ஜீவா.

இவர் குண்டுகள் கடத்த முயற்சி செய்கிறார் எனவும், கூட்டாளிகளுடன் கீழக்கரை பகுதியில் முகாமிட்டு இருக்கிறார் எனவும் இராமநாதபுரம் கியூப் பிரிவுப் பொலிஸாருக்கு ரகசியத் தகவல் கிடைத்தது.

இந்நிலையில், கடந்த செவ்வாய்க்கிழமை இராமநாதபுரம் மாவட்டம் கீழக்கரையில் இருந்து ஏர்வாடி செல்லும் வழியில், இண்டிகா கார் ஒன்றை பொலிஸார் சோதனையிட்ட போது ஜீவா பிடிபட்டார்.

அவருடன் இருந்த இராமநாதபுரத்தைச் சேர்ந்த பழனிக்குமார் (வயது - 35), ராஜா (வயது - 25), கீழக்கரை கலீல் ரகுமான் (வயது - 39) ஆகியோரையும் பொலிஸார் கைது செய்தனர். நான்கு பேரும் ராமநாதபுரம் முதலாவது குற்றவியல் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு மதுரை மத்திய சிறையில் அடைக்கப்பட்டனர்.

பொலிஸார் இவர்களிடம் விசாரணை மேற்கொண்டபோது பல்வேறு அதிர்ச்சித் தகவல்கள் வெளியாகின. போதைப் பொருள் கடத்தல் தொடர்பாகப் பல வழக்குகளில் சம்பந்தப்பட்டுள்ள ஜீவாவிடம் பொருள்களை பதுக்கி வைத்திருக்கும் இடம் குறித்து பொலிஸார் விசாரித்தனர்.

ஜீவா அளித்த தகவலின்பேரில் இராமேஸ்வரத்தில் உள்ள ஓரிடத்தில் பொலிஸார் சோதனை நடத்தியபோது ரூபா 8 லட்சம் அளவுக்கு இந்திய நோட்டுகள் கண்டுபிடிக்கப்பட்டன. மேலும் பல கோடி மதிப்புள்ள அரை கிலோ ஹெரோயினையும் பொலிஸார் பறிமுதல் செய்தனர். அதோடு முடிந்துவிடும் என பொலிஸார் நினைத்த போது வெடி மருந்து மற்றும் நவீன துப்பாக்கி, தோட்டாக்களும் அங்கு சிக்கின. இதனால் பொலிஸாருக்கே அதிர்ச்சி ஏற்பட்டது.

கூடவே செய்மதித் தொலைபேசி ஒன்றும் கிடைக்கவே இந்த விவகாரம் வேறு மாதிரியானது என்பதை உணர்ந்த பொலிஸார், உளவுப் பிரிவின் தலைமைக்கு தகவல் தந்தனர்.

இதையடுத்து ஜீவாவிடம் உளவுப் பிரிவினர் துருவித் துருவி விசாரித்தனர்.

அப்போது, கடந்த டிசெம்பர் 24ஆம் திகதி விடுதலைப் புலிகள் அமைப்பைச் சேர்ந்த ஒரு ஆண் மற்றும் பெண்ணை இராமேஸ்வரம் அருகே நடுக்கடலில் இருந்து படகில் அழைத்து வந்தேன். கரைக்கு வந்ததும் தயாராக இருந்த கார் ஒன்றில் அவர்கள் இருவரும் சென்று விட்டார்கள். அவர்களிடம் இருந்துதான் இவற்றை வாங்கினேன்.

ஆனால் அவர்கள் எங்கே சென்றார்கள், எதற்காக தமிழகம் வந்தார்கள் என்பதெல்லாம் எனக்குச் சுத்தமாகத் தெரியாது என ஜீவா கூறினார். மேலும் இலங்கையில் போர் முடிவுக்கு வந்த பின்னர் இதுபோல பலமுறை ஏராளமான விடுதலைப் புலிகளை அழைத்து வந்து விட்டுள்ளார் எனவும் ஜீவா கூறவே, மத்திய உளவுப் பிரிவையும் தமிழகப் பொலிஸார் உடனே எச்சரித்தனர்.

விடுதலைப் புலிகள் தமிழகத்திற்கு தப்பி வந்ததை பொலிஸாரும் உளவுப் பிரிவினரும் பெரிதாகக் கருதவில்லை என்றாலும் அவர்கள் ஆயுதங்களோடு வந்திருக்கின்றனர் எனத் தகவல் கிடைத்திருப்பதுதான் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இலங்கை போரில் விடுதலைப் புலிகளின் வீழ்ச்சிக்கு இந்திய அரசு தான் காரணம் என்ற குற்றச்சாட்டு வலுவாக உள்ளது. இந்த விடயத்தில் காங்கிரஸ் தலைவர் சோனியா, முன்னாள் பாதுகாப்பு ஆலோசகர் எம்.கே. நாராயணன், தமிழக முதல்வர் கருணாநிதி, மத்திய உள்துறை அமைச்சர் சிதம்பரம் என பலர் தனிப்பட்ட முறையில் கடுமையான விமர்சனத்துக்கு ஆளாகியுள்ளனர்.

இந்நிலையில் விடுதலைப் புலிகள் இயக்கத்தை சேர்ந்தவர்கள் ஆயுதங்களுடன் இந்தியாவுக்குள் நுழைந்துள்ளதாக கிடைக்கும் தகவல் உளவுத்துறை அதிகாரிகளை கிடுகிடுக்கச் செய்துள்ளது.

பாதுகாப்பு நடவடிக்கைகளை பலப்படுத்த சம்பந்தப்பட்டவர்களுக்கு உத்தரவுகள் பறந்துள்ளன.



பீகாரில் நேற்றுமுன்தினம் லாலுபிரசாத் தலைமையில் நடந்த முழு அடைப்புப் போராட்டத்தின் போது....

# இலங்கை ஜனாதிபதித் தேர்தல் முடிவு: மண்டபம் முகாம் அகதிகள் அதிர்ச்சி!

மண்டபம், ஜன. 30

ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷ மீண்டும் வெற்றி பெற்றுள்ளதால், இலங்கையில் இனித் தமிழர்கள் நிம்மதியாக வாழமுடியாது. ஜனாதிபதித் தேர்தலில் மாற்றம் ஏற்பட்டால் இலங்கை செல்லலாம் என எண்ணியிருந்தோம். இப்போது அது கனவாகிவிட்டது. இனி எங்கள் எதிர்காலத்தை எப்படி எதிர்நோக்குவது எனத் தெரியவில்லை.

- இவ்வாறு மண்டபம் அகதிகள் முகாமில் வசிக்கும் தமிழர் கவலை தெரிவித்துள்ளனர்.

மஹிந்த ராஜபக்ஷவின் வெற்றி குறித்து மேலும் அவர்கள் கூறியவை வருமாறு -

மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்தபோது இலங்கையில் தமிழர்கள் மீது நடந்த தாக்குதல்களை யாரும் மறக்க முடியாது. முள்வேலி முகாமில் தமிழர்களை அடைத்து வைத்து விட்டு, தமிழர்களின் குடியிருப்புகளில் சிங்களவர்கள் குடியமர்த்தப்பட்டனர்.

ஜனாதிபதித் தேர்தலில் மாற்றம் ஏற்பட்டால் இலங்கை செல்லலாம் என எண்ணியிருந்தோம். இப்போது அது கனவாகிவிட்டது. இனி எங்கள் எதிர்காலத்தை எப்படி எதிர்நோக்குவது எனத் தெரியவில்லை - என்றனர்.

# தேர்தலில் மஹிந்த வெற்றியீட்டியதால் மீனவரின் வாழ்வாதாரம் கேள்விக்குறி?

மண்டபம், ஜன. 30

இலங்கை ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷ வெற்றி பெற்றுள்ளமையால் தமிழக மீனவர்கள் வாழ்வதாரம் பாதிப்படையும் சூழல் ஏற்பட்டுள்ளது என்று தமிழக மீனவர்கள் அச்சம் தெரிவித்துள்ளனர்.

விடுதலைப் புலிகளுடன் இராணுவம் போர் புரிந்த சூழலில், தமிழக கடல் மார்க்கமாக புலிகளுக்கு ஆயுதங்கள், வெடிபொருட்கள் கடத்தப்படுகின்றன எனக் கூறி தமிழக மீனவர்கள் மீது துப்பாக்கிச் சூடு, தாக்குதல்களை இலங்கை கடற்படையினர் நடத்தி வந்தனர்.

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனை சுட்டுக் கொன்று விட்ட பின்னரும் தமிழக மீனவர்கள் மீதான தாக்குதல்கள் தொடர்ந்தன.

இந்நிலையில், ஜனாதிபதித் தேர்தலில் மீண்டும் ராஜபக்ஷ வெற்றி பெற்றுள்ளதால், இலங்கைக் கடற்படையும் ரோந்து என்ற பெயரில் மீனவர்கள் மீது மீண்டும் தாக்குதலை நடத்தும். இதன் மூலம் தமிழக மீனவர்களின் வாழ்வாதாரமான மீன்பிடித் தொழில் பாதிப்படையும் சூழல் ஏற்படும் என தமிழக மீனவர்கள் அச்சம் தெரிவித்துள்ளனர்.

# மத்திய - மாநில அரசுகளைக் கண்டித்து பீகாரில் முழு அடைப்பு; துப்பாக்கிச் சூடு

## லாலு பிரசாத் - அவரது மனைவி ராப்ரிதேவி கைது

பாட்னா, ஜன. 30

பீகாரில் நேற்றுமுன்தினம் நடந்த முழு அடைப்புப் போராட்டத்தால் வர்த்தக மற்றும் கல்வி நிறுவனங்கள் மூடப்பட்டன. பஸ் - ரயில் போக்குவர்த்துகள் தடைப்பட்டன.

இதனால் பீகாரில் நேற்றுமுன்தினம் மக்களின் இயல்பு வாழ்க்கை கடுமையாக பாதிக்கப்பட்டது. லாலு பிரசாத், அவரது மனைவி ராப்ரிதேவி ஆகியோர் சிறிது நேரம் பொலிஸ் காவலில் வைக்கப்பட்டனர்.

விலைவாசி உயர்வை கட்டுப்படுத்த தவறிய மத்திய - மாநில அரசுகளை கண்டித்து பீகாரில் நேற்றுமுன்தினம் 12 மணி நேர முழு அடைப்புப் போராட்டத்துக்கு ராஷ்டீரிய ஜனதா தள தலைவர் லாலு பிரசாத் மற்றும் அவரது மனைவியும் முன்னாள் முதல்வருமான ராப்ரிதேவியும் அழைப்பு விடுத்து இருந்தனர். இந்த போராட்டத்துக்கு இடதுசாரிகளும் ஆதரவு தெரிவித்து இருந்தனர்.

முழு அடைப்புப் போராட்டத்தை முறியடிக்க மாநில அரசு பலத்த பாதுகாப்புக்கு ஏற்பாடு செய்திருந்தது. இதில் அசம்பாவித சம்பவங்கள் நடைபெறாமல் தடுக்கும் வகையில் மாநில அரசு முன் எச்சரிக்கை நடவடிக்கையாக லாலுபிரசாத் கட்சியை சேர்ந்த 6500 தொண்டர்களைக் கைது செய்து சிறையில் அடைத்தது.

முழு அடைப்பால் நேற்றுமுன்தினம் மாநிலத்தில் உள்ள அனைத்து கடைகள், வர்த்தக நிறுவனங்கள் மற்றும் கல்வி நிறுவனங்கள் முழுமையாக அடைக்கப்பட்டிருந்தன.

மாநிலம் முழுவதும் பஸ் மற்றும் ரயில் போக்குவரத்து கடுமையாகப் பாதிக்கப்பட்டது. தனியார் வாகனங்களும் ஓடவில்லை. முக்கிய வீதிகளில் தடை ஏற்படுத்தப்பட்டது. பல்வேறு கடைகள் உடைக்கப்பட்டு பொருள்கள் சூறையாடப்பட்டன.

போராட்டக்காரர்கள் முஸார்பூர், சித்மஹரி, டர்பங்கா, வைசாலி, கிழக்கு மற்றும் மேற்கு சாம்பரன் ஆகிய தேசிய நெடுஞ்சாலைகள் மற்றும் இந்தியா - நேபாள் எல்லைப் பகுதியில் டயர்களை போட்டு தீவைத்து எரித்து போக்குவரத்தைத் தடை செய்தனர். வீதிகளில் சென்ற வாகனங்கள் மீது கற்களை வீசி போராட்டக்காரர்கள் கலவரத்தில் ஈடுபட்டனர்.

இதைத்தொடர்ந்து கிழக்கு சிதம்பரன் மாவட்ட பொலிஸார் போராட்டக்காரர்களை கலைக்கத் தடியடி நடத்தினர். ஆனாலும் கூட்டம் கலையாததால் பொலிஸார் துப்பாக்கிச் சூடு நடத்தினர். இதைத் தொடர்ந்து போராட்டக்காரர்கள் கலைந்து ஓடினர்.

### தமிழகத்தில் எய்ட்ஸ் நோயாளிகள் இரண்டரை லட்சத்தைத் தாண்டினர்

தமிழகத்தில் இரண்டரை லட்சம் எய்ட்ஸ் நோயாளிகள் உள்ளனர் - என்று மாநில சுகாதாரம் மற்றும் குடும்ப நலத் துறை முதன்மைச் செயலர் வி.கே.சுப்புராஜ் தெரிவித்தார்.

தேசிய குழந்தைகள் உரிமைகள் பாதுகாப்பு ஆணையத்தின் தலைவர் சாந்தா சின்கா கடந்த வியாழக்கிழமை செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது அங்கிருந்த சுப்புராஜ் இது குறித்து கூறியவை வருமாறு-

தமிழகத்தில் எச்.ஐ.வி. மற்றும் எய்ட்ஸில் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 2005 இல் 1.25 சதவீதமாக இருந்தது. தமிழக அரசின் நடவடிக்கைகள் காரணமாக அது இப்போது 0.25 சதவீதமாக குறைந்துள்ளது.

இந்தியா முழுவதும் 25 லட்சம் எய்ட்ஸ் நோயாளிகள் உள்ளனர். தமிழகத்தில் 2.5 லட்சம் அதாவது 10 சதவீத எய்ட்ஸ் நோயாளிகள் உள்ளனர்.

ஆயிரம் குழந்தைகள் இந்நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். எய்ட்ஸ் நோயால் பாதிக்கப்பட்டுள்ள குழந்தைகளைப் பாதுகாக்க இந்தியாவிலேயே முதன் முறையாக ரூ. 5 கோடியில் நிதியம் ஒன்றைத் தமிழக அரசு உருவாக்கி உள்ளது. அதன் மூலம் பல்வேறு உதவிகள் செய்யப்பட்டு வருகின்றன. இந்தத் தொகையை ரூபா 25 கோடியாக அதிகரிக்க அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது - என்றார்.

## இந்தியச் செய்திகள்

### தெலுங்கானாவை எதிர்த்து காங். தொண்டர் தற்கொலை

ஆந்திரப் பிரதேச மாநிலம் காக்கிநாடா ரயில் நிலையம் அருகில், காங்கிரஸ் தொண்டர் ஒருவர் ரயிலில் விழுந்து தற்கொலை செய்து கொண்டார்.

இதுபற்றி தகவல் கிடைத்து, சம்பவ இடத்திற்கு சென்ற பொலிஸார் அவரின் சட்டைப் பையில் இருந்து கடிதம் ஒன்றை பறிமுதல் செய்தனர்.

அதில், ஆந்திர முன்னாள் முதல்வர் ராஜசேகர ரெட்டி மறைவுக்கு பின் ஆந்திராவின் பிரிவினை எனக்கு கவலை அளிக்கிறது எனவும், ஒன்றுபட்ட ஆந்திர மாநிலத்திற்காக தற்கொலை செய்கிறார் எனவும், இது தனது சொந்த முடிவு என்றும் எழுதப்பட்டிருந்தது.

# இந்தியாவுக்கு அச்சுறுத்தலாக இருக்கும் மதவாதம், தீவிரவாதத்தை முறியடிக்குக!


## பிரதமர் மன்மோகன் சிங் பேச்சு

இந்தியாவின் வளர்ச்சிக்கு அச்சுறுத்தலாக இருக்கும் மதவாதத்தையும், தீவிரவாதத்தையும் தோற்கடிக்க வேண்டும் - என்று பிரதமர் மன்மோகன் சிங் தெரிவித்தார்.

குடியரசு தினத்தை முன்னிட்டு நடந்த அணிவகுப்பில் தேசிய மாணவர் படையின், முகாம் திரும்பும் நிகழ்ச்சி டில்லியில் நேற்று நடந்தது. அந்த விழாவில் பிரதமர் மன்மோகன் சிங் பங்கேற்று அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக் கொண்ட பின்னர் உரையாற்றியபோது மேற்கண்டவாறு கூறினார்.

இந்தியாவின் உள்ளேயும் வெளியேயும் சட்டவிரோத தீவிரவாத சக்திகள் செயற்பட்டு வருகின்றன. இந்தியாவின் வளர்ச்சி மற்றும் நலனுக்கு அச்சுறுத்தலாக அவை உள்ளன - என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சுன்னாகம் காங்கேசன்துறை வீதியில் சிங்கர் நிறுவனத்தின் புதியகிளை அண்மையில் திறந்து வைக்கப்பட்டபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை. இந்த நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும், சிங்கர் நிறுவன வர்த்தக முகாமையாளர் குமார்சமரசிங்க மங்கள விளக்கேற்றுவதையும் முதல் இரண்டு படங்களிலும் முகாமைத்துவப் பணிப்பாளர் ஹேமக்க அமரசூரியா நாடாவெட்டிக் கிளையைத் திறந்து வைப்பதையும் வியாபார நடவடிக்கைகளை முகாமைத்துவப் பணிப்பாளர் அமரசூரியா ஆரம்பித்து வைப்பதையும் அடுத்துவரும் படங்களிலும் காணலாம். (படங்கள்: நேசன்)

# ஆழ்கடல் தொழிலுக்குப் பயன்படுத்தப்படும் வள்ளத்தை மயிலிட்டி துறைமுகத்தில் கட்ட அனுமதிக்கக் கோரிக்கை

## கடற்றொழிலாளர் சமாசத் தலைவர் அரசுக்குக் கடிதம்

சண்டிலிப்பாய்,ஜன.30

ஆழ் கடலுக்குச் சென்று மீன் பிடித் தொழிலில் ஈடுபடுவதற்கு அரசாங்கம் அனுமதி வழங்கியிருந்தபோதும் கடலில் தங்கி நின்று மீன்பிடித் தொழிலுக்குப் பயன்படுத்தப்படும் பாரிய வள்ளத்தைப் பாதுகாப்பான முறையில் கட்டி வைப்பதற்கு துறைமுக வசதி இல்லாததினால் இத் தொழிலை ஆரம்பிப்பதற்குத் தாமதம் ஏற்பட்டுள்ளது.

எனவே மீனவர்களின் நலன் கருதி உயர் பாதுகாப்பு வலயத்திலுள்ள மயிலிட்டித் துறைமுகத்தில் இது போன்ற வள்ளங்களைக் கட்டி வைப்பதற்கு அனுமதி வழங்கும்படி யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சம்மேளனத் தலைவர் எஸ்.தவரட்ணம் சம்பந்தப்பட்டவர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

மீன் பிடிப்பதற்கு இருந்து வந்த சகல தடைகளும் அகற்றப்பட்டு, ஆழ்கடலுக்குச் சென்று மீன்பிடித்தொழில் செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் குடாநாட்டில் மீன்பிடித்தொழிலை அபிவிருத்தி செய்யும்நோக்குடனும் மீனவர்களின் வருமானத்தை அதிகரிப்பதற்காகவும் மக்களுக்குத் தேவையான கடலுணவைப் பூர்த்தி செய்யும் வகையிலும் ஜி.ரி.சற் நிறுவனம் பல மாதங்களுக்கு முன் சுமார் 90 லட்சம் ரூபா பெறுமதியான பல வசதிகளையும் கொண்டதும் பல நாள்கள் கடலில் தங்கி நின்று மீன்பிடித் தொழில் செய்யக்கூடிய நவீன முறையில் வடிவமைக்கப்பட்ட பாரிய மீன்பிடி வள்ளத்தை யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சம்மேளனத்திற்கு வழங்கியிருந்தது.

இந்த வள்ளத்தைப் பாதுகாப்பான முறையில் கட்டி வைப்பதற்கான வசதிகள் யாழ்ப்பாணக் கடற்கரையோரங்களில் இல்லாததினால் தற்பொழுது ஊர்காவற்றுறைக் கடற்பிரதேசத்தில் தரித்து வைக்கப்பட்டுள்ளது.

இந்த வள்ளத்தின் மூலம் ஆழ் கடலுக்குச் சென்று தொழிலை ஆரம்பிப்பதற்கு வசதியாக உயர்பாதுகாப்பு வலயத்திலுள்ள மயிலிட்டித் துறைமுகத்தை பயன்படுத்துவதற்கு அனுமதி தருமாறு சம்மேளனத் தலைவர் அரசாங்கத்தைக் கோரியுள்ளார்.

அரசாங்கம் இதற்கு அனுமதி வழங்கும் பட்சத்தில் இத் தொழிலில் ஈடுபடுவதற்குப் பலர் காத்திருக்கின்றார்கள் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

(1-115)

## அழகியல் தேடல் போட்டிகள்

கரவெட்டி,ஜன.30

கரவெட்டிப் பிரதேச கைவண்ண கலையகத்தின் அழகியல் தேடல் போட்டிகள் மாணவரிடையே நடத்தப்படவுள்ளன.

இப்போட்டிக்கான விண்ணப்பப் படிவங்கள் ஏற்கனவே பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இப்போட்டியில் பங்குபெற விரும்பும் மாணவர்கள் எதிர்வரும் திங்கட்கிழமை தங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள போட்டி மண்டபங்களுக்குச் சென்று போட்டிகளில் பங்குபெறலாம்.

மேலும் இப்போட்டிகளில் வெற்றியீட்டும் மாணவர்களுக்கு அன்றைய தினமே சான்றிதழ்களும்,பரிசில்களும் வழங்கப் படவிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ரி-70)

## டெங்கு பரவலைத் தடுக்க சண்டிலிப்பாயில் குழு அமைப்பு

யாழ்ப்பாணம்,ஜன.30

சண்டிலிப்பாய் மத்தி கிராமசேவையாளர் பிரிவில் டெங்கு நோயை ஒழிப்பதற்கான செயற்பாட்டுக் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

இந்தச் செயற்குழு கடந்த திங்கட்கிழமை அமைக்கப்பட்டது. சண்டிலிப்பாய் மத்தி கிராமசேவையாளர் பிரிவை உள்ளடக்கியதாக இந்தச் செயற்பாட்டுக் குழு அமைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது

சண்டிலிப்பாய் மத்தி கிராம உத்தியோகத்தர் பு.நிரூபன், பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஆர். முருகானந்தன் ஆகியோர் இந்தச் செயற்குழு தெரிவு செய்யும் நிகழ்வில் கலந்துகொண்டனர்.

சனசமூக நிலையங்கள், விளையாட்டுக் கழகங்கள் உட்பட மற்றும் பொது நிறுவனங்க ளின் பிரதிநிதிகள் உள்ளடக்கியதாக இச் செயற்குழு அமைக்கப்பட்டது. (1-224)

# மாநகர வீதிகளில் குப்பை கொட்டுவோருக்கு 25 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்படும்

## மேயர் யோகேஸ்வரி எச்சரிக்கை

யாழ்ப்பாணம்,ஜன.30

யாழ். மாநகரசபை எல்லைக்குட்பட்ட வீடுகளின் முன்பாக உள்ள வீதிகளில் குப்பைகள் காணப்படின் வீட்டின் உரிமையாளர்கள் தண்டப்பணமாக 25 ஆயிரம் ரூபா செலுத்தவேண்டி ஏற்படுமென யாழ். மாநகரசபை முதல்வர் யோகேஸ்வரி பற்குணராசா எச்சரிக்கை விடுக்கிறார்.

இது தொடர்பாக மாநகர முதல்வர் தெரிவித்திருப்பதாவது:

மாநகரசபை, வீதிகளில் காணப்படும் குப்பைகளைத் துரிதமாக அகற்றிவருகின்றது. இப்பணியில் ஊழியர்கள் இரவு பகலாக ஈடுபட்டுவருகின்றனர். இவர்களுக்கான ஒத்துழைப்பைப் பொதுமக்கள் வழங்க வேண்டும்.

வீதிகளில் கண்டபடி குப்பைகளைப் போடுவதால் சுகாதாரச் சீர்கேடுகள் நிலவுவதுடன் டெங்கு நோய் பரவும் அபாயமும் அதிகரித்து வருகின்றது. எனவே இதைக் கட்டுப்படுத்துவது மிக அவசியமாகும். இது தொடர்பாக மாநகரசபை, பொதுமக்களுக்குப் பலதடவை அறிவுறுத்தல்களை வழங்கி வந்துள்ளது.

எனினும் வீடுகளுக்கு முன்பாகக் காணப்படும் மதிலோரங்களில் குப்பைகளைக் காணக்கூடியதாக உள்ளது. இந்த நிலை தொடருமாக இருந்தால் அவரவர் குடும்ப நிலைமைகளுக்கு ஏற்ப உரிய தண்டப் பணத்தைச் செலுத்த நேரிடும். இதில் அதி உச்ச தண்டப்பணமாக 25 ஆயிரம் ரூபா அறவிடுவதற்கு மாநகரசபை தீர்மானித்துள்ளது.

இந்த விடயத்தில் பொதுமக்கள் மிகவும் அவதானத்துடன் செயற்பட வேண்டும். தமது வீடுகளுக்கு முன்பாகக் காணப்படும் குப்பைகளுக்கு வீட்டு உரிமையாளர்களே பொறுப்புக் கூறவேண்டும்.

வீட்டுமதிலைச் சேதப்படுத்துபவர்களை அடையாளம் கண்டு புகார் கூறும் பொதுமக்களுக்கு வீட்டின்முன்னால் குப்பை போடுபவர்களை இனம் காண்பதென்பது சிரமமாகாது என்று தெரிவித்தார்.

அத்துடன் கொழும்பில் இவ்வாறு வீதிகளில் குப்பை போடுபவர்களுக்கு 50 ஆயிரம் ரூபா தண்டப்பணம் அறவிடப்படுவதும் குறிப்பிடத்தக்கது.

(1-16-111)

# 'பரசிட்டமோல்' மருந்து பாவிக்கும் அளவு; குழந்தை வைத்திய நிபுணர் விளக்கம் அளிக்கிறார்

யாழ்ப்பாணம்,ஜன.30

குழந்தைகளுக்கு 'பரசிட்டமோல்' மருந்து பாவிக்கும் அளவு தொடர்பாக யாழ். போதனாவைத்தியசாலை குழந்தை வைத்திய நிபுணர் டாக்டர் இ.மருதயினார் விளக்கம் அளித்துள்ளார்.

அந்த விளக்கம் வருமாறு:

டெங்குக் காய்ச்சலின் பாதிப்பு அதிகமாயுள்ள இத்தருணத்தில் பரசிட்டமோல் மருந்தைக் காய்ச்சலைக் குறைக்க வைத்திய ஆலோசனையைப் பெறவும் என நேற்றைய உங்கள் உதயன் இதழில் வெளியாகியுள்ள செய்தித் துணுக்கில் பார்த்ததும் சந்தோஷம் அடைந்தேன். ஆனால் குழந்தைகளுக்கு கொடுக்கும் பரசிட்டமோலின் அளவு ஒரு கிலோ உடல் நிறைக்கு 15 மில்லிக் கிராம் என்பதற்குப் பதிலாக 150 மில்லி கிராம் என அறிவித்துள்ளதைக் கண்டு மிகவும் அதிர்ச்சியடைந்து அவசரமாக இந்தக் கடிதத்தை வரைகிறேன்.

ஒரு குழந்தை வைத்தியரோடு கலந்தாலோசிக்காமல் இப்படி பத்து மடங்கு அதிகமாக குழந்தைகளுக்கு பரசிட்டமோல் (பனடோல்) கொடுக்கும்படி உங்கள் பத்திரிகை ஆலோசனை தெரிவிப்பது குழந்தைகளைக் கொலை செய்வதற்கு ஒப்பானது.

தயவு செய்து உடனடியாக இச் செய்தியை திருத்தி இன்றைய இதழில் செய்தி பிரசுரிக்குமாறு தாழ்மையுடனும், அன்பாகவும் கேட்டுக் கொள்கிறேன்- என்றார். (1)

## ஞானச்சுடர் வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம், ஜன.30

ஞானச்சுடர் இதழின்13 ஆவது ஆண்டு நிறைவு இதழ் வெளியீட்டு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு சந்நிதியான் ஆச்சிரமத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ ஞானசம்பந்த தேசிக பரமாச்சார்ய சுவாமிகள் வாழ்த்துரையையும் செஞ்சொற் செல்வர் ஆறு.திருமுருகன் வெளியீட்டுரையையும் வல்வை சிவகுரு வித்தியாசாலை அதிபர் ஆ. சிவநாதன் மதிப்பீட்டுரையையும் வழங்கவுள்ளனர்.

அத்துடன் 2002 ஆம் ஆண்டு தொடக்கம் 2009 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் வாராந்த நிகழ்வில் கலந்து கொண்டோருக்கான கௌரவிப்பு நிகழ்வும் அன்றையதினம் இடம் பெறவுள்ளது. (04-16)

# தென்னிலங்கை மக்கள் பனம் பொருள்களை கொள்வனவு செய்வதில் பெரும் ஆர்வம்

கோப்பாய்,ஜன.30

யாழ்ப்பாணத்தில் பனங்கிழங்குச் சீசன் ஆரம்பமாகியுள்ள போதிலும் அதன் விலை என்றுமில்லாதவாறு கூடுதல் விலையில் விற்கப்படுகின்றது.

தற்போது சந்தையில் கிழங்கு ஒன்று ஆறு ரூபா தொடக்கம் எட்டு ரூபா வரை விற்கப்படுகின்றது.

இவற்றினை தற்போது தென்னிலங்கை மக்கள் ஆர்வத்துடன் வாங்கி வருவதைக் காணக்கூடியதாக உள்ளது.

கடந்த காலங்களில் 40சதம் தொடக்கம் 1ரூபா வரை விற்ற இக் கிழங்கு தற்போது மேற் குறித்த விலைக்கு விற்பனை செய்யப்பட்டுவருகின்றது.

கடந்த வருட இறுதிப்பகுதியிலேயே பனம் பொருள் பொருள்களுக்கு கிராக்கி ஏற்படும் எனக் கருதி பெருமளவானோர் பனப்பாத்திகளை அமைத்திருந்தனர்.

தற்போது புழுக்கொடியல் கிலோ 400 ரூபா தொடக்கம் 600 ரூபா வரை விற்பனையாகி வருகிறது.

இதற்கு பெரும் தட்டுப்பாடு நிலவி வருவதுடன் உடனடியாக விற்பனையாகி தீர்ந்து விடுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

எதிர்வரும் காலங்களில் இதே நிலை நீடிக்குமாயின் பனம் பொருள் உற்பத்தி மூலம் பெருமளவானோர் நன்மையடையும் சந்தர்ப்பம் ஏற்படும் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (1-72)




## சுகாதார சேவைகள் கண்காணிப்புக் குழுக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஜன.30

சுகாதாரத்திணைக்களத்தின்கீழ் இயங்கும் வைத்திய நிறுவனங்களுக்கும் அரசசார்பற்ற நிறுவனங்களுக்குமான மாவட்டக் கண்காணிப்புக் குழுக்கூட்டம் எதிர்வரும் 5ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு சுகாதார சேவைகள் பணிமனை மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும். இக் கூட்டத்தில் தவறாது சமுகமளிக்குமாறு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவ மக்களது திருநாள்களில் சிறப்புப் பெற்றது தைப்பூசம்

தைப்பூசத் திருநாள் இன்றாகும். அதனையொட்டி இந்த ஆக்கம் பிரசுரமாகிறது.

"மைப்பூசு மொண்கண் மட நல்லார் மாமயிலைக்
கைப்பூசு நீற்றான் கபாலீச் சரமமர்ந்தான்
நெய்ப்பூசு மொன் புழுக்கல் நேரிழையார்
கொண்டாடும்
தைப்பூசம் காணாதே போதியோ பூம்பாவாய்"

என்பது திருஞானசம்பந்த நாயனார் அருளிச்செய்த தேவாரமாகும். தைப்பூச நன்னாளின் பெருமையை திருஞானசம்பந்த நாயனார் தமது இத்தேவாரத்தின் மூலம் எடுத்துக்காட்டியுள்ளார்.

தைப்பூச நன்னாளில் சிவசக்தி ஐக்கியத்தையும் மேம்பாட்டையும் விளக்கும் புனிதமான ஒரு பெரு நாளாகும். சைவத்தமிழ் மக்களது இனிய திருநாள்களில் தைப்பூசம் சிறப்பு மிக்கது. இந்து சமயத்தவர்கள் தமது இல்லங்கள் மற்றும் ஆலயங்கள் தோறும் இத்தைப்பூசநன்னாளில் புனிதம் பேணி வழிபாடியற்றுவர். தை பிறந்தால் வழி பிறக்கும் என்பது தமிழ் மக்கள் மத்தியில் ஆண்டாண்டு காலமாக வழக்கிலிருந்து வரும் முதுமொழியாகும். ஏனெனில் தை மாதம் உழவர் பெருமக்கள் தம் உழைப்பின் பலன் அனைத்தையும் ஈட்டிக் கொள்ளும் மாதம் என்பதால் தை மாதம் அத்துணை சிறப்புப்பெற்றது. விவசாயத்தைத் தொழிலாகக் கொண்டோர் உரிய காலத்தில் விதை விதைத்து ஊக்கத்துடன் காத்துப் பேணி வளர்த்த நெற்பயிரின் விளைவு நெல் மணிகளாக வீடு வந்து சேரும் மாதம் இத் தைமாதமே. விவசாயிகள் தமது வயலில் விளைந்த நெல்லை அறுவடை செய்து பதப்படுத்தி வீட்டுக்குக் கொண்டு வந்து விழா எடுக்கும் நாளாக தை மாதத்தின் தைப்பூச நன்னாள் விளங்குகின்றது.

தொகுப்பு: சதரா

இந்துக்கள் தைப்பூச நன்னாளில் புதிர் எடுத்தல், புதிர் உண்ணல் என்ற பாரம்பரிய நடைமுறைகளை இன்றும் கூடப் பக்தி பூர்வமாகக் கடைப்பிடித்து வருவது கண்கூடு. மார்கழிமாத முடிவுடன் பழையனவற்றைக் கழித்து தையுடன் புதியனவற்றைச் சேர்க்கும் நன்னாளாகவும் சைவ மக்கள் இப்பூச நாளைக் கொண்டாடுவர். உழவப்பெருமக்கள் தமது முயற்சியின் பயனை ஈட்ட அருள் பாலிக்கும் ஆண்டவனுக்கு நன்றி செலுத்த ஒரு பிடி கதிரை வயலிலிருந்து கொய்து வீட்டுக்குக்கொண்டு வந்து அந்த நெல்லிலிருந்து புத்தரிசி எடுத்து அமுது படைத்து ஆண்டவனுக்குப் படைத்து அக்கம் பக்கத்தவர்களுக்கும் ஏழை எளியவர்களுக்கும் பகிர்ந்தளித்து இன்புறும் நாளாக இத்தைப்பூச நன்னாள் விளங்குகின்றது.

மகர மாதமாகிய தைமாதம் சைவ மக்களுக்கு விசேட மாதமாக அமைவது போன்றே பௌத்த மக்களுக்கும் புனிதமான மாதமாக அமைகிறது. புத்தபிரான் ஞானோதயம் பெற்று பக்தர்களுக்கு ஞானம் கொடுத்ததும் தைப்பூசத்திருநாளிலேயாகும்.

தமது குழந்தைகளுக்கு 'வித்தியாரம்பம்' எனக்கூறப்படும் ஏடு தொடக்குதல் நிகழ்வையும் பெற்றோர்கள் இத் தைப்பூசத் திருநாளில் மேற்கொள்வதுண்டு. அது மட்டுமல்லாது தமது பெண்பிள்ளைகளுக்கு மூக்குக்குத்துதல், காது குத்துதல் போன்ற மங்கள காரியங்களையும் சைவ மக்கள் இத் தைப்பூச நன்னாளிலேயே மேற்கொள்வதுண்டு.

இத்தைப்பூசத்திருநாள் சிவபிரான், அம்பிகை, முருகன் ஆகிய வழிபடு தெய்வங்களுக்கு உகந்த நாளாகையால் சைவப் பெருமக்கள் தாம் வாழும் இடமெங்கும் தைப்பூச நன்னாளைப் பக்திபூர்வமாக அனுஷ்டித்து இறைவனைத்துதி செய்கின்றனர்.

இப்புனித தினத்தில் இந்துக்களாகிய நாம் ஆலயங்கள் மற்றும் எமது வீடுகள் தோறும் புனிதம் பேணிநடந்து இறையருள் பெற்றுய்வோமாக.

## தைப்பூசத் திருவிழாக்கள்

யாழ்ப்பாணம், ஜன30

சண்டிலிப்பாய் கல்வளை வீதியில் அமைந்துள்ள காளிஅம்பாள் ஆலயத்தில் தைப்பூச தின விழா இன்று சனிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் விசேட பூசைகள், அபிஷேக ஆராதனைகளுடன் நடைபெறவுள்ளது. (1-9)

* * *

நயினை நாகபூஷணி அம்மன் ஆலயத்தில் தைப்பூசத் திருவிழா இன்று சனிக்கிழமை காலை விசேட அபிஷேகங்களுடன், நான்கு வேளை சிறப்பு பூசைகளும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. மேலும் அன்றைய தினம் வித்தியாரம்பம், ஹர்ணவேதனம், அன்னப்பிரசாதனம் ஆகியவையும் மேற்கொள்வதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதாக ஆலய அறங்காவலர் சபையினர் தெரிவித்தனர். (9-267)

* * *

யாழ்ப்பாணம், ஜன.30

தைப்பூச திருவிழாவை முன்னிட்டு நீர்வேலி கந்தசுவாமி கோயிலில் இன்று விசேட பூஜை, அபிஷேகம் என்பன இடம் பெறும். சுவாமி வீதியுலா வருதலும் நடைபெறும். (1-224)

* * *

யாழ்ப்பாணம், ஜன. 30

யாழ். கோட்டை முனீஸ்வரன் ஆலயத்தில் இன்று தைப்பூசத்திருவிழா முற்பகல் 11 மணிக்கு விசேட உருத்திரா அபிஷேகத்துடன் ஆரம்பமாகி நடைபெறும். மதியம் மகேஸ்வர பூசையும் இடம்பெறும். (1-224)

* * *

யாழ்ப்பாணம், ஜன. 30

இணுவில் கந்தசுவாமி ஆலய தைப்பூச மஞ்சத்திருவிழா இன்று நடைபெறவுள்ளது.

காலை 8.30மணிக்கு 1008 சங்காபிஷேகம் நடைபெற்றுப் பின்னர் நண்பகல் விசேட பூசைகளும் நடைபெறவுள்ளன. அதனைத்தொடர்ந்து மாலை 6.30 மணிக்கு வசந்த மண்டப பூசைகள் இடம்பெற்று இரவு 7மணியள வில் சுவாமி திருமஞ்சத்தில் வீதிவலம் வரவுள்ளார்.

மேலும் இரவு நேரத்திருவிழாவாகையால் அடியார்கள் தங்க ஆபரணங்களை அணிந்து வருவதைத் தவிர்க்குமாறு ஆலய நிர்வாக சபையினர் கேட்டுள்ளனர் (55-224)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

அமரர் சின்னப்பு அரசரத்தினம்

(யா/உடுவில் முருகமூர்த்தி வித்தியாலய முன்னாள் அதிபர்,கலாபூஷணம், சமாதான நீதிவான்)

மண்ணில் 10.06.1922

விண்ணில் 31.12.2009

எமது பாடசாலை ஆசிரியர் அ.அரசகுலசேகரம் அவர்களது தந்தை சின்னப்பு அரசரத்தினம் அவர்களது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்தித்து அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம்.

யா/ சங்கானை சிவப்பிரகாச ம.வி.
ஆசிரியர், ஊழியர் நலன்புரி சங்கம்.

(94349)

## விற்பனைப்பிரதிநிதி தேவை

COCA COLA குளிர்பான நிறுவனத்திற்கு விற்பனைப் பிரதிநிதி தேவை (DSR)

முன் அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :
205, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
(நடன முருகன் முன்பாக)

(94348)




Jaffna Agent :
No. 15/30,Mariyamman Veethy,Thirunelvely.
Hotline: 0779905426,
Tel: 021 222 5212.

## விசேட வகுப்புகள்

யாழ்ப்பாணம், ஜன.30

அரச பொது முகாமைத்துவ உதவியாளர்களுக்கான விசேட வகுப்புக்கள் இன்று சனிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளன.

மத்திய மாகாண அரச திணைக்களங்களில் பணியாற்றும் அரச முகாமைத்துவ உதவியாளர் சேவையின் தரம் III இல் இருந்து தரம் II இற்கான பதவியுயர்வுப் பரீட்சைக்குத் தோற்றுபவர்கள் இதில் பங்குபற்ற முடியும். (04-16)

## சந்நிதியில் இன்று அன்னதான மண்டபம் திறப்பு

தைப்பூசத் தினமான இன்று சனிக்கிழமை தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயச் சூழலில் வள்ளி தெய்வானை அன்னதான மணிமண்டபம் திறந்து வைக்கப்படவுள்ளது. முற்பகல் 10 மணிக்கு திறந்து வைக்கப் படும் இந்த அன்னதான மணிமண்டபம் அடியார்களுக்கு தினசரி அன்னதானம் வழங்கும் நோக்குடன் செல்வமணி ஐயர் மற்றும் முருக பக்தர்கள் வழங்கிய நிதியுதவியுடன் நிர்மாணிக்கப்பட்டது. (ரி-223)

## அரை நேரத்துடன் மூடப்படும் மானிப்பாய் வைத்தியசாலை

நவாலி,ஜன.30

மானிப்பாய் பிரதேச அரசினர் வைத்தியசாலை தற்போது காலையில் மட்டுமே செயற்பட்டு வருகின்றது.

இந்த வைத்தியசாலையின் பொறுப்பதிகாரி ஏகாம்பர மூர்த்தி பத்மராணி நீண்ட விடுமுறையில் சென்றுள்ளதால், கொக்குவில் அரசினர் வைத்தியசாலைப் பொறுப்பதிகாரி வைத்திய கலாநிதி சிவராசா காலையில் மட்டும் பதில் கடமையாற்றிச் செல்கின்றார்.

இதனால் மாலை நேரத்தில் சிகிச்சை பெறவரும் நோயாளிகள் ஏமாற்றத்துடன் திரும்பிச் செல்ல வேண்டியுள்ளது.

ACCA to your future in Finance & Accounting

இலங்கை உட்பட 170 நாடுகளில் அங்கீகாரம்

விசேட பிரிவு

CAT/ ACCA

COMPUTER BASED EDUCATION (CBE)

* More Flexibility * Instant Results

மேலதிக விவரங்களுக்கு :
Department of Business Studies
Jaffna Technical Institute (JTI)
இல 46, மணிக்கூட்டு வீதி (Beacon அருகில்]
யாழ்ப்பாணம்
T.P: 0215670345/2301920 e-mail: jtiedu@gmail.com

## சேவை நலன் பாராட்டு



39 வருடகால உன்னத சேவையை நிறைவுசெய்து 01.01.2010 இல் ஓய்வு பெற்ற எமது குடும்பத்தின் மூத்தமகன்

உயர்திரு
வேதநாயகம் யோகராஜரஞ்சன்
(ஆய்வுகூட தொழில் நுட்ப உதவியாளர், மந்திகை வைத்தியசாலை)

அவர்களை இன்னும் பல ஆண்டுகள் நீடூழி வாழ இறையருள் வேண்டி அவர் மென்மேலும் சீரும் சிறப்புடனும் தன் குடும்பத்துடன் வாழ வாழ்த்தி நிற்கும்.

வேதநாயகம்
குடும்பத்தினர்.

(94352)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எத்தகைய விமர்சனத்தையும் மௌனமாய் சமாளிக்கும் சைவப் பெருந்தகையாளர் அமரர் கந்தசாமி



சைவப்புலவர் கலாநிதி வல்லிபுரம் கந்தசாமி அவர்களை தெரிந்து கொள்ளாதவர்கள் இருக்க முடியாது. குறிப்பாக வண்ணார்பண்ணைச் சூழலில் அவரை அறியாதவர் இருக்க முடியாது. யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையின் மூலம் இலங்கை முழுவதற்கும் அறிமுகமானவர். சைவத்திற்கும் தமிழுக்கும் ஆற்றிய சேவையை அறிந்து யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம் கௌரவ கலாநிதிப்பட்டத்தை வழங்கிச் சிறப்பித்தமை அவரது தொண்டிற்குக் கிடைத்த சிறப்பாகும். அமரர் வ.கந்தசாமி யோகர்சுவாமிகளின் ''மௌன மாயிரு'' எனும் வாசகத்தை வாழ்க்கை நெறியாகக் கடைப்பிடித்தவர். மௌனமாக இருந்து மற்றையவர் கூறுவதைக் கேட்பார். எப்படியான விமர்சனத்தையும் மௌனம் சாதித்து சமாளிக்கும் ஆற்றல் அவருக்குரிய தனிச் சிறப்பாகும்.

## நீத்தார் நயப்புரை

நெற்றியில் விபூதி, சந்தனம், கழுத்தில் உருத்திராட்ச மாலையுடன் சமய வாழ்வு வாழ்ந்தார். பிறப்பும் மறைவும் ஒரே திகதி மாதத்தில் நிகழ்வது அபூர்வமான விடயம்.

யாழ்.வண்ணை சாந்தையர்மடம் கற்பக விநாயகர் ஆலயம் சைவப்புலவர் கந்தசாமி அவர்களின் பெரு முயற்சியினால் வளர்ச்சி பெற்ற ஆலயமாகும். இங்கிருந்து ஏறத்தாழ ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக சைவத் தொண்டாற்றினார். அருகிலுள்ள ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் மகாவித்தியாலயத்தில் ஆசிரியராகவும் கடமையாற்றியமையால் பாடசாலைக்கும், பிள்ளையார் கோவிலுக்கும் இணைப்புப் பாலமாகத் திகழ்ந்து என்போன்ற பல மாணவர்களுக்கு இளமையிலேயே ஆன்மீகத்திற்கான வழிகாட்டியாகத் திகழ்ந்தார். கற்பக விநாயகர் ஆலயத்தில் இளைஞர்களை, சைவசமய நெறியில் தொண்டாற்ற வைக்கும் ஒரு நோக்கத்துடன் ''சைவசமய அபிவிருத்திக் கழகம்'' ஒன்றை ஆரம்பித்து வைத்தார்.

இக்கழகம் ஐம்பது ஆண்டுகளைக் கடந்து சேவையாற்றி வருகிறது. கழகத்தின் மூலமாக ஆலயச் சுற்றாடலில் உள்ள மாணவர்களுக்கு சமய அறிவை, வளர்க்க ஒவ்வொரு சிவராத்திரி தினத்தையுமொட்டி சமய அறிவுப் பரீட்சை , மாலை கட்டுதல், கோலம் போடுதல், நன்னெறி நூல்கள் மனப்பாடம் செய்தல் போன்ற துறைகளில் போட்டிப் பரீட்சை வைத்து பரிசளிக்கும் முறை அமரரால் தொடக்கப்பட்டு இப்பொழுதும் சிறப்பாக ஆலயச்சூழல் கடந்து யாழ். மாவட்டம் முழுமைக்கும் விரிவுபடுத்தப்பட்டு நடைபெறுகிறது.

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையின் வளர்ச்சிக்கு முன்னின்று உழைத்த சைவப் பெருமக்களின் நீண்ட பட்டியலில் அமரர் வ.கந்தசாமி அவர்களுக்கு சிறப்பான இடம் உண்டு. ஏறத்தாழ இருபத்தைந்து ஆண்டுகளாக சபையின் பரீட்சைச் செயலாளராகவும். நான்காண்டுகாலம் தலைவராகவும் இருந்து பணியாற்றியுள்ளார். இவரது காலப்பகுதியில் பல சமயநூல்கள் மறுபிரசுரம் செய்யப்பட்டு வெளியிடப்பட்டது.

அரசாங்கப் பாடசாலை சமய பாடப்புத்தகத்தில் காணப்பட்ட தவறுகளைத் திருத்துவதற்கு அறிஞர்கள் குழாம் ஒன்றினை அமைத்து ஏற்றதிருத்தங்கள் செய்வதற்கு வழியமைத்துக் கொடுத்தார். சமய பாடக் கருத்தரங்குகளை ஒழுங்கு செய்து யாழ். மாவட்டம், வன்னிமாவட்டம், மன்னார் போன்ற இடங்களில் நடைபெறச் செய்தார்.

யாழ்ப்பாணச் சிறைச்சாலையில் கைதிகளுக்கு நற்சிந்தனை வழங்கும் பொறுப்பை நீண்ட காலமாக நிகழ்த்தி வந்தார். சமய நிறுவனங்கள் பலவற்றில் உறுப்பினராக இருந்து தொண்டாற்றினார்.

உலகப்பற்றை நெஞ்சாரத்துறந்து, நல்ஒழுக்கத்தில் நிலைத்து நிற்கும் பெரியவர்கள் அமரர்களாகினாலும் நெஞ்சில் நிறைந்திருப்பார்கள்.

அமரர் கலாநிதி வல்லிபுரம் கந்தசாமி அவர்களின் ஆத்மா ஒளியுலகையடையும் என்பதில் இரண்டாம் கருத்திற்கு இடமில்லை.

''செஞ்சொல்வாணர்''
**இரா.செல்வவடிவேல்**
(தலைவர், சைவசமய அபிவிருத்திக் கழகம்,
தேர்வுச்செயலாளர், யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபை).

## மக்கள் முகம்



யாழ்ப்பாணம், ஜன.30

தேசிய மரபுரிமைகள் அமைச்சினால் அரச ஊழியர்களுக்கிடையே நடத்தப்பட்ட ஆக்கத்திறன் போட்டியில் கரம்பொன் சிறிய புஸ்ப மகளிர் மகாவித்தியாலய ஆசிரியை திருமதி கஜநந்தினி வரதலோஜன் குறுநாடகப் போட்டியில் இரண்டாம் இடத்தினையும், 'சிறுகதைப்' போட்டியில் மூன்றாம் இடத்தினையும் பெற்றுள்ளார். (9-325)

★ ★ ★



இந்திய ஐதராபாத் சிஸ்ரிமிக் நடைமுறை மொழியியல் சங்கமும் கோயாம்புத்தூர் ஆங்கிலமொழி ஆசிரியர் மன்றமும் இணைந்து நடத்தும் ஆறாவது சர்வதேச ஆங்கில இலக்கண மாநாட்டில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வவுனியா வளாக ஆங்கில மொழிக் கற்பித்தல் துறையின் இணைப்பாளரும், சிரேஷ்ட ஆங்கில விரிவுரையாளருமாகிய கலாநிதி கந்தையா ஸ்ரீகணேசன் ''மொழித்திறன் விருத்தியில் அரங்கு'' களப்பயிற்சி ஒன்றினை நடத்துவதற்கும் ஆங்கில இலக்கம் போதித்தலில் விளிம்பு நிலை மாணாக்கர் எதிர்கொள்ளும் பிரச்சினை பற்றிய ஆராய்ச்சிக் கட்டுரையினை வாசிப்பதற்கும் வெளிநாடு பயணமானார்.

கடந்த 9-13 ஆம் திகதி வரை ஈரோடு பெருந்துறையில் உள்ள கொங்கு பொறியியல் கல்லூரியில் நடைபெற்ற இந்த மாநாட்டில் சர்வதேச ஆங்கில ஆராய்ச்சியாளராகக் கலந்துகொண்டார்.

★ ★ ★

நன்னடத்தை சிறுவர் பராமரிப்புத் திணைக்களத்தின் கீழ் 2005 செப்ரெம்பர் 30 இல் ஸ்தாபிக்கப்பட்ட தேசிய சிறுவர் சபையின் பிரதிநிதியாக யாழ்ப்பாண மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்காக கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலயத்தைச் சேர்ந்த மாணவி இராஜேஸ்வரன் துளசி தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

யாழ்.மாவட்டத்தில் இருந்து பலர் இந்நிகழ்விற்கு சென்ற[illegible] தெரிவு செய்யப்பட்ட ஒரே தமிழ் மாணவியாக இவர் விளங்குகிறார். [illegible] கடிதம் நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைத் திணைக்களத்தினால் ஆணையாளர் அபயகுணவர்த்தனவினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (9)

# மனிதத் தலையுடன் பிறந்த கன்றுக்குட்டி அச்சுவேலி விவசாயியின் 'ஜேசி'ப்பசு ஈன்றது!

யாழ்ப்பாணம், ஜன.30

இடைக்காட்டுப் பகுதியில் மனிதர்களின் தலையுடன் கூடிய மாட்டுக் கன்றுக் குட்டி இறந்த நிலையில் தாயின் வயிற்றில் இருந்து பலத்த பிரயத்தனத்தின் பின்னர் வெளியே எடுக்கப்பட்டது.

விவசாயி ஒருவரின் 'ஜேசி' இனமாடு சினைப்பட்டு உரிய பருவத்தில் கன்று ஈனமுடியாத நிலையில் உபாதைப்பட்டது. இது தொடர்பாக கோப்பாய்க் கால் நடை வைத்திய அதிகாரி அலுவலகத்தில் அச்சுவேலி உப பணிமனையில் பதிவு செய்யப்பட்டது.

அச்சுவேலி உப அலுவலக கால்நடை வைத்திய வெளிக்களப் போதனாசிரியர் விரைந்து சென்று பசுமாட்டின் வயிற்றில் இருந்து இறந்த நிலையில் காணப்பட்ட கன்றுக் குட்டியைப் பலமணி நேரம் முயற்சி செய்து வெளியே எடுத்தார்.

'கன்றுக் குட்டியின் தலையின் அமைப்பு மனிதத் தலையை ஒத்ததாகவும் உடல் மாட்டின் உடலை ஒத்ததாகவும் காணப்பட்டது.

மாட்டுக் கன்றின் தலை மனிதர்களின் தலைபோன்று இருந்தமையினால்த்தான் இயல்பு நிலையில் கன்றுக் குட்டியை தாய் மாடு ஈன முடியாமல் போய்விட்டதாகவும் 40 வருட காலத்தில் இதுபோன்ற சம்பவத்தைச் சந்திக்கவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டது. (ரி-11)

# கோப்பாய்ப் பிரதேச செயலக பிரிவில் கற்றல் உபகரணங்கள் வழங்க ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஜன.30

வறுமைக் கோட்டின் கீழ் வாழும் பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களை 'மக்கள் நலன் காக்கும் பிரிவு' இன்று வழங்குகிறது.

கோப்பாயிலுள்ள உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனமான இந்த நிறுவனம், கோப்போ சில்றன் (Hope For Children) எனும் நிறுவனத்தின் நிதி அனுசரணையுடனேயே இந்தத் திட்டத்தை முன்னெடுத்துள்ளது.

கோப்பாய்ப் பிரதேச செயலகப் பிரிவினுள் வதியும் வறுமைக்கோட்டின் கீழ் உள்ள 30 பாடசாலை மாணவர்கள் இந்தத் திட்டத்தில் பயனாளிகளாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தாய், தந்தை அல்லது இருவரையும் இழந்த இந்த மாணவர்களுக்கு ஒவ்வாரு மாதமும் கற்றல் ஊக்குவிப்பு உதவிகள் வழங்கவுள்ளதாக நிறுவனத் தலைவர் கோ.சிவசுந்தரமூர்த்தி தெரிவித்தார்.

இவ்வாறு முதற்கட்டமாக ஆறுமாத காலத்துக்குத் தொடர்ச்சியாக மாதாந்தம் இந்த ஊக்குவிப்புத் தொகை வழங்கப்படவிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ரி-14)

# இறுப்பிட்டி வீதியைப் புனரமைக்க மக்கள் அவசர கோரிக்கை

புங்குடுதீவு, ஜன.30

கடந்த நாற்பது வருடங்களுக்கு மேலாக திருத்தப்படாதிருக்கும் புங்குடுதீவு இறுப்பிட்டி வீதிப் புனரமைப்பு வேலைகளை ஆரம்பிக்குமாறு இப்பிரதேச மக்கள் அவசர கோரிக்கை விடுத்துள்ளனர்.

குண்டும் குழியுமாக மிக மோசமான நிலையில் காணப்படும் இவ்வீதியூடாகப் பயணிக்கும் பொதுமக்களும், வாகனங்களும் பல்வேறு சிரமங்களுக்கு ஆளாக வேண்டியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இப்பிரதேசத்திலே மீளக் குடியேறியுள்ள மக்களின் போக்குவரத்துத் தேவைக்காக உடனடியாக இவ்வீதியைத் திருத்தம் செய்ய வேண்டும் என்பதே இப்பிரதேச மக்களின் கோரிக்கையாகும். (ரி-188)

# ஆனைக்கோட்டை பொதுக்கிணறுகளுக்கு 'குளோரின்' இடுமாறு மக்கள் கோருகின்றனர்

நவாலி, ஜன.30

ஆனைக்கோட்டை நவாலிப் பகுதியிலுள்ள குடிதண்ணீர் பெறும் பொதுக் கிணறுகளுக்கு மழைகாலம் முடிவடைந்து நீண்ட நாள்களாகியும் சுகாதாரப் பிரிவினரால் குளோரினிடப்படவில்லையென்று தெரிவிக் கப்படுகின்றது.

தற்போது டெங்கு உட்பட பலதரப்பட்ட நோய்களும் மக்களுக்குப் பரவி வருவதால் இக்கிணறுகளுக்கு சம்பந்தப்பட்டவர்கள் உடன் குளோரினிட்டு நோய்கள் பரவாமல் தடுக்க முன்வர வேண்டு மென்று மக்கள் கேட்டுக் கொள்கிறார்கள். (1-100)

# வரணிப் பிரதேச சமுர்த்தி வங்கி மீண்டும் பழைய இடத்தில்

தென்மராட்சி, ஜன.30

வரணிப் பிரதேச சமுர்த்தி வங்கியின் மீள் திறப்பு வைபவம் தென்மராட்சி பிரதேச செயலர் செ. சிறிநிவாசன் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக சமுர்த்தி அதிகார சபை அத்தியட்சகர் திலக்சிறி கலந்துகொண்டார்.

பிரதேச செயலர், அதிகாரசபை அத்தியட்சகர் மற்றும் பிரதேச கட்டளைத் தளபதி ஆகியோர் ஒன்றிணைந்து கட்டடத்தைத் திறந்து வைத்தனர். வரவேற்புரையை சமுர்த்தி வங்கி முகாமையாளர் திருமதி யோகராசா நிகழ்த்தினார். தலைமையுரையை பிரதேச செயலர் நிகழ்த்தினார்.

அதன் பின்பு உரையாற்றிய அதிகார சபை அத்தியட்சகர் திலக்சிறி தற்போதைய சமாதானச் சூழ்நிலையில் இங்குவர சந்தர்ப்பம் கிடைத்ததையிட்டு மகிழ்ச்சி தெரிவித்ததுடன் வடக்கில் சமுர்த்தி செயற்பாட்டுக்கு முழு ஒத்துழைப்பு வழங்க அதிகார சபை முழுமூச்சாக செயற்படும்- என்றார்.

வட பிரதேச சமுர்த்தி ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர் ரகுநாதன் பின்பு உரையாற்றினார். அதன் பின்னர் சமுர்த்தி பயனாளிகள் சிலருக்கு நீர் இறைக்கும் இயந்திரங்கள், தெளிகருவிகள் மற்றும் பாடசாலை மாணவர்களுக்கு 'சிவ் தொற' சான்றிதழும் வழங்கப்பட்டன.

2006 ஆம் ஆண்டு இப்பகுதியில் ஏற்பட்ட யுத்தமோதல்களைத் தொடர்ந்து வரணி சமுர்த்தி வங்கி தென்மராட்சிப் பிரதேச செயலகத்தில் தற்காலிகமாக இயங்கியமை குறிப்பிடத்தக்கது. (1-122)

## நிர்வாகிகள் தெரிவு

யாழ்ப்பாணம், ஜன.30

மானிப்பாய் பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவராக மீண்டும் அப்புத்துரை சரவணன் தெரிவு செய்யப்பட்டுள்ளதாக சங்கத்தின் பொது முகாமையாளர் க.சற்குணலிங்கம் தெரிவித்துள்ளார்.

புதிய ஆண்டுக்கான நிர்வாகத் தெரிவு கடந்த 29 ஆம் திகதி நடைபெற்றபோது ஏகமனதாக மீண்டும் தலைவராக இவர் தெரிவு செய்யப்பட்டுள்ளார் என்றும் மேலும் தெரிவித்தார். (9)

* * *

இணுவில் கிழக்கு மாதர் அபிவிருத்திச் சங்கத்தின் நடப்பாண்டுக்கான புதிய நிர்வாகிகள் தெரிவு கடந்த 15 ஆம் திகதி இடம்பெற்றது.

இந்தக் கூட்டத்தில் திருமதி சந்திரா நக்கீரன் தலைவராகவும் திருமதி யோ.புஸ்பராணி செயலாளராகவும் திருமதி ராதா இராசேந்திரம் பொருளாளராகவும் தெரிவு செய்யப்பட்டனர். (ரி-45-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாலைச் சுருட்டிக்கொண்டு.....

— வனவியனன்

ஆண்டவனின் படைப்பில்தான் எவ்வளவு சிறப்பு! ஆச்சரியமானது மட்டுமல்ல - விந்தையோடு வேடிக்கையானதும் என்பது உண்மை. ஒவ்வொன்றும் வேறுவிதமான, தனக்காகவே கொண்ட பழக்கங்கள் என்பதுவும் மறக்க முடியாத விஷயம்.

சில விலங்குகள் நான்கு கால்கள்; சில கூடுகட்டிப் பறவைகளாகப் பறக்கின்றன. இருந்தாலும் எல்லா விலங்குகளுக்கும், பறவைகளுக்கும் வால் என்பது முக்கியமான அம்சம். வால் இல்லாத விலங்கினங்கள் இருக்கவே முடியாது.

மனிதப் பிறவியான நமக்கு நம்முடைய உடலில் பின்பக்கம் இருப்பதற்கு அருகே தொட்டுப் பார்த்தால்... அந்த எலும்புக்கூடு நடுவே சிறிதாவது எலும்பு, எலுமிச்சம் பழம் அல்லது நெல்லிக்காய் அளவு தனியாக இருப்பதை நாம் உணரலாம். ஆனால் விலங்கினங்களுக்கு இந்தக் குறிப்பிட்ட எலும்பு மட்டும் எலும்புக்கூட்டோடு நிற்காமல் சற்று நீடித்து உடலைவிட நீளமாக அமைந்துள்ளதால்தான் இதை வால் என்று கூறுகிறோம். ஆனால் மனிதனுக்கு வால் தேவையில்லை என்று கருதியோ ?ஆண்டவன் அந்த வால்பகுதியை விலங்கிற்குக் கொடுத்துப் படைப்பதால் மட்டும் சிருஷ்டி கர்த்தா என்ற அளவில் சந்தோஷமடைந்து இருக்கக்கூடும்.

ஆனால் ஒவ்வொரு உயிரினங்களுக்கும் வாலின் அமைப்பு வேறுவேறாக வித்தியாசம் இருக்கிறது.ஒரே அளவில் இருப்பதில்லை. உபயோகத்தில்கூட மிகவும் பெரிய அளவில் வேறுபாடு, வித்தியாசம் உள்ளது.

உதாரணமாக குரங்கு ஒரு மரத்திலிருந்து இன்னொரு மரத்திற்கு தாவ வாலைத்தான் உபயோகப்படுத்துகிறது. பூனை மற்றும் நாய் இனங்கள் தங்கள் கோபத்தைக் காட்டத்தான் தேவைக்குள்ளாகிறது. குறிப்பாக பூனைக்குக் கோபம் வந்தால் தனது வாலை செங்குத்தாக குச்சி அல்லது கம்புபோல் நிற்காமல் ஆவேசமாக வைத்துக் கொள்கிறது.

நாய் என்றால் வாலாட்டும் என்பது சின்னக் குழந்தைக்குக்கூட தெரிந்த விஷயம். ஆனால் அதே நாய் தனது வாலைத் தனது இரண்டு காலிற்கும் நடுவே சுருட்டி வைத்துக் கொண்டால் தனது வருத்தத்தையோ பயத்தையோ தெரிவிக்கிறது.

போர்னியோ தீவு- இந்தோனேசியா, மலேசியா, ப்ரூனே நாடுகளுக்கு இடையில் அமைந்துள்ள மிகப் பெரிய தீவாகும். உலகில் மூன்றாவது மிகப் பெரிய தீவு இது. இங்குள்ள சாஃபா பகுதியே கவனக் குறிப்புப் பகுதியாகும். இங்கு தான் குள்ள யானைகள் என்று அழைக்கப்படும் பக்மி எலிபெண்ட்ஸ் அதிகம் வாழ்கின்றன. அதிகம் எனக் கூறுவதைக்காட்டிலும் வாழ்கின்றன எனக் கூறினாலே போதுமானது. அந்த அளவிற்கு இவ்வினம் அழிவின் வாசலை நெருங்கி உள்ளது. உலகின் வேறு எங்கும் இல்லாத இவ்வினம் 2003 ஆம் ஆண்டுக் கணக்குப்படி 15,000 என்றும், நேற்றைய முன்தின ஈ-மெயில் கணக்குப்படி 10-50 என்றும் அறியப்பட்டுள்ளது. என்னைப் பொறுத்தவரை இவை குத்து மதிப்பான கணக்கீடே எனக் கொள்ளலாம்.

குள்ள யானைகள் ஆசிய யானை வகையைச் சேர்ந்தது. இதை அழிந்து வரும் உயிரினப் பட்டியலில் உலக சுற்றுச் சூழல் பாதுகாப்பு நிதியகம் சேர்த்துள்ளது. அதிக பட்சமாக 8 அடி உயரமே வளரும் இவை குறுகிய நெற்றியும், உருண்டை வடிவ உடலும் பார்க்க கம்பீரமற்றும் ஏதோ பொம்மைபோல இருக்கும். ஆரம்ப காலத்தில் ஆசிய யானை இனத்தில் ஏதோ நோயால் பாதிக்கப்பட்டவை என்றே இவற்றைக் கருதி வந்தனர். டி.என்.ஏ சோதனை மூலம் பக்மி யானைகள் என்ற தனி அந்தஸ்தைத் தந்தனர். மிகுந்த கூச்ச சுபாவமும், பயந்து புதருக்குள் மறைவதும் அதிக தூரம் பயணிக்க இயலாத தன்மையும், முக்கிய குணங்கள் என்றாலும் இவற்றைப் பற்றிய முழு நிரூபக்கப் பட்ட தகவல்கள் இன்று வரை இல்லை.

16,18ஆம் நூற்றாண்டுகளில் ஸூலு நாட்டு சுல்தானின் கொடையாக கப்பல் மூலம் ஜாவா, சுமாத்திரா தீவுகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டு அங்கு போர்னியோ தீவுகளில் விடுவிக்கப்பட்டு இருக்கலாம்.அடர்ந்த காடுகளிலும், சம வெளிப் புற்பகுதிகளிலும் வாழ ஆசைப்படும் இவை புல், இலை, தழை, வாழை மரங்கள், பனை யோலை, காய்கறிகளை உணவாக எடுத்துக் கொள்ளும்.குறிப்பாக துரியன் பழம் இதன் விருப்ப உணவு. மேற் குறிப்பட்ட அனைத்தும் மனிதனுக்கும் அத்தியாவசியமான பொருள்கள் ஆனதில் மனித- யானை மோதல் துவங்கியது. இயல்பிலேயே வலுவற்றதும், யானை ஆதரவாளர்களுக்கு அதிகம் பரிச்சியம் இல்லாமல் போனதும் எண்ணிக்கைக் குறைவுக்கு மிக முக்கிய காரணம் ஆயின.எனவே அடித்துத் துரத்தப்பட்டு சாஃபா பகுதியில் மட்டுமே வாழும் அளவிற்கு ஒடுக்கப்பட்டது.இதன் மொத்தப் பரப்பளவே 1800 கி.மீ தான். அதிலும் முக்கால் பகுதி பாமாயில் பனை மரங்கள் ஆக்கிரமிப்பு செய்து விட்டன.

அரசின் ஊக்குவிப்பும் கூட, சுற்றுலா மையமாக பரிணமித்து, ஆரம்பித்து, ரிசார்ட்ஸ், ஹோட்டல் என எஞ்சிய பகுதிகளும் ஆக்கிரமிப்புக்கு உள்ளானது.தனது உடல் நலனில் மிகுந்த அக்கறை கொள்ளும் யானைகள் அதன் வெப்பத் தன்மையை சீராக வைத்திருக்க ஓடையை நாடுகின்றன.

குளியலின் மூலம் தனக்குத் தேவையான புரத உப்புகளைச் சேர்த்துக் கொள்ளவும் தேவையற்ற உப்புப் படிமங்களைக் கழுவிக் கொள்ளவும் முடிகிறது. ஓடையை மறித்து நீச்சல் குளமாக்கிய மனிதனின் சுயநலம், அவற்றிற்கு வெப்ப நிலை சீர்கேட்டைக் கொண்டு வருகிறது. இதன் நீட்சியாக செரியாமை, மெதுவாக கருத்தரித்தல், குறைப் பிரசவம், பருவ வயதை

அடைந்தும் பாலுணர்வற்று இருத்தல் போன்ற சொல்லொண்ணாத் துயரங்களை அடைகின்றன. தண்ணீருக்காகத் தோட்டத்திற்குள் நுழையும் இவற்றிற்கு பனையும் உணவாகிறது. இவ்வகை யானைகளின் சாம்பல் நிறத் தோலும்,காதுகளில் காணப்படும் இளஞ் சிவப்பு நிற புள்ளிகளும் உடலில் ஏற்படும் என்சைம் மாற்றங்களை சமன்படுத்தப் பேருதவி புரிகின்றன.இது இவ்வகை யானைகளுக்கு மட்டுமே உள்ள

சிறப்பம்சமாகும். குறைந்த எண்ணிக்கை யானைகள் மட்டுமே தங்களையும், தம் உயிர் சூழ் அமைப்பையும் மாற்றிக் கொண்டு உயிர் வாழ முயல்கின்றன. சேதாரம் அதிகரிக்க, விவசாயிகள் யானையைக் கொல்லத்தொடங்கிவிட்டனர். அரசும் கண்டு கொள்ளாத நிலையில் இவற்றின் எண்ணிக்கை கிட்டத்தட்ட பூஜ்ஜியத்தை எட்டும் நிலையில் தலையீட்டில் மீண்டும் உலகின் கவனத்தைத் தன்பால் ஈர்த்துள்ளது. ஆங்காங்கே குடியிருப்பு, தோட்டங்கள், பண்ணைகள் என ஆக்கிரமிப்புகளில் தங்களின் பாரம்பரிய பாதையையும், உணவு மற்றும் நீராதாரத்தையும் இழந்து தவிக்கும் இவைகளுக்கு மற்றுமொரு இடி காத்துக் கொண்டிருக்கிறது. 'சுபோச்சர்ஸ்சுசு எனப்படும் கொள்ளைக் கும்பல் தான் அது. தந்தத்திற்காகவும், சீன தேசத்து மக்களின் சூப்பிற்காகவும் இவை பெருமளவில் கொல்லப்படுகின்றன. பிற யானைகளைக் காட்டிலும் இவற்றைப்பிடிப்பது மிகச் சுலபம். குறிப்பாக இளம் வயது யானைகள் 3-4 அடி உயரமும், குறைந்த எடையும், சூப்பிற்கு சுவையான கறியையும் கொண்டதால் கொல்லப்படுவதும் சுலபமாகவே நடக்கின்றது. இதன் முதற் கட்ட நடவடிக்கையாக சரணாலயம் அமைத்து பாதுகாக்கத் தொடங்கியுள்ளது.

ஜான் ரோஜ், ஸ்டூவ் ஆகியோர் பக்மி யானைகள் பற்றிய தீவிர ஆராய்ச்சியில் ஈடுபடுபவர்கள். அவர்கள் கருத்துப்படி அக்காலத்தில் அரசர்களின் ஆதரவை இவ்வகை குள்ள யானைகள் இழந்ததே இவைகளின் அழிவுறும் நிலைக்கு காரணம்.ஏனெனில் இவற்றின் உடலமைப்பு மிகக் குறுகியது. மேற்கு மலைத் தொடர்ச்சியின் அடிவாரங்களிலும்,இவ்வகை யானைகள் தென்பட்டதாகவும், குறிப்பாக மத்திய கேரளப் பகுதியிலும் அதன் ஓரங்களிலும் என தகவல்கள் வெளியாகி உள்ளன. ஆனால் நேரில் பார்த்ததாக யாரும் கூறவில்லை.




கல்லாணா என அவர்கள் அழைப்பது இவ்வகை யானைகளாகத்தான் இருக்கும் என்பது யூகம்.

வீதியில் போய்க் கொண்டு இருக்கும்போது மிகவும் சிறியபிஸ்கட் துண்டை எந்த நாய்க்கு நாம போட்டாலும் அதே நாய் அடுத்த தடவை நம்மைப் பார்த்தால் விசுவாசத்தோடும் நன்றி உணர்ச்சியோடும் நம் பின்னாலேயே வால் சுருட்டியும் ஆட்டியும் வேகமாக அசைந்து வருவது தெரிந்த விஷயம். ஆனால் குரங்கு குதிரை, பசு, எருமை போன்றவை தனது வாலை ஈ அல்லது வேறு ஜந்துக்கள் அண்டக்கூடாது என்று வாலாட்டிக் கொண்டு இருக்கும்.

அணில்கூட தனது நான்கு கால்களுக்குக் கீழே குறிப்பாகக் கொண்டு தனது வாலை அப்படியே ஊர்வலம் போகும் சுவாமி விக்கிரகத்திற்குக் குடைபிடிப்பது போலப் பயன்படுத்துவது பார்க்க நம் கண்களுக்கு அரியக்காட்சி!

இதை எல்லாம் விட வேடிக்கை என்னவென்றால் வேறு சில விலங்குகள் தனது வாலைத் தனது எதிரியைத் தாக்கவும், தன்னைக் காத்துக் கொள்ளத் தற்காப்புக்காக உபயோகிப்பதுதான் வேடிக்கை.

கடலளவில் உள்ள விலங்கினங்கள் குளிர்காலத்தில் அந்த வால்களை மாத்திரம் அறவே மடக்கிக்கொண்டு உஷ்ணத்தைத் தானே உண்டாக்கி கொள்வதால் குளிர் அதற்குப் பயம் இல்லை. அதன் வால் அதற்குப் போர்வை.

மயில்கள் தனது தோகையை விரித்து வாலோடு நடனமாடினால் வம்சவிருத்திக்குத் தான் தயார் என்று சைகை.

கடலில் உள்ள விதவிதமான மீன்களுக்கு அந்த வால்தான் துடுப்பு. எந்தத் திசை போக வேண்டும் என்றாலும் அந்தத் திசைநோக்கி வாலைத் திருப்பினால் மோட்டார் வண்டியின் வீல் போல் பயன்படும்.

வேறு வகை விலங்கினங்கள் தனது வாலை மூடிக் கொள்வது பாதுகாப்பு, எதிர்பாராத விரோதிகளின் மோதலைத் தவிர்க்க.

ஆனால் யானைக்கு மட்டும் தனது வாலையும் தும்பிக்கையையும் தூங்கும்போது மட்டும் உபயோகிப்பதில்லை. இருந்தபோதிலும் அவுஸ்திரேலியாவில் உள்ள சார்க் என்ற ராட்சத மீன்கள் பலமானவை. அந்த மீன்களின் வால்மட்டும் யார்மீதாவது தாக்கப்பட்டால் மரணம் நிச்சயம்.

சமீபத்தில் அவுஸ்திரேலியாவில் உள்ளமுதல் மன்னன் மிஸ்டர் இன்வின் எவ்வளவோ முதலைகளைப் பிடித்து அடக்கிப் பிரபலமடைந்தாலும் இந்த சார்க் மீன்வால் திடீர் தாக்குதலால் அகால மரணமடைந்தது தெரிந்த விஷயம். அதனால்தான் பெரியவர்கள் நம்மை "வாலைச் சுருட்டிக் கொண்டு போ" என்று சொல்கிறார்கள் போலும்.

*வார வசந்தம் பகுதிக்கு உங்களிடமிருந்து தகுந்த படைப்புகள் எதிர்பார்க்கப்படுகின்றன. எனவே, உங்கள் சிந்தனையில் உதிக்கும் புதிய படைப்புகளை அனுப்பி வையுங்கள். அவை தகுதி கண்டு பிரசுரிக்கப்படும். உங்கள் படைப்புகளை அனுப்ப வேண்டிய முகவரி:*

**'வாரவசந்தம்',**
**உதயன்,**
*361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.*

## கையில வெண்ணெயிருக்க...




"அக்கா நீங்கள் குறிப்பைத்தாங்கோவன். நான் நல்ல இடத்தில பொம்பிளை பார்த்துத்தாறன்" என்று புரோக்கர் அவசரப்பட்டு கேட்டுக்கொண்டிருந்தார்.

"தம்பி பிரான்ஸில நிற்கிறார். "காட்"கூடக் கிடைச்சிட்டுது. 38 வயது. கல்யாணம் செய்து மனிசி இறந்து போச்சு. 4 வயதில ஒரு ஆம்பிளைப் பிள்ளையும் இருக்கு. அதுக்கேத்த மாதிரி பொம்பிளையைப் பாருங்கோ" என்று மாப்பிள்ளையின் தாய் விவரங்களை அடுக்கிக் கொண்டிருந்தாள்.

"அதெல்லாம் பரவாயில்லை. வெளிநாடென்று சொல்லுறியள் 'காட்'கூடக் கிடைச்சுட்டுது என்றியள். நல்ல வடிவான பொம்பிளையை நான் பொருத்தித்தாறன் என்று தனது தொழில் வாக்குறுதியைத் திடமாகக் கூறிச்சென்றார் புரோக்கர்.

இரண்டு வாரம் கழிச்சு புரோக்கர் அந்த மாப்பிளையின் வீட்டுக்குப்போனார்.

"நல்ல வடிவான பெட்டை. கம்பஸில படிக்கிது. 20 வயது, நூற்றுக்கு 75% வீதம் பொருத்தமாம்" என்று கூறி போட்டோவையும் , ஜாதகத்தையும் கொடுத்தார் புரோக்கர்.

"தம்பி என்ர மகன் கலியாணம் செய்து ஒரு பிள்ளையிருக்கு. அதோடு 38 வயது என்று சொன்னனீரோ? மீண்டும் புரோக்கரிடம் ஞாபகப்படுத்தினாள்.

"என்னத்தைச் சொல்லுறது இது என்ரை மகள் தானே"

"அது ஒரு பிரச்சினையுமில்லை. மாப்பிள்ளை வெளிநாடுதானே. அங்க போனா எல்லாம் சரிதானே என்று புரோக்கர் அசடுவழிய வெளிநாட்டு மோகமும் , தாகமும் மேலிடசாதாரணமாய் கூறினார்.

பார்த்தீர்களா? சம்பவத்தை இது வொன்றும் கற்பனையுடன் வரையப்பட்டதல்ல யதார்த்தமாய் எம் சமூகத்தில் அண்மையில் நடந்தது.

இப்பொழுதெல்லாம் படிச்சமாப்பிள்ளை,பண்பானவர் என்றெல்லாம் பார்க்கிறதில்லை.

வெளிநாட்டு மாப்பிளை என்றால் சரி. வயது வித்தியாசம், மறுமணம் என்ற தகுதியெல்லாம் பார்ப்பதில்லை. இப்படியான புதிய கலாசாரம் எம்மவர்கள் மத்தியில் தீவிரமாகப் பரவியுள்ளது.

இதனால் இளம் வயதினை உடைய யுவதிகள் பாதிப்புக்குள்ளாகிறார்கள். அத்தோடு எமது தனித்துவமான கலாசாரத்திலும் ஒரு கரும்புள்ளியையும் ஏற்படுத்துகிறது என்பது எல்லோராலும் ஏற்றுக் கொள்ளக் கூடியது.

வெளிநாட்டு மோகத்திலும் அற்ப ஆசைகளை நிறைவேற்றுவதற்காகவும் "கல்யாணம் ஆயிரம் காலத்துப்பயிர்" என்று கூறும் பெரியவர்களே தமது நிகழ்கால சந்தோஷத்துக்காக தமது பிள்ளைகளின் எதிர் காலத்தைப் பற்றி சிந்திக்காது இவ்வாறு செயற்படுவதென்பது மனவேதனைக்குரியது.

எது வந்தபோதும் எமது தனித்துவத்தை நிலைநாட்டுவதில் நாம் மகத்துவம் உடையவர்களாக இருக்கவேண்டும்.

— கஜீரோசன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




16.07.1987

* இனப்பிரச்சினைக்குத்தீர்வாக வடக்கு கிழக்கு இணைந்த சுயாட்சிப்பிரிவொன்று உருவாக்கப்படுவதையே இந்தியா எதிர்பார்ப்பதாக இந்தியத்தூதுவர் டிக்ஷிற், ஜனாதிபதி ஜே.ஆரிடம் தெரிவிப்பு.

* இலங்கையில் நிலவும் தீவிரவாதத்தை இனப் பிரச்சினை எனக்கூறி உலகை நம்ப வைக்கச் செய்யப் பட்டுள்ளதாக பிரதமர் பிரேமதாஸ பிரிட்டிஷ் பிரதமர் மாக்கிரட் தட்சரிடம் தெரிவிப்பு.

* மலையகத்தமிழ் இளைஞர்கள் துப்பாக்கி ஏந்திப் போராட விரும்பினால் யாழ்ப்பாணம் போய் விடுமாறு அமைச்சர் தொண்டமான் தெரிவிப்பு.

17.07.1987

* இந்தியாவின் புதிய ஜனாதிபதியாக தமிழரான ஆர். வெங்கட்ராமன் பதவி ஏற்றிருப்பது இலங்கை இனப்பிரச்சினைத் தீர்வு முயற்சியில் புதிய திருப்பமொன்றை ஏற்படுத்தக் கூடுமென அரசியல் அவதானிகள் விமர்சிப்பு.

* லண்டனுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி பிரேமதாஸவுக்கு எதிராக லண்டனில் தமிழர்கள் ஆர்ப்பாட்டம்.

* இலங்கையில் அமைதி நிலவச் செய்ய இலங்கை அரசு நடவடிக்கை எடுக்குமானால் வன்செயல் பாதிப்புக்களுக்கு நிவாரணம் வழங்குவோம்என உலக நாடுகள் பல முன்நிபந்தனை விதித்திருப்ப தாக நிதி அமைச்சர் றொனி-டி-மெல் தெரிவிப்பு.

18.07.1987

* தமிழர்கள் ஏற்கக்கூடியதான ஒரு தீர்வை இலங்கை அரசு முன்வைக்கவேண்டுமென 3 நாள்களில் இரண்டாவது தடவையாக இந்தியத் தூதுவர் டிக்ஷிற்,ஜனாதிபதி ஜே.ஆரிடம் வலியுறுத்து.

* பயங்கரவாதத்தடுப்புச்சட்டத்தின் கீழ் குற்றம் சாட்டப்பட்ட புளொட் இயக்க உறுப்பினர் ஹென்றி பெரேராவுக்கு நீதிமன்றம் 10 ஆண்டுகள் சிறைத் தண்டனை வழங்கித்தீர்ப்பளிப்பு.

* வூவுனியா விகாராதிபதி விமலகார தேரரின் தமிழக விஜயத்தை அரசியல் தூதாக அங்கீகரிக்க முடியாது என இந்தியத் தூதரக அதிகாரி பூரி தெரிவிப்பு.

19.07.1987

* ஜனாதிபதி ஜே.ஆருக்கும் இந்தியத் தூதுவர் டிக்ஷிற்றுக்குமிடையே இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பாக, கடைசியாக இடம்பெற்ற சந்திப்புக் குறித்து கருத்து வெளியிட்ட காணி அமைச்சர் காமினி திஸநாயக்க, இன்னும் சில தினங்களில் நல்லவை நடைபெறும் எனபூடகமாகத்தெரிவித்தார்.

* வடபகுதியில் வான் தாக்குதல்களை முற்றாக நிறுத்துவது குறித்து பாதுகாப்புப் படைத்தரப்பு ஆலோசித்து வருவதாக செய்தி கசிவு.

20.07.1987

* புதிய யோசனையின் இறுதி வடிவத்தைப் பரிசீலித்து தமது அபிப்பிராயத்தைத் தெரிவிக்கும் வரையில் 'தமிழ்மொழி மாகாணசபை' யோசனை இலங்கை அரசின் யோசனையாக முன்வைக்கப்பட மாட்டாது எனப் பிரதமர் பிரேமதாஸ தெரிவிப்பு.

* பிரபாகரனுடன் ஜனாதிபதி ஜே.ஆர் பேச்சு நடத்தலாம். ஆனால் இந்தியாவை இப் பேச்சுக்களில் சேர்த்துக் கொள்ளக்கூடாது எனப் பிரதமர் பிரேமதாஸ கருத்துத் தெரிவிப்பு.

21.07.1987

* ஈழத்தமிழ்மக்களின் பிரதிநிதிகளாக விடுதலைப்புலிகள் இயக்கத்தையும், தமிழர்களின் தேசியத் தலைவராக பிரபாகரனையும் ஏற்றுக் கொள்ள இந்தியா முடிவு செய்திருப்பதாகத் தகவல் கசிவு.

* யாழ். மக்கள் அழைத்தால் தாம் யாழ்ப்பாணத்துக்கு வந்து நிலைமையை அவதானிக்கத் தயாரென ஜனாதிபதி ஜே.ஆர் .தெரிவிப்பு.

* இனப்பிரச்சினை தீர்வு தொடர்பாக, அரசின் புதிய யோசனைகள் குறித்துக்கருத்துத் தெரிவிக்க தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலதிபர் அமிர்தலிங்கம் மறுப்பு.

22.07.1987

* இனப்பிரச்சினை தொடர்பான இடைக்காலத் தீர்வு எதனையும் ஈரோஸ் இயக்கம் ஏற்றுக் கொள்ள மாட்டாது என ஈரோஸ் இயக்கத்தின் சிரேஷ்ட உறுப்பினர் தெரிவிப்பு.

* யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும்' ஈழநாடு' பத்திரிகை நிறுவனத்தின் ஸ்தாபகரும் தலை வருமான கே.சி.தங்கராசா மறைவு.

* விடுதலைப்புலிகளிடம் கைதிகளாக இருக்கும் 12 படையினரை விடுவிக்கும் முயற்சியாக, விடுதலைப்புலிகள் இயக்கத்தின் தலைவர்களுடன் பேச வவுனியா விகாராதிபதி யாழப்பாணத்துக்கு விஜயம் செய்யத்திட்டம்.

23.07.1987

* இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு போ...ளைக்கு நாடாளுமன்றத்தின் அங்கீகாரம் பெற இயலாது போகுமானால் பொதுத்தேர்தலொன்றை நடத்தி அத்தகைய அங்கீகாரத்தை பெற அரசு தயங்காது என ஜனாதிபதி ஜே.ஆர் தெரிவிப்பு.

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் உபதளபதி கிட்டு, தமிழ்நாடு முதலமைச்சர் எம்.ஜி. ஆரைச் சந்தித்து இலங்கை இனப்பிரச்சினைத் தீர்வு குறித்து ஆலோசனை.

* இலங்கை இனப்பிரச்சினை விவகாரத்தை அமெரிக்க காங்கிரஸில் எழுப்பப்போவதாக செனெட்டர் ஜோசப்கென்னடி தெரிவிப்பு.

24.07.1987

* யாழ்.ஆஸ்பத்திரி ஷெல் தாக்குதல் சம்பவம் தொடர்பான தனிநபர் ஆணைக்குழு விசாரணை ஆரம்பம்.

* இனப்பிரச்சினைத் தீர்வு குறித்த பேச்சுக்களில் மத்தியஸ்தம் வகிக்க இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தி இலங்கைக்கு வரவிருப்பதாக காணி அமைச்சர் காமினி திஸநாயக்க தெரிவிப்பு.

* வடக்குக் கிழக்கை இணைக்கும்விடயம் தொடர்பான சமாதான உடன்படிக்கை இரண்டு வார காலத்துள் மேற்கொள்ளப்படுமென ஜனாதிபதி ஜே.ஆர். தெரிவிப்பு.

விசேட பதிப்பு 24.07.1987

* இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் முயற்சியில் பிரதமர் ராஜீவ்காந்தியின் அழைப்பின் பேரில் விடுதலைப்புலிகள் இயக்கத்தலைவர் பிரபாகரன் டில்லிக்குப் பயணம்.

* என்னை மீண்டும் யாழ்ப்பாணம் கொண்டு வந்துவிடும் பொறுப்பை இந்திய அரசு ஏற்றுள்ளது என விடுதலைப்புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரன் தெரிவிப்பு.

25.07.1987

* இனப்பிரச்சினைத் தீர்வுக்கான இரு ஒப்பந்தங்கள் கைச்சாத்தாகும். இலங்கை இந்திய அரசுகளுக்கிடையே முதலாவது ஒப்பந்தமும் இலங்கை அரசுக்கும் தமிழர் அமைப்புக்களுக்கும் இடையில் இரண்டாவது ஒப்பந்தமும் கைச்சாத்தாகும்.

* தமிழ் நாடு முதலமைச்சர் எம்.ஜி.ஆர் விடுதலைப்புலிகள் இயக்கத்தலைவர் பிரபாகரனைச் சென்னையில் சந்தித்துப்பேச்சு

* தமிழ் மக்களது பிரச்சினைக்கு உரிய தீர்வாக தமிழீழமே அமையும் என விடுதலைப்புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரன் அறிவிப்பு.

26.07.1987

* எவ்வளவு தான் கடும் எதிர்ப்பு இருந்தாலும் இனப்பிரச்சினைத் தீர்வுக்கான ஒப்பந்தத்தை அமுல்படுத்தியே தீருவேன் என ஜனாதிபதி ஜே.ஆர் உறுதியளிப்பு.

* இனப்பிரச்சினைத்தீர்வுக்கான இரு ஒப்பந்தங்களுக்கு மேலதிகமாக இலங்கை- இந்திய ஒப்பந்தம் மற்றும் ராஜீவ்-பிரபா ஒப்பந்தம் என மேலும் இரு ஒப்பந்தங்கள் மேற் கொள்ளப்படுமெனத் தெரிவிப்பு.

* தாம் யாழ்ப்பாணம் வந்திருந்த போது யாழ்ப்பாண மக்களுக்கு வழங்கிய வாக்குறுதி நிறைவேறும் காலம் வந்துவிட்டதாக இந்திய செஞ்சிலுவைச் சங்கப்பிரதிநிதி தெரிவிப்பு.

27.07.1987

* புலிகள்-இந்திய அதிகாரிகள் பேச்சில் முட்டுக்கட்டை. சர்வஜன வாக்கெடுப்பின்றி வடக்கு-கிழக்கு இணைப்பு- ஆயுதங்களை உடனடியாகக் கையளிக்கமுடியாது என இரு நிபந்தனை களின் அடிப்படையிலேயே புதிய யோசனைகளை ஏற்கமுடியுமென பிரபாகரன் தெரிவிப்பு.

* தமிழர் விடுதலைக்கூட்டணிக்குழு மற்றும் நான்கு இயக்கங்களின் பிரதிநிதிகளுடன் புதுடில்லியில் அரச அதிகாரிகள் நடத்தும் பேச்சில் தமிழக முதலமைச்சர் எம்.ஜி.ஆரும் கலந்து கொள்கிறார்.

* இலங்கையில் புதிதாக ஏற்படும்வன் செயல்களை அடக்க இந்தியத் துருப்புக் கள் இலங் கைக்கு வரும் விதத்திலேயே இந்திய -இலங்கை உடன்பாடு அமைந்திருப்பதாகத் தெரிவிப்பு.

28.07.1987

* புதிய யோசனைகளைத் தாம் நிராகரித்து விட்டதாக இந்திய அதிகாரிகளுக்கு விடுதலைப் புலிகள் உத்தியோகபூர்வமாக தெரிவிப்பு.

* இனப்பிரச்சினை தொடர்பான இலங்கை அரசின் புதிய யோசனைகளை எதிர்த்து அம்பாறையில் ஆர்ப்பாட்டம்.

* கிழக்கில் நடத்த உத்தேசித்திருக்கும் சர்வஜன வாக்கெடுப்பை இலங்கை-இந்திய உடன்பாடு அமுலுக்கு வந்து ஆறுமாத காலத்துள் நடத்த வேண்டுமெனப் பிரதமர் பிரேமதாஸ தெரிவிப்பு.

29.07.1987

* ஈழத்தமிழர்களுக்கு இந்தியா துரோகம் இழைத்து விட்டதாக விடுதலைப்புலிகள் இயக்கத்தலைவர் பிரபாகரன் தெரிவிப்பு.

* புதிய சமாதான உடன்பாட்டை எதிர்த்து கொழும்பு நகரில் பெரும் கலவரம். பொலிஸாரின்துப்பாக்கிப் பிரயோகத்தில் 18 பேர் மரணம்.

30.07.1987

* இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பாக இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தியும் இலங்கை ஜனாதிபதி ஜே.ஆரும் கொழும்பில் வைத்து ஒப்பந்தத்தில் கைச்சாத்து.

* இந்தியப்பிரதமர் ராஜீவ்காந்திக்கு அளிக்கப்பட்ட வரவேற்புநிகழ்ச்சிகளை பிரதமர் பிரேமதாஸ பகிஷ்கரிப்பு.

* இலங்கை-இந்திய ஒப்பந்தத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து தென்னிலங்கையில் தொடர்ந்தும் வன்செயல்கள் நீடிப்பு.

31.07.1987

* வடபகுதிக்கு வந்திருக்கும் இந்திய அமைதிப் படையினர் யாழ். குடாநாட்டைச் சுற்றிப் பார்த்து பொது மக்களது குறைகளைக் கேட்டறிந்து வருகின்றனர்.

* சுமார் மூவாயிரம் இந்திய அமைதிப் படையினர் தமிழ்ப்பகுதிகளில் உள்ள இராணுவ முகாம்களில் தரை இறக்கப்பட்டனர்.

* கொழும்பு ஜனாதிபதி மாளிகையின் முன்னால் இந்தியப் பிரதமருக்கு அளிக்கப்பட்ட பிரியாவிடை அணிவகுப்பு மரியாதையின் போது கடற்படை...

# அனைத்து மோசடிகளுக்கும் ஜனாதிபதியே காரணகர்த்தா என்கின்றார் மங்கள சமரவீர

கொழும்பு, ஜன. 29

ஜனாதிபதி என்ற போர்வைக்குள் இருந்து கொண்டு நாட்டில் மிக பயங்கரமான அழிவை மஹிந்த ராஜபக்ஷ மேற்கொண்டு வருகிறார். ஜனாதிபதியே அனைத்து மோசடிகளுக்கும் காரண கர்த்தா. வாக்குகளை எண்ணும்போது மோசடிகள் இடம் பெற்றுள்ளன. தேர்தல்கள் ஆணையாளர் துப்பாக்கி முனையின் முன் நின்று கொண்டு பேசுவதுபோல நேற்று முன் தினம் உரையாடியதைக் காணக் கூடியதாக இருந்தது.

- என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மக்கள் பிரிவுத் தலைவர் மங்கள சமரவீர நேரடியாகக் குற்றம் சாட்டியுள்ளார்.

ராஜகிரியவிலுள்ள கட்சியின் தலைமையத்தில் நேற்று முன்தினம் வியாழக் கிழமை மாலை இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்த போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

தேர்தல் முடிவுகளை ஏற்றுக் கொள்ளவோ அது தொடர்பில் திருப் பதி அடையவோ முடியாது. 1933ஆம் ஆண்டு ஜேர்மனியில் ஹிட்லர் மோசடிகள் மூலமே வெற்றிபெற்றார் என்று எல்லோருக்கும் தெரியும் அதேபோன்று தான் மஹிந்த ராஜபக்ஷவும் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்றுள்ளார்.

மக்களின் வாக்குகள், எண்ணங்கள், கருத்துக்கள் எல்லாம் கடந்த 26ஆம் திகதி கொள்ளையிடப்பட்டுள்ளன. அரச வளங்கள், சொத்துக்கள் சட்ட விரோதமாகப் பயன்படுத்தப்பட்டது என்பதை தேர்தல்கள் ஆணையாளர் ஏற்றுக் கொண்டுள்ளார்.

தேர்தல் தினத்தன்றும் அதற்கு அடுத்த நாளும் ரூபவாஹினி ஊழியர்களுக்கு விடுமுறை வழங்கப்பட்டு அலரி மாளிகையிலிருந்தே நிகழ்ச்சிகள் ஒளிபரப்பு செய்யப்பட்டன. இந்த ஒளிபரப்பு கோத்தபாய ராஜபக்ஷவின் கண்காணிப்பில் இடம்பெற்றது.

தேர்தல் ஆணையாளரின் கடமைகளை பஸில் ராஜபக்ஷவே செய்து முடித்தார் வாக்குப்பெட்டிகளை ஒரு சில மணி நேரத்துக்குள் தன்னால் பாதுகாக்க முடியாது என்று தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸாநாயக்க புதனன்று இடம் பெற்ற வைபவத்தில் கூறியது கவனிக்கத்தக்கது-என்றார். (க)

# கடத்தப்படுவோர் தகவல்களை அறிய முடியா நாடுகளின் பட்டியலில் இலங்கையும் சேர்ப்பு

கொழும்பு, ஜன. 30

கடத்தப்பட்டு தகவல்களை அறிய முடியாத வண்ணம் பொதுமக்கள் தடுத்து வைக்கப் பட்டு வருகின்ற நாடுகளின் பட்டியலில் இலங்கையும் உள்ளடக்கப் பட்டுள்ளது. ஐக்கிய நாடுகள் சபையின் சுயாதீன மனித உரிமைகள் ஆய்வாளர்கள் வெளியிட்டுள்ள 221 பக்க அறிக் கையில் இந்த செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

அதிகாரம் மிக்க சில இராணுவக் குழுக்களால் பொது மக்கள் கடத்திச் செல்லப் பட்டு குறிப்பாக தமிழ் மக்கள் கடத்திச் செல்லப்பட்டு தகவல் அறியாத வண்ணம் தடுத்து வைக்கப்படுகின்றனர்.

இவ்வாறு இரகசியமான முறையில் தடுப்பு சிறைகளை வைத்திருப்பதற்கு இலங்கை அரசு கடந்த 1992ஆம் ஆண்டு இராணுவத்தினருக்கு சட்ட ரீதியான அதிகாரம் வழங்கியிருக்கிறது என அதில் கூறப்பட்டுள்ளது.

இவ்வாறு கடத்திச் செல்லப்பட்டு சித்திரவதை செய்யப்படுகின்ற முகாம் களுக்கு உதாரணமாக கொழும்பு, கொள்ளுப்பிட்டி, காலி வீதியில் உள்ள இராணுவமுகாம் ஒன்றில் காணப் படுகின்ற இரகசிய சித்திரவதை முகாமை சுட்டிக்காட்டியுள்ளது.

இதேவேளை கடந்த 1993ஆம் ஆண்டு முதல் இலங்கையில் அமுலாகி யுள்ள அவசரகால சட்டமும் இதற்கு இராணுவத் தினருக்கு மேலும் அதிகாரத்தை வழங்குகிறது. இந்தச் செயல்களை இராணுவ உடை அல்லது பொது மக்கள் போன்ற சிவில் உடை தரித்த பாதுகாப்புத் தரப்பினரே மேற்கொண்டு வருகின்றனர் என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான சம்பவங்கள் நடைபெறும் ஏனைய நாடுகளாக சீனா, பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், ஈரான் போன்ற நாடுகள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

# வாக்காளர் பதிவுக் கணக்கெடுப்பின் மூலம் வாக்கு மோசடிகள் குறித்த விவரம் அறியலாம்

## தேர்தல் கண்காணிப்பாளர்கள் கருத்து

கொழும்பு, ஜன. 30

வாக்காளர் பதிவு தொடர்பில் கணக் கெடுப்பு நடத்துவதன் மூலம் வாக்கு மோசடிகள் குறித்து அறிந்துகொள்ள முடியும் என வெளிநாட்டு தேர்தல் கண் காணிப்பாளர்கள் சுட்டிக்காட்டி யுள்ளனர்.

மோசடி தொடர்பான குற்றச்சாட்டுக்களுக்கு தேர்தல் ஆணையாளர் விளக் கம் அளிப்பார் என தாம் எதிர்பார்க்கின் றனர் என சுதந்திரமான தேர்தல்களுக் கான ஆசிய வலையமைப்பின் தலை வர் இச்சால் சுபிராடி தெரிவித்துள்ளார்.

வாக்கெடுப்பில் மோசடி நடை பெற்றுள்ளதாக சுமத்தப்படும் குற்றச் சாட்டுக்கு தீர்வாக மீள் கணக்கெடுப்பு அல்லது மீள் வாக் கெடுப்பு நடத்துவது குறித்து கட்சிகளுக்கு இடையில் இணக்கப்பாடு எட்டப்பட வேண்டுமெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தேர்தல் முறைகேடு தொடர்பில் எதிர்க்கட்சிகளின் பொது ஜனாதிபதி வேட் பாளர் முறைப்பாடு செய்ய முடியும் எனவும், அது தொடர்பில் விசாரணை நடத்த வேண்டிய பொறுப்பு தேர்தல் ஆணையாளருக்கு உள்ளது எனவும் அவர் தெரிவித் துள்ளார்.வாக்காளர் பதிவுப் பட்டியல் தொடர்பான கணக்கெடுப்பின் மூலம் தேர் தல் மோசடி குறித்த விசாரணைகளை நடத்த முடியும்.

நியாயமான முறையில் தேர்தல் நடத்தப் பட வேண்டுமாயின் சுயதீனமான தேர்தல் செயலகமும் நீதிமன்றக் கட்டமைப்பும் அவசியம் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஆட்சி அதிகாரத்தில் இருக்கும் தரப் பினர் மோசடிகளில் ஈடுபடக் கூடிய சாத் தியம் காணப்படுகிறது.

வவுனியா, கிளிநொச்சி, திருகோணமலை, மட்டக்களப்பு, கண்டி, யாழ்ப் பாணம் போன்ற பிரதேசங்களில் வரையறுக்கப்பட்ட வகையிலேயே கண் காணிப்பு பணிகளை மேற்கொள்ள சந்தர்ப் பம் அளிக்கப்பட்டது எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# பெண்களுக்கு வேலைவாய்ப்பு வழங்க ஊரெழுவில் தொழில் நிலையம் ஆரம்பம்

முழுமையான பெண் தொழிலாளர்களைக் கொண்ட சிமெந்து அரிகல் உற்பத்தி நிலையமொன்று ஊரெழுவில் அமைக்கப்பட்டுள்ளது.

"றெடிபில்ட் லங்கா பிறைவேற் லிமிட்டட்" என்ற பெயரில் தனியார் நிறுவனம் ஒன்றை யூரோவில் இன்ஜினியர்ஸ் அன்ட் கொன்ஸ்ரக்டர்ஸ் பிறைவேற் லிமிட்டட் நிறுவனம் ஆரம்பித்துள்ளது.

இந்த நிறுவனத்தின் பிரதான நிறைவேற்று அதிகாரியிலிருந்து தொழிலாளர்கள் அனைவருமே பெண்களாகவே இருப்பர்.

அத்துடன் உதவி தேவைப்படும் பெண் தலைமைத்துவக் குடும்பங்களைச் சேர்ந்தவர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்குவதே இந்த நிறுவனத்தின் முக்கிய குறிக்கோளாகும்.

மேசன் வேலைப் பயிற்சி பெற்றவர்களும், இத்துறையில் ஆர்வம் உள்ளவர்களும் ... தொடர்பு கொள்ளுமாறு அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத் ... கே. சிவஞானம் கேட்டுள்ளார். (1-16)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆக்கத்திறன் போட்டியில் நெடுந்தீவு ம.வி.முதலிடம்

நெடுந்தீவு கோட்ட மாணவரிடையே நடத்தபட்ட மதர் ஸ்ரீ- லங்கா செயற்றிட்டத்தினூடான மாணவர் ஆக்கத்திறன் போட்டிகளில் நெடுந்தீவு ம.வி முதலிடம் பெற்றுள்ளது. ''நான் மாறினால் நாடு மாறும்'' எனும் தலைப்பில் நடத்தப்பட்ட நாடக நிகழ்விலே இரண்டாம், மூன்றாம் இடங்களை முறையே நெடுந்தீவு சைவப் பிரகாச வித்தி., நெடுந்தீவு சீக்கிரியாம் பள்ளம் அ.த.க. என்பன பெற்றதாக நெடுந்தீவுக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்தார். (1-267)


இழந்த சக்தியை மீண்டும் பெற்றிடப் பாவியுங்கள்
றோயல் குளுக்கோஸ்
100% சுத்தமானது
உங்கள் வியாபாரிகளிடம் நீங்கள் குளுக்கோஸ் வாங்கும்போது குளுக்கோஸ் என்று கேட்காமல்
றோயல் குளுக்கோஸ் தாருங்கள் என்று கேட்டு வாங்குங்கள்.
PACKED BY: ROYAL Industries Colombo 12 T.P. 0777277670
அனைத்துப் பாமசிகளிலும் கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.


ஏக விநியோகஸ்தர்கள்:
288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.


## அரச காணிகளைச் சொந்தமாக்கும் மக்கள்

வண்ணை, ஜன.30

கடந்த சில தினங்களாக யாழ்.நகரின் தெற்குக் கரையோரங்களில் அமைந்துள்ள அரச காணிகளை மக்கள் போட்டிபோட்டுத் தமக்காக்க முனைந்துள்ளனர்.

முன்னாள் மாநகர சபை அமைந்திருந்த காணிக் கட்டடங்களின் இடிபாடுகள் நீக்கி வெளியாக இருந்து வருகிறது. அதனையும் சூழ்ந்துள்ள காணிகளுக்கான எல்லைகளை மக்கள் அமைத்து வைத்துள்ளதைக் காண முடிகிறது.

இதனைப் பார்த்த வேறுசிலர் 'துரையப்பா விளையாட்டரங்கையும் விடமாட்டார்கள்' எனத் தெரிவிப்பதையும் கேட்கக் கூடியதாக இருக்கின்றது. (1-160)

## கசிப்புக் கோடா பெருமளவில் பிடிபட்டன

பண்டத்தரிப்பு, ஜன.30

வடலியடைப்பு, பண்டத்தரிப்பில் பெருமளவில் கசிப்பு, கோடா மற்றும் அவை தயாரிப்பதற்கான உபகரணங்கள் என்பன இளவாலைப் பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டு மல்லாகம் நீதிமன்றில் ஒப்படைக்கப்பட்டன.

கடந்த வாரம் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட ஒருவரிடம் மல்லாகம் நீதிமன்று ஒரு லட்சத்து ஐம்பதாயிரம் ரூபா குற்றப்பணம் அறவிட்டதாக இளவாலை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி டபிள்யூ.எம். ஜே.பி.வியஜரட்ண தெரிவித் தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், கடந்த சில மாதங்களாக தனது கடமைப்பிரதேசத்தில் கசிப்பு உற்பத்தி முற்றாக ஒழிக்கப்பட்டிருந்ததாகவும் ஆனால் திரும்பவும் மக்கள் கசிப்பு உற்பத்தியில் ஈடுபடுவதைத் தவிர்த்துக் கொள்வதுடன் சட்டங்களை மதித்து நடக்க வேண்டுமெனவும் தெரிவித்தார். (130)

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமக

### ஐந்தாம் ஆண்டு கண்ணீர்ப் பூக்கள்

| ஜனனம் | மரணம் |
|---|---|
| 29 | 30 |
| 11 | 01 |
| 1948 | 2005 |



எமது குடும்பத் தீபம்

**திருமதி தங்கரட்ணம் ருக்குமணிதேவி**

துயரிலா வாழ்வுக்குத் துணையாகி நின்றாய்- எம்
உயர்வுக்காய் நீ நாளும் மெழுகாகிப் போனாய்!
அருகிலே நீயின்றி ஐந்தாண்டுகள் இன்று
அருவியாய் எம் கண்ணில் பெருகுதுன் அன்பு
வருகிறாய் வருகிறாய் என ஏங்குகின்றோம்!
ஏன் இன்னும் வரவில்லை? எமதன்பு அம்மா!

தங்கராஜா அன்சன்ஸ்,
டச்சு வீதி, உடுவில்.
தொ.பே.: 021 2240990.

நீங்கா நினைவுகளுடன்:
கணவர், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(94313)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



தோற்றம்: 10.06.1922 — மறைவு: 31.12.2009

### கலாபூஷணம் சைவப்பெரியார் சின்னப்பு அரசஇரத்தினம் (ஜே.பி.)

*(மானிப்பாய் இந்துக் கல்லூரி, கனிஷ்டபிரிவு மற்றும் உடுவில் முருக மூர்த்தி வித்தியாசாலை ஆகியவற்றின் முன்னாள் அதிபர், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் ஸ்தாபக உறுப்பினர்)*

அன்பின் பிறப்பிடமாய்
பாசத்தின் உறைவிடமாய்
பண்பின் சிகரமாய்
ஊருக்கெல்லாம் உத்தமனாய்
எமக்கெல்லாம் நல்ல ஆசானாய்
வாழ்ந்த எங்கள் தெய்வமே!
நீங்கள் மறைந்து மாதம்
ஒன்று முடிந்ததப்பா!
ஆறவில்லை எம் துயரமப்பா!
உங்கள் ஆத்மா சாந்தியடைய
எல்லாம் வல்ல வெட்டுக்கட்டைப்
பிள்ளையாரைப் பிரார்த்திக்கின்றோம்.

எமது குடும்பத் தலைவரின் வீட்டுக் கிருத்திய நிகழ்வு இன்று (30.01.2010) சனிக்கிழமை மு.ப.10 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். இந்த நிகழ்விலும்அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

சங்குவேலி வடக்கு,
மானிப்பாய். (94308)

குடும்பத்தினர்.


FREE
COMPUTER SCHOLARSHIP
பரீட்சை நாள் JANUARY 31st SUNDAY
அனுமதிகளை எமது பயிற்சி மையங்களிலும் வெளிப்போகு நிலையங்களிலும் பெறலாம்.
கணினிப்பாடநெறிகள் அனைத்திற்கும்.....
75% வரை கட்டணக்கழிவு பெறும் வாய்ப்பு
* Free கொம்பியூட்டர் ஸ்கொலர்ஷிப் இற்கு கட்டணம் எதுவும் இல்லை.
* பொதுஅறிவு பொது உளச்சார்பு வினாக்களைக் கொண்ட பரீட்சை.
* பரீட்சை ஒரு மணிநேரம் கொண்டது.
* 15 வயது நிரம்பிய எவரும் பங்குபற்றலாம்.
* இப் பரீட்சைக்கு உச்ச வயதெல்லை இல்லை.
* பரீட்சைப் பெறுபேறுகளை மறுநாள் பெறலாம்

10ஆவது ஆண்டில்
TECHNO WORLD Studies (Pvt) Ltd
344, கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம். 021 4921124



C.P.T.
CAUSEWAY PAINTS
Sunny HI - Build Lacquer
Pearl/Metalic HI - Build Lacquer
Computer Mixing செய்து Debeer பெயின்ட் முதல் முறையாக யாழ்.நகரில் (Holland) இல் தயாரிக்கப்பட்ட No.1 பெயின்ற் கொழும்பு விலையில்
Sunny Auto பெயின்ற் கூடிய விலைக் கழிவில் பெற்றுக்கொள்ளலாம்.


மற்றும் கோஸ்வே பெயின்ற் வகைகள் குறைந்த விலையில் கீழ் காணும் முகவரியில் பெற்றுக்கொள்ளலாம்.
Aashaa Merchant (Pvt) Ltd,
No.137, Palaly Road,
Post box Junction, Thirunelvely.
ஆசா மேர்சன்ற் (பி) லிமிட்டெட்
137, பலாலி வீதி,
தபால்பெட்டிச் சந்தி,
திருநெல்வேலி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரு வெற்றியீட்டிய ஜனாதிபதி ராஜபக்ஷவின் முன்னால் உள்ள சவால்கள்!

இரண்டாவது பதவிக்காலத்தில் நிறைவேற்றி முடிப்பதற்காக மஹிந்த ராஜபக்ஷ முன் நீண்டதொரு பட்டியல் பதவிக்காலத்திற்கு இன்னும் இரு ஆண்டுகள் இருக்கும் நிலையில் தேர்தலை முன்கூட்டியே நடத்தும் தீர்மானத்தினால் ஏற்பட்டிருந்த கடுமையான போட்டியில் வெற்றி பெற்றிருக்கும் மஹிந்த ராஜபக்ஷ தமது இரண்டாவது பதவிக் காலத்தின் போது பல்வேறு சவால்களை எதிர்கொள்ள நேரிடும் சாத்தியம் காணப்படுகிறது.

மற்றொரு 6 வருட பதவிக் காலத்திற்கு மக்கள் ஆணையைப் பெற்றிருக்கும் ராஜபக்ஷ இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணும் விடயத்திற்கு அப்பால் சிங்கள மக்கள் மத்தியில் அரசியல் ரீதியாக ஆழமாக துருவமயப்பட்டிருக்கும் பிரச்சினைக்குத்

விடயங்களை விவாதிப்பதிலும் பார்க்க இதரவிடயங்கள் தொடர்பாக பிரசார மேடைகளில் இரு பிரதான போட்டியாளர்களும் விமர்சித்து வந்த தன்மை தேர்தல் வேளையில் காணப்பட்டது. ராஜபக்ஷவும் பொன்சேகாவும் சிங்கள தேசியவாத கடும் போக்காளர்களாகக் கருதப்படுபவர்கள். சிங்கள மக்களால் அவர்கள் ஜஇருவரும் யுத்த கதாநாயகர்களாகக் கருதப்பட்டவர்கள். ஆனால், கிராமப் புற சிங்கள மக்கள் மத்தியில் ராஜபக்ஷவிற்கு அதிகளவு ஆதரவு இருந்ததைத் தேர்தல் முடிவுகள் வெளிக்காட்டியுள்ளன.

இந்த இரு பிரதான போட்டியாளர்கள் மத்தியிலும் சிங்கள மக்களின் வாக்குகள் பிளவுபட்டிருந்த நிலையில், தமிழ் மக்கள் ஜனாதிபதியைத் தெரிவு செய்வதில் முக்கிய காரணியாக இருப்பார்கள்

கொண்டதாகக் காணப்படுகிறது. இவற்றுக்குத் தீர்வு காணப்படவேண்டிய தேவை உள்ளது. தேர்தல் பிரசார வேளையில் காணப்பட்ட இந்தத் தன்மையானது தேர்தலுக்குப் பின்னர் சுலபமாக இல்லாமல் போய்விடுமென கூறிவிட முடியாது.

தேர்தல் சமயத்தில் அரசுக்குச் சொந்தமான தொலைக்காட்சிகள், செய்திப் பத்திரிகைகள் என்பனவற்றை ராஜபக்ஷவின் முகாமானது அரச அதிகாரத்தைப் பயன்படுத்தி பிரச்சார நடவடிக்கைகளில் ஈடுபட்ட தன்மையைப் பார்க்கையில் இந்த விடயத்தை அரசியல் எதிரிகள் எளிதில் மறந்துவிட மாட்டார்கள் என்ற தன்மை காணப்படுகிறது.

தனது அரசியல் எதிரிகளுடன் ராஜபக்ஷ நல்லிணக்கக் கரத்தை

இனப் பிரச்சினைக்கும் ஏனைய விடயங்களுக்கும் தீர்வு காண்பதற்கு ராஜபக்ஷவிற்கு 6 வருடங்கள் இருக்கின்றன. இந்த வருடங்களை பொன்சேகாவுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதில் செலவழித்தால் அது பரிதாபத்திற்குரிய விடயமாக அமையும். பாதுகாப்புத் தொடர்பான விடயங்கள் மற்றும் ஊழல்கள் தொடர்பாக பொன்சேகாவின் குடும்பத்திற்குத் தொடர்பிருப்பதாகத் தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டுகளை அரசு தோண்டி எடுத்து வெளிப்படுத்தும் சாத்தியப்பா டும் காணப்படுகிறது.

பொன்சேகா அரசியலுக்குள் பிரவேசித்தமையானது இராணுவத்தை அரசியல் மயமாக்கி விட்டதாகக் குற்றச்சாட்டு ஒன்றும் தெரிவிக்கப்படுகிறது. உண்மையில் இராணுவத்தை அரசியல் மயமாக்கல் விவகாரமானது அண்மைய வாரங்களில் புதிய பரிமாணத்திற்கு இட்டுச் சென்றது. இந்த விவகாரத்தில் ஏதோ ஒரு விதத்தில் பொன்சேகா பங்களிப்பைச் செலுத்தியிருக்கிறார். பல சிரேஷ்ட இராணுவ அதிகாரிகள் அரச ஊடகங்களில் பேட்டிகளை வழங்கியுள்ளனர்.

இராணுவத்தை அரசியல் மயமாக்குதல் பல தசாப்தங்களாக நீடித்திருப்பதாக அரசியல் விமர்சகர் டி.பி.எஸ்.ஜெயராஜ் சுட்டிக்காட்டியுள்ளார். ராஜபக்ஷவின் முதலாவது பதவிக் காலத்தின் போது

தீர்வு காணவேண்டிய தேவையும் காணப்படுவதாக 'ஏசியா டைம்ஸ்' கடந்த புதன்கிழமை சுட்டிக்காட்டியிருக்கிறது.

கடந்த புதன்கிழமை அரச தொலைக்காட்சி ராஜபக்ஷவின் வெற்றியை அறிவித்திருந்தது. வாக்கு எண்ணிக்கை



பூர்த்தியடைந்துவிட்டதாக தேர்தல் ஆணை யாளர் உத்தியோகபூர்வமாக அறிவிப்பதற்கு முன்னரே அரச தொலைக்காட்சி வெற்றியை அறிவித்திருந்தது. ராஜபக்ஷவின் பிரதான தேர்தல் போட்டியாளரான ஜெனரல் சரத் பொன்சேகா தங்கியிருந்த ஹோட்டலை படையினர் சூழ்ந்திருந்தனர் எனத் தெரிவிக்கப்பட்டது. பொன்சேகாவுடன் ஹோட்டலில் இராணுவத்திலிருந்து தப்பியோடிய சுமார் 100 பேர் தங்கியிருந்தனர் என அரச வட்டாரங்கள் தெரிவித்தன.

பொன்சேகா கண்காணிப்புக்குட்படுத்தப்பட்டிருப்பதாக இராணுவத்தின் சிரேஷ்ட வட்டாரமொன்றும் ஜனாதிபதியின் உதவியாளரும் தெரிவித்தனர். சதிப்புரட்சியை நோக்கி அவர் முதல் அடியை எடுத்து வைப்பதற்கு அரசு விரும்பவில்லை என இராணுவ அதிகாரி ஒருவரை மேற்கோள்காட்டி 'ராய்ட்டர்' செய்திச் சேவை கூறியிருந்தது. இலங்கை அரசியலானது புதிய கட்டத்திற்குள் பிரவேசித்திருப்பதாக தோன்றுகிறது. தேர்தலுக்குப் பின்னரான வன்முறைகள் எதிர்பார்க்கப்பட்டவையாக இருந்தன. அரசினால் பொன்சேகா கைது செய்யப்படும் சாத்தியமிருப்பதாகவும் ஊகங்கள் தெரிவிக்கப்பட்டிருந்தன.

தேர்தல் பிரசாரம் மிகவும் கசப்பானதாகக் காணப்பட்டது. ராஜபக்ஷவும் பொன்சேகாவும் அவர்களின் ஆதரவாளர்களும் தனிப்பட்ட ரீதியில் கடுமையாக விமர்சித்து வந்தமையை காணக்கூடியதாக இருந்தது. வன் செயல்களும் இடம்பெற்றிருந்தன. நாடு எதிர்நோக்கும் முக்கியமான

என்ற எதிர்பார்ப்பை நடந்து முடிந்த தேர்தல் முடிவுகள் மாற்றியமைத்துள்ளன.

* வட, கிழக்கு தமிழ் மக்களை பிரதிநிதித்துவப் படுத்தும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஜெனரல் பொன்சேகாவுக்குத் தேர்தலில் ஆதரவளித்த போதும் பொன்சேகா பெற்ற வாக்குகளில் பாரிய வித்தியாசத்தை தமிழ் வாக்குகள் ஏற்படுத்தவில்லை. ஏனெனில் அங்கு வாக்களிப்பு வீதம் குறைவாகவே காணப்பட்டது. இதனால் ராஜபக்ஷவிற்கு சாதகமான நிலைமை ஏற்பட்டதாகத் தோன்றுகிறது. அரசினால் அந்நியப்படுத்தப்பட்ட தன்மையும் வேட்பாளர்கள் மத்தியிலான எவரைத் தேர்ந்தெடுப்பதென்ற விடயமும் அவர்களை வாக்களிப்பில் இருந்தும் தூர விலத்தி வைக்கும் தன்மையை ஏற்படுத்தியிருந்தது.

* தனது இரண்டாவது பதவிக் காலத்தில் நிறைவேற்ற வேண்டிய நீண்ட பட்டியலை ராஜபக்ஷ கொண்டிருக்கிறார். உடனடியாக இடம்பெயர்ந்த தமிழர்களுக்கு புனர்வாழ்வளிக்க வேண்டிய தேவை அவர் முன் உள்ளது. அத்துடன் இனநெருக்கடிக்கு அரசியல் தீர்வு காண்பது தொடர்பான பிரச்சினையும் அவரின் கவனத்திற்காகக் காத்து நிற்கிறது. இனநெருக்கடி மிக மோசமானதாக இருந்து வருகிறது.

ஆதவன்

இதற்குத் தீர்வு காணப்படாவிட்டால் தமிழ் மக்கள் அந்நியப்படுத்தப்பட்ட தன்மை அதிகரிப்பதுடன், மீண்டும் ஆபத்தான நிலைமை ஏற்படும் சாத்தியம் காணப்படுகிறது.

சிங்களவர்கள் மத்தியில் அரசியல் ரீதியில் துருவமயப்படுத்தப்பட்ட தன்மை காணப்படுகிறது. தேர்தல் பிரசாரத்திற்கு முன்னர் இந்தத் தன்மை பாரியளவில் காணப்படவில்லை. ஆட்களின் பேரைக் குறிப்பிட்டு தனிப்பட்ட ரீதியில் விமர்சித்தல் தேர்தல் பிரசாரங்களில் அதிகமாகக் காணப்பட்டது. உயர் மட்டத்தில் கூட இந்த விடயம் மட்டுப்படுத்தப்பட்டதாகக் காணப்படவில்லை. இது ஆத்திரம், பழிவாங்கும் த...

நீட்டுவாரா? இந்த விடயத்தில் சாத்தியமற்ற தன்மையே காணப்படுகிறது. விடுதலைப் புலிகள் தோல்வி கண்ட பின்னர் தமிழர்கள் மீது நல்லிணக்கக் கரத்தை நீட்டுவதற்கு விருப்பமற்ற தன்மையையே அவர் வெளிப்படுத்தியிருந்தார். இப்போது அவர் அதனை வெளிப்படுத்துவது சாத்தியமற்றதாகக் காணப்படுகிறது.

தேர்தல் போட்டியில் பொன்சேகா இறங்கிய போது தன்னை ஓரங்கட்டியதாக ஜனாதிபதிக்கு எதிராக அவர் பழிவாங்கும் விதத்திலான குற்றச்சாட்டுகளைத் தெரிவித்திருந்தார். அந்தத் தன்மையே அவரின் முன்னகர்வுகளின் நோக்கமாகக் காணப்பட்டது. இலங்கைக்கு எதனைச் செய்ய அவர் விரும்புகிறார் என்ற தொலைநோக்கு வெளிப்படுத்தப்பட்ட தன்மை காணப்படவில்லை. இப்போது எதிர்வரும் மாதங்களில் இந்தப் பழிவாங்கும் தன்மை ராஜபக்ஷவின் நடவடிக்கைகளில் மேலோங்கும் தன்மை காணப்படுகிறது. பொன்சேகாவின் விசுவாசமற்ற தன்மையை அவர் மறந்து விடும் சாத்தியம் இல்லை. அல்லது அவர் தெரிவித்த பாரதூரமான குற்றச்சாட்டுகளையும் மறந்துவிடுவதற்கான சாத்தியப்பாடு காணப்படவில்லை. இந்த விடயமானது பொன்சேகாவிற்குப் பாடம்படிப்பதற்கான சகல வழிமுறைகளையும் ராஜபக்ஷவின் அரசு பயன்படுத்தும் என்ற எண்ணப்பாட்டைத் தோற்றுவிக்கிறது.

செவ்வாய்க்கிழமை வாக்களிப்பு நடந்த சில மணிநேரத்திலேயே ஜெனரலுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கும் திட்டங்களை ராஜபக்ஷ முகாம் சுட்டிக்காட்டியிருந்தது. வாக்காளர் இடாப்பில் தனது பெயர் இல்லாததால் பொன்சேகாவால் வாக்களிக்க

முடியாமல் போய்விட்டது. இது அவர் தேர்தலில் போட்டியிடுவதற்குத் தகுதியற்றவர் என்ற குற்றச்சாட்டுகளை அமைச்சர்களும் ஆளுங்கட்சித் தலைவர்களும் தொடுப்பதற்குக் காரணமாகக் காணப்பட்டது. இந்த உண்மையை - அதாவது வாக்காளர் இடாப்பில் தனது பெயரில்லாத உண்மையை - அவர் மறைத்து வைத்துவிட்டார் எனக் குற்றஞ்சாட்டப்பட்டது. ஆனால், தேர்தலில் போட்டியிடுவதற்கு வாக்காளர் இடாப்பில் பதிவு செய்யப்பட்டிருக்க வேண் டிய அவசியமி ல்லையென தேர்... தெளிவுபடுத்தியது.



சிங்கள பௌத்த கடும் போக்குக் கட்சிகளான ஜாதிக ஹெல உறுமய போன்றவை படைகளுக்கு ஆள்திரட்டுவதற்கு மிக உற்சாகமாக ஊக்குவிப்பை வழங்கி வந்தன.

பொன்சேகா இராணுவ சதிப்புரட்சிக்குத் திட்டமிடுகிறார் எனக் கடந்த வருடம் குற்றச்சாட்டுகள் தெரிவிக்கப்பட் டிருந்தன. ஜனாதிபதிக்கும் ஜெனரலுக்கும் இடையிலான உறவுகள் விரிசலடைந்ததன் பின்னணியில் இது முக்கியமான காரணியாக இருந்ததாக நம்பப்படுகிறது.

பொன்சேகா சதிப்புரட்சியை மேற்கொள்ளத் திட்டமிடுவதாகத் தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டுகள் உண்மையாக இருந்தால் தற்போது ஈட்டியிருக்கும் வெற்றியை பொன்சேகா பறித்துக் கொள்ள ஜனாதிபதி ராஜபக்ஷ ஒருபோதும் இடமளிக்கப்போவதில்லை.

நன்றி: 'இன்போதமிழ்' இணையம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

### மேடம்



எதிர்பாராத செலவுகளால் அவதிப்படலாம். சக ஊழியர்கள் தொடர்பான விவகாரங்களில் விட்டுக் கொடுத்துச் செல்ல வேண்டும். சிறு உடல் உபாதைகளைச் சந்திக்கலாம். ஆதாயத்தை எதிர்பார்த்துச் செய்த வேலை ஒன்றில் எதுவும் கிடைக்காமல் போகலாம். தொழில் ரீதியான அலைக்கழிவுகளுக்கு ஆள்படலாம்.

### இடபம்



மனக் குறைகள் தீர்ந்து நிம்மதி பெறும் நாள். மாமன், மைத்துனர்கள் வழியில் மனதிற்கு இனிய உதவி கிடைக்கும். முக்கியமான நிகழ்ச்சிகளுக்காக வெளியூர்ப் பயணம் செல்லலாம். கடந்த காலத்தில் உதவி செய்த ஒருவரை நினைத்துப் பார்ப்பீர்கள். பல மணி நேரமாகும் என நினைத்த வேலை ஒன்று நொடியில் முடியலாம்.

### மிதுனம்



ஒரு வகையில் வந்த வரவுகள் மற்றொரு வகையில் செலவாகும் நாள். வியாபாரிகள் புதிதாகச் சிலருக்கு கடன் கொடுக்கலாம். அடகு வைத்த ஒன்றை மீட்க முற்படுவீர்கள். சில்லரைக் கேலி, கிண்டல் பேசி மகிழ்வீர்கள். தாய் வழியில் அன்புத் தொல்லைகளைச் சந்திக்கலாம். வழக்கமான பணிகளில் தடை, தாமதம் ஏற்படலாம்.

### கடகம்



முன்னேற்றப் பாதையில் அடியெடுத்து வைக்கும் நாள். பணிபுரியும் இடத்தில் நண்பர்களின் பாராட்டுக்களைப் பெறலாம். புதிய விடயம் ஒன்றுக்கு அடித்தளம் அமைப்பீர்கள். புதிய ஆடை, அணிகலன்கள் வாங்கத் திராளமாகச் செலவு செய்வீர்கள். நாளை வரும் என நினைத்த பணவரவு இன்றே வரலாம்.

### சிங்கம்



விரயங்களைத் தவிர்க்க விழிப்புடன் செயற்பட வேண்டிய நாள். நண்பர்களை நம்பி ஒப்படைத்த காரியங்கள் நல்ல விதமாக முடிவுக்கு வரலாம். நீங்கள் எதிர்பாராத ஒருவர் உங்களைத் தொடர்பு கொண்டு பேசலாம். கணவன், மனைவி வாக்குவாதங்களைத் தவிர்க்கவும். மறதியால் அவதிகளுக்கு ஆளாகலாம்.

### கன்னி



போட்டி போட்டவர்கள் விலகி, நினைத்ததைச் சாதிப்பீர்கள். சகோதர வழியில் ஏற்பட்ட தொல்லைகள் குறைந்து, அவர்கள் மீதான பாசம் கூடும். பிள்ளைகள் தொடர்பான விடயங்களில் அதிக அக்கறை காட்டுவீர்கள். நடக்குமோ, நடக்காதோ என நினைத்த காரியம் ஒன்று நல்ல விதமாக நடந்து விடலாம்.

### துலாம்



உறவினர்கள் வழியில் மனதிற்கு இனிய உதவிகள் கிடைக்கலாம். புதிய தொழில் தொடங்கும் முயற்சிகளில் நிதானம் அவசியம். பொறியியல் பணியாளர்கள் கூடுதல் வேலைப்பளுவை எதிர்கொள்ளலாம். ஆசைப்பட்ட பொருள் ஒன்றை வாங்கத் திட்டம் போடுவீர்கள். இழுத்தடித்த காரியம் ஒன்று இன்று சுமூகமாக முடியும்.

### விருச்சிகம்



உதிரி வருமானங்கள் கிடைக்கலாம். தந்தையுடன் ஏற்பட்ட மனஸ்தாபம் தீர்ந்து பாசம் அதிகரிக்கும். உறவினர்கள் வழியில் சங்கடம் தரும் அல்லது சந்தோஷம் தரும் செய்தி ஒன்றைக் கேட்கலாம். நினைத்த காரியம் ஒன்று நடக்க வேண்டும் என இறைவழிபாட்டை மேற்கொள்வீர்கள்.கனவுத் தொல்லையுண்டு.

### தனுசு



செலவுகளில் சிக்கனம் காட்ட வேண்டிய நாள். சுயநலமின்றி மற்றவர்களுக்காக சில வேலைகளைச் செய்வீர்கள். திட்டமிட்ட வேலை ஒன்றை சோம்பலால் நாளை செய்யலாம் என மாற்றி அமைப்பீர்கள். நீங்கள் செய்த வேலை ஒன்றை மற்றவர்கள் தாங்கள் செய்ததாகக் காட்டிக் கொள்ளலாம். செவ்வாய் வழிபாடு சிறப்புத் தரும்.

### மகரம்



உழைப்புக்கு ஏற்ற மரியாதை, ஆதாயம் கிடைக்கும் நாள். பெண்கள் மகிழ்ச்சி, உற்சாகமாகக் காணப்படுவர். பொருளுதவிகள் கிடைக்கலாம். கடன் மீதிகள் வரவில்லையே என்ற கவலை மாறி பணம் கிடைக்கும். நண்பர்கள் வட்டம் விரிவடையும். மலை போல் குவிந்த வேலைகளைச் சளைக்காமல் செய்து முடிப்பீர்கள்.

### கும்பம்



பணத் தேவைகள் பூர்த்தியாகும் நாள். கூட்டுத் தொழில் புரிவோர் அனுசரித்துச் செல்ல வேண்டும். பிரபலங்கள் சந்திப்பு நிகழும். தேக ஆரோக்கியக் குறைபாடுகள் அகன்று உற்சாகம் பெறுவீர்கள். புத்திசாலித்தனமாகச் செயற்படுவதன் மூலம் சில விடயங்களில் ஆதாயம் பெறுவீர்கள். உள்ளம் மகிழும் நிகழ்ச்சிகள் நடக்கும்.

### மீனம்



வீண் விவாதங்களைத் தவிர்க்க வேண்டிய நாள். வாய்ப்புகளைச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ள முற்படுவீர்கள். கடனாகக் கொடுத்த பணம் திடீரென திரும்பி வரலாம். தள்ளி வைக்காமல் எந்த வேலையையும் உடனே செய்து முடிக்க வேண்டும். நண்பர் ஒருவர் தங்களின் சொந்த விடயங்களை உங்களிடம் சொல்லலாம்.

---

## மரண அறிவித்தல்

### தவச்செல்வம் கலியுகரதி (கலி)

வீமன்காமம், தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் கந்தரோடை, மடத்தடியை வசிப்பிடமாகவும் இந்தியாவைத் தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட கலியுகரதி 28.01.2010 வியாழக்கிழமை அன்று இந்தியாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தாமோதரம்பிள்ளை-பிள்ளையம்மை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற அம்பலவாணன் மற்றும் பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் தவச்செல்வத்தின் (வவா) அன்பு மனைவியும் இராசாத்தி அம்மாவின் அன்புச் சகோதரியும் தாரணி, பிரசன்னா (ஜேர்மனி), பிரசாத், பிரதீஸ், ஆரணி (இந்தியா) ஆகியோரின் அன்புத் தாயும் மகிந்தன், பமீனா (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியும் சருண்யா, அருண்யா, கருண்யா, லருண்யா, ஆசினி ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இந்தியாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மகள்-தாரணி,
மகிந்தன் (தாரா).

சுன்னாகம். (94338)

## யாழ்.ஆஸ்பத்திரியில் 'பாஸ்' நடைமுறை நிறுத்தம்

யாழ்ப்பாணம், ஜன.30

யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலையில் விடுதியில் தங்கிச் சிகிச்சை பெறும் நோயாளிகளைப் பார்வையிடுவதற்கு நடைமுறையில் இருந்து வந்த 'பாஸ்' முறை நிறுத்தப்பட்டுள்ளது.

கடந்த வாரம் முதல் இந்தப் பாஸ் நடைமுறை நிறுத்தப்பட்டுள்ளது.

ஒரு நோயாளிக்கு 2 ''பாஸ்'' கள் வீதம் வழங்கப்பட்டுவந்தது தெரிந்ததே.(1-78)


## வேலையாள்கள் தேவை

1. உணவு தயாரிப்பாளர் 3. றொட்டி தயாரிப்பவர்
2. உதவியாளர்

அனுபவமுள்ளவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும். சம்பளம் நேரில் பேசித்தீர்மானிக்கப்படும்.

இல.10, மவுண்கார் மேல் வீதி, குருநகர், யாழ்ப்பாணம்.
தொ.பே.: 0776529401. (94340)


## விசேட தேவைக்குரியோருக்கு சண்டிலிப்பாயில் இன்று கூட்டம்

நவாலி,ஜன.30

சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலர் பிரிவிலுள்ள விசேட தேவைக் குரியோரின் இவ் வருடத்திற்கான முதலாவது கூட்டம் இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும்.

அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு சமூகசேவை உத்தியோகத்தர் வி.அருந்தவராசா கேட்டுள்ளார். (1-100)


## விற்பனைக்குண்டு

லூமாலா 18'' யூனியர் ஆண்கள் சைக்கிள் விற்பனைக்குண்டு.

தொடர்பு: பொ.செல்வரத்தினம்,
65, கொழும்புத்துறை வீதி, சுண்டிக்குளி, தொ.பே.: 0774271637. (94336)

## வாசனா சம்பத

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம்: 804 திகதி: 28.01.2010

ஆங்கில எழுத்து: K

வெற்றி இலக்கங்கள்: 25 37 56 68

போனஸ் இல: 13

| | கூட்டு | பரிசுத் தொகை | வெற்றி பெற்றோர் |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | ஆங்கில எழுத்தும் 4 இலக்கங்களும் சரியாயின் | 12,213,716.00 | - |
| 1ம் பரிசு | 4 இலக்கங்கள் சரியாயின் | 2,000,000.00 | 01 |
| 2ம் பரிசு | 3 இலக்கங்களும் போனஸ் இலக்கமும் சரியாயின் | 100,000.00 | 02 |
| 3ம் பரிசு | 3 இலக்கங்கள் மட்டும் சரியாயின் | 2,000.00 | 142 |
| 4ம் பரிசு | 2 இலக்கங்கள் மட்டும் சரியாயின் | 100.00 | 6573 |
| 5ம் பரிசு | 1 இலக்கம் மட்டும் சரியாயின் | 20.00 | 91210 |

இவ்வாரம் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத் தொகை ரூ. 4,965,500.00

சுப்பர் பரிசுத்தொகை அடுத்த வியாழக்கிழமை 12,213,716.00

வெற்றி பெறும் டிக்கட்டுகள் சீட்டிழுப்புத் திகதியிலிருந்து 6 மாதங்கள் மட்டுமே செல்லுபடியாகும்.

தேசிய லொத்தர் சபை 234/2, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி: 2470663 www.nlb.lk

## ஜயோதா

உத்தியோகபூர்வ முடிவுகள்

டிக்கட் தொடர் இல. 701194886 முதல் 701204092 வரை. சீட்டிழுப்பு இல. 618 திகதி 28-01-2010

வெற்றி எண்கள்: 29 46 51 56 ஆங்கில எழுத்து K

ஜக்பொட் பரிசு ரூ. 12,841,180/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | - | 12,841,180/= | - |
| 4 இலக்கங்கள் பொருந்தினால் | 01 | 400,000/= | 400,000/= |
| 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 09 | 2,000/= | 18,000/= |
| 3 இலக்கங்கள் பொருந்தினால் | 156 | 1,000/= | 156,000/= |
| 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 248 | 1,000/= | 248,000/= |
| 2 இலக்கங்கள் பொருந்தினால் | 6204 | 60/= | 372,240/= |
| 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 3017 | 40/= | 120,680/= |
| 1 இலக்கம் பொருந்தினால் | 72894 | 20/= | 1,457,880/= |
| | | மொத்தம் ரூ. | 2,772,800/- |
| வெல்லப்படாத டிக்கட்டுகளுக்காக கொடுக்கப்பட்ட பணப்பரிசுகளின் பெறுமதி | 08 | 50,000/= | 400,000/= |

ஆலிந்தயே வாசனா வெற்றியாளர்கள்
தங்கக்காசு வெற்றியாளர் - K.W.G. விஷ்வா சத்யஜனி - கப்வத்தை.
கையடக்கத் தொலைபேசி வெற்றியாளர் - B. வனசிங்க - குருநாகல்.

ரூபா 50,000 வீதம் பணப்பரிசுகள் வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்.

| | |
|---|---|
| கம்பஹா | 701201485-0-48 |
| அம்பாறை | 701202236-4-38 |
| மட்டக்களப்பு | 701199479-8-01 |
| அம்பாந்தோட்டை | 701199182-4-06 |
| கேகாலை | 701199782-3-18 |
| மாத்தறை | 701196212-9-37 |
| நுவரெலியா | 701200043-3-15 |
| காலி | 701198984-4-43 |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை 3,172,800/=

எதிர்வரும் திங்கட்கிழமை சுப்பர் ஜக்பொட் ரூ. 13,038,400/=

தொடர் இல. 601222966 க்கு மேற்பட்ட மஞ்சள் நிற டிக்கட்டுகள் 2010 பெப்ரவரி 01 ஆம் திகதி திங்கட்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
356, தர்மபால மாவத்தை, கொழும்பு - 07
தொ.பே. 2335467


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொய்க்கால் குதிரையாட்டம்

வடமராட்சியில் ஒரு காலத்தில் பொய்க்கால் குதிரை ஆட்டம் மிகப்பிரபல்யம் வாய்ந்த கலை நிகழ்வாக இருந்ததாக அறியப்படுகின்றது.

பொய்க்கால் அதாவது



போலியான மரக்கால், கம்பு போன்றவற்றின் மேல் கால்களைப் பதியவைத்து தரையில் மரைக்குற்றிக் கம்பு போன்றவை நிலத்தில் ஊன்றி நின்று ஆடும் முறையே பொய்க்கால் ஆட்டம் என்பர்.

இதில் இராட்சத உயர ஆண், பெண் இராசா ,இராணி போன்ற உயரமான கடதாசி மூங்கில் போன்ற இராட்சத உருவ கோதான பொம்மைகளினுள் நின்று ஆடுவதும்,

இதே முறையில் குதிரை வெளி அமைப்புக்களை உருவாக்கி அதன் மத்தியில் நின்றுகொண்டு ஆண், பெண்கள் குதிரை உருவை முன்னும் பின்னும் சவாரி செய்வதுபோல் ஆடுவது பொய்க்கால்குதிரையாட்டம் எனப்படும். பொய்க்கால் குதிரையாட்டத்திற்குப் பெயர்பெற்ற இடங்களாகி விளங்கிய இடங்கள் வடமராட்சியில் வல்வெட்டித்துறை, ஊறணியில் இந்திய வம்சவாளிகளான கலைஞர்களால் வருடந்தோறும் புது வருடங்களிலும் பொங்கல் தினங்கள் காலங்களிலும் ஆடுவார்கள்.

மற்றும் புறாப்பொறுக்கி என்னும் அண்ணாவிமாரின் துணைக்கொண்டு வழங்கப்பட்டு யாழின் பலபாகங்களிலும் காணப்பட்டு நிகழ்வுகளிலும் ஆடிக்காண்பிக்கப்பட்டதாகத் தெரிய வருகின்றது.

மற்றும் ஏனைய இடங்களான கள்ளியங்காடு,அரியாலை, வட்டுக்கோட்டை போன்ற இடங்களிலும் மேற்படி குதிரையாட்டக் கலைஞர்கள் விதிமுறைப்படி ஆடியதாக அறிய முடிகின்றது.இதன்போது பின்னணி இசையாக நட்டுவமேளம்,மிருதங்கம் போன்றவை பயன்படுத்தப்பட்டு வந்தது.

ஆனால் வல்வெட்டித்துறை ஊறணிக்கலைஞர்கள் பின்னணி இசையாக நையாண்டி மேளத்தையே பயன்னடுத்தி வந்தனர்.

-சுந்தா-

# குறிக்கோள் கொண்டு வாழ்வோம்

நாம் எப்படியும் வாழலாம் என வாழாது, இப்படித்தான் வாழ வேண்டும் என்று எமக்குள் குறிக்கோள் கொண்டு வாழ வேண்டும்.குறிக்கோள் இல்லாத எந்தவொரு மனிதனும் வாழ்வில் வெற்றி பெற்றதும் கிடையாது;சுபீட்சமாய் வாழ்ந்ததும் கிடையாது.

குறிக்கோள் என்று ஒன்றை எமக்குள் வகுத்துவிட்டால் பல தடைகள் தாண்டி, பல படிகள் ஏறியே ஆகவேண்டும்.

ஏன்?ஒரு சிலந்தியை எடுத்துப்பாருங்கள்.தான் வாழ்வதற்கென சிலந்தி வலை பின்னுகின்ற போது தான் வகுத்துக்கொண்ட அந்தக் குறிக்கோளை அடைவதற்காய் எத்தனையோ தடைகள்,தோல்விகளைச் சந்தித்தாலும் இறுதியில் தன்து விடா முயற்சியால் தனது குறிக்கோளை வெற்றிகரமாக அடைகின்றதல்லவா?

இப்படித்தான் மனித வாழ்க்கையிலும் எண்ணற்ற தடைகள்,தோல்விகள் எம்மை வந்தடைகின்றன.இருந்தாலும் எமக்குள் வகுக்கப்பட்ட குறிக்கோளை அடைவதற்காய் அவற்றையெல்லாம் தாண்டியேதான் ஆக வேண்டும்.

எனவே நாம் அனைவரும் குறிக்கோள் கெண்டு வாழ்ந்துடுவோமானால் எமது வாழ்வு சுபீட்சமானதாக அமையும் என்பதில் எந்தவொரு ஐயப்பாடும் இல்லை.

அன்பானவர்களே! வெற்றி பெற்றவர்களெல்லாம் புத்திசாலியும் இல்லை. புத்திசாலியெல்லாம் வெற்றி பெற்றதும் இல்லை என்பதுக்கிணங்க நாம் அனைவரும் குறிக்கோள் கொண்டு வாழ்ந்துவிடுவோமானால் வாழ்வில் சாதனையாளர்களாக மாறிவிடலாம்.

எனவே குறிக்கோள் கொண்டு வாழ்ந்து வாழ்வில் இலட்சியம் எனும் வெற்றிக்கனி பறித்திடுவோம். ''வகுத்திடுவோம் குறிக்கோளினை, வாழ்ந்திடுவோம் நல்வாழ்க்கைதனை''.

அரசகேசரி-மாதுரி, அரியாலை.

# நாட்டிய வளர்ச்சிக்கு "கட்புல" "செவிப்புல" சாதனங்களின் பங்களிப்பு

(சென்ற வாரத் தொடர்ச்சி)



இதன் முதல்படியாக தொலைக்காட்சிபற்றி எடுத்து நோக்குவோமேயானால் இது கண்ணிற்கும், காதிற்கும் விருந்தளிக்கும் வகையில் அமைந்துள்ளது. இதனூடாகப் பரத நிருத்தியத்தின் பிரதான அம்சங்களான அங்கசுத்தம், அபிநய பாவசுத்தங்கள், லயம் போன்றவற்றையும் இயல்பான ஆடல்முறைமைகள், இவ் ஆடல் முறைகளில் காணப்படும் நளினம், லாவண்யம் போன்றவற்றையும் நேரடியாகக் கண்ணால் பார்க்கக் கூடியதாய் இருக்கும். இவை மட்டுமல்லாது தொலைக்காட்சிகளில் இடம் பெறும் நடனப்போட்டி நிகழ்ச்சிகளைப் (திமிதகதா) பார்வையிடுவதாலும் அவற்றில் தாமும் கலந்து கொள்வதனாலும் நடனத்தின் அறிவினைப் பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருக்கும்.தொலைக்காட்சியில் பிரபலங்களின் நேர்காணல்களில் (மங்கை உதயதரிசனம், மகளிருக்காக) நடனம் பற்றி கலந்துரையாடுவதைக் கண்டும், கேட்டும் நடனம் சம்பந்தமான அறிவினை வளர்ப்பதன் மூலம் இச் சாதனம் நடனவளர்ச்சிக்குப் பெரிதும் பங்காற்றுகிறது எனலாம்.

அடுத்து ஒளி, ஒலி நாடாக்கள் உதவியுடன் தொலைக்காட்சியில் பல பிரதேசங்களின் நடன அமைப்புக்களையும், பிரபலங்களின் நடன அரங்கேற்ற நிகழ்வுகளையும் பார்க்கக்கூடியதாக இருக்கின்றது. இவற்றை மீண்டும், மீண்டும் போட்டுப் பார்க்கக் கூடிய வசதிகள் இதில் இருப்பதால் இதன் மூலம் மனதில் பதியக் கூடிய அளவிற்கு நாம் இவற்றைத் திரும்பத் திரும்பப் பார்க்கக் கூடியதாக இருக்கும்.

இதனைத்தவிர கணனியின் உதவியுடன் ஒலி, ஒளித்தட்டுக்கள் (CD,VCD,DVD) மூலம் கணனியிலும் நடன நிகழ்ச்சிகளைப் பார்த்து மகிழ்வதுடன், அது சம்பந்தமான அறிவையும் பெற்றுக்கொள்ளலாம். இக் கட்புல, செவிப்புல சாதனம் மூலம் தனியே நாட்டிய அசைவுகளை மாத்திரம் கண்ணுறாமல் அவற்றிற்குரிய பாடல், வசனநடைகள், பேச்சு போன்றவற்றையும் கேட்கக் கூடியதாக இருக்கும். இதனுள் கலை நிகழ்ச்சிகளும் அடங்கும். கலைநிகழ்ச்சிகளில் பாடசாலையில் இடம்பெறும் நிகழ்ச்சிகள் அரங்கேற்ற நிகழ்வு, பிரத்தியேக நிகழ்வுகள் என்பன அடங்குகின்றது. இவற்றின் மூலமும் நாம் நாட்டிய நிகழ்வுகளைப் பார்த்தும்,கேட்டும் மகிழலாம்.

இக்கட்புல செவிப்புல சாதனங்களின் ஊடாகத் தனியே நடன அசைவுகள், பாடல்கள், மாத்திரமின்றி நடனத்திற்குத் தேவையான ஆடைஅலங்காரங்கள், ஆபரண அமைப்புக்கள், ஒப்பனை முறைகள் போன்றவற்றையும். நாம் நேரடியாகக் காணக்கூடியதாக உள்ளது. அத்துடன் கலைநிகழ்ச்சிகளை நாம் நேரடியாகக் காண்பதால் மேடை அமைப்பு முறையில் பரதநாட்டியத்தின் நட்டுவாங்கம், அணிசேர் கலைஞர்களின் திறமைகளையும் காணக்கூடியதாக உள்ளது. அத்துடன் கூட்டிசையில் (Fussion Music) வடிவமைக்கப்பட்ட புதிய நடனக் கோலங்களினையும் பார்க்கக் கூடியதாக இருக்கிறது. இவை எல்லாம் நாட்டிய வளர்ச்சிக்கு எடுத்துக்காட்டாக அமைவதாகக் காணப்படுகின்றது.

இவற்றைவிட இவற்றைப் பயன்படுத்தித் தமது அறிவாற்றல்களை மேம்படுத்தும் மாணவர்கள் தமது நடன அளிக்கைகளைப் பார்த்து தமது பிழைகளை அறிந்து திருத்திக் கொள்வதற்கு மிகவும் துணை புரிகின்றன.

இவ்வாறு இத்துணைச் சாதனங்களினால் நன்மைகள் பல இருப்பினும் ஒரு சில தீமைகளும் இருக்கத்தான் செய்கின்றது. பல்வேறு பிரதேசங்களின் நடனங்களையும் வெவ்வேறு பாணிகளின் நடனங்களையும் ஓர் ஆசிரியர் அல்லது ஒரு மாணவன் அல்லது ஒரு நடனம் பயில்பவர் பார்க்கும் போது இவற்றின் ஆழமான தன்மையினை விளங்காமலேயே தான் தயாரிக்கின்ற புதிய ஆக்கங்களில் அவற்றின் சாயல்களைப் புகுத்தி விடுகின்றனர். இதனால் கலையின் தனித்துவம் திரிபுபடுகின்றது. இதைவிட ஏற்கனவே இருக்கின்ற உருப்படிகளின் அமைப்பையே மாற்றி அமைத்து நிகழ்ச்சிகளில் வெளிக்காட்டுகின்றனர். இச்சந்தர்ப்பங்களில் சாஸ்திர வரண் முறைகள் விலகிச் செல்கின்றன. இவை பெருங்கவலைக்குரிய விடயமாகும். இப்படியான சந்தர்ப்பங்களைத் தவிர்த்து இச்சாதனங்களைச் சரியான நோக்கத்தோடு கையாண்டு பயன் அடைதல் கலைதேடலுக்கு மேலும் வலுவூட்டுகிறது.


தொகுத்து நோக்கின் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் முகிழ்ச்சி அடைந்த பரதநாட்டியக் கலையானது பல்வேறு வழிகளில் துரித வளர்ச்சி அடைந்திருப்பினும் மக்கள் மத்தியில் ஆழமாக வேரூன்றிப் பதிக்கப்பட்டு வாழ்ந்து கொண்டிருப்பதற்கு கட்புல, செவிப்புல, கட்புல செவிப்புல சாதனங்கள் மிகுந்த செல்வாக்குச் செலுத்துகின்றன என்பதில் ஐயமில்லை.

வாழ்க கலை வளர்க நம் கலைப்பாரம்பரியம்.

செல்வி:தேவந்தி சிவநேசன்.

(முற்றும்)

## நாடும் நடப்பும்




# விடைபெறும் விரோதியே

விடைபெற்றுச் செல்லும்
விரோதி ஆண்டே!
எம்மைப் பொறுத்தவரை
உன் பெயருக்கேற்றாற்போல்
நீ விரோதிதான்
எத்தனை துயரம் தந்தாய்
எத்தனை உயிர்கள் கொன்றாய்
எப்படி மறப்போம் உன்னை
ஆனாலும் யுத்தத்தை
முடித்து வைத்தாய்
அதற்கு மட்டும் நன்றி
சென்றொழிந்த காலம்
திரும்பிவர மாட்டாது
நீ சென்று வருக
அழுகையும் சிரிப்பும்
கலந்துனக்கு விடைதருகிறோம்
வருகின்ற ஆண்டிடமாவது
சொல்லிவிடு எமக்கு
நிரந்தர நிம்மதியைத் தந்துவிடும்படி.

புலோலியூர் வேல்நந்தன்

# சிந்திக்கச் சில வரிகள்...

* நிகழ்கால துன்பங்கள் யாவும் எதிர் கால இன்பத்தின் அத்திபாரங்கள்.
* வலிகளைத் தாங்கிக் கொள்ளும் போது தான் வலிமை உடையவராக வாழ முடியும்.
* வாக்குறுதிப்படி நடப்பவர் மிகச் சிலரே! மற்றவர் ஆயிரம் பேசுவார்கள் ஆனால் சொல்லியபடி நடக்கமாட்டார்கள்.
* உலகத்தை நேசிக்கக் கற்றுக்கொள் ஆனால் ஒருவரையும் ஆழமாக நம்பிவிடாதே!
* கெட்ட செயலுக்காக ஆயிரக்கணக்கில் நாள்களை வீணடிப்பதிலும் பார்க்க ஒருநல்ல செயலுக்காக ஒரு நிமிடத்தையாவது செலவழிப்பது மேன்மையானது.
* எந்த ஒரு மனிதனும் சுகமாக வாழ வேண்டும் என எண்ணுவதால்தான் வாழ்க்கை சுவையிழந்து போகிறது.
* நீ உன் வாழ்க்கையில் முன்னேற வேண்டுமானால் உனது கால்களால் நடந்து செல்... .... மற்றவர் முதுகில் ஏறிச் செல்லாதே!
* தவறுகள் மன்னிக்கப்படக் கூடியவை. தப்புக்கள் தண்டிக்கப் படக்கூடியவை.
* பொறுமை என்ற திறமையிருந்தால் தன்னம்பிக்கை வெல்லும்....!

ஜெ.லக்ஷியா,சுதுமலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானச்சுடர் 13 ஆவது அகவை வெளியீட்டு விழா

இடம்: சந்நிதியான் ஆச்சிரமம்
காலம்:
நாளை (31.01.2010) ஞாயிற்றுக்கிழமை
முற்பகல் 9.30 மணி

## விழா நிகழ்வுகள்

வாழ்த்துரை: நல்லை ஆதீன முதல்வர்
வெளியீட்டுரை:
செஞ்சொற் செல்வர் ஆறு.திருமுருகன்
மதிப்பீட்டுரை: அதிபர் ஆ.சிவநாதன்
(வல்வை சிவகுரு வித்தியாசாலை)
கௌரவிப்பு நிகழ்வு:
2002 ஆம் ஆண்டு தொடக்கம் 2009 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் வாராந்த நிகழ்வு வரிசையில் கலந்து கொண்டோரைக் கௌரவித்தல்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
சுபம் சாந்தி!

செல்வச் சந்நிதி,
தொண்டைமானாறு. (சி/564491)

சந்நிதியான்
ஆச்சிரமம்.

# உரும்பிராய் லயன்ஸ் கழகம்

We Serve

இலவச கண்பரிசோதனையும் கண்ணாடி வழங்கலும்
இடம்:- உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம்
காலம்:- நாளை (31.01.2010) ஞாயிறு காலை 9மணி.

(94315) தலைவர்.

# 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



சுப்பிரமணியம் சிவலிங்கம்
(பிரபல ஒப்பந்தகாரர்)
திதி: 30.01.2010

தோற்றம்:
06.06.1964

மறைவு:
24.12.2007

ஆண்டுகள் எத்தனை சென்றாலும் உங்கள் நினைவுகள் எம்மை விட்டுப் பிரியாது

கைதடி மத்தி,
கைதடி. (94339)

மனைவி,
பிள்ளைகள்,மருமகன்.

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில்
11 ★ 11 ★ 1939



இறைவன் அடியில்
31 ★ 01 ★ 2009

## அமரர் ஆறுமுகம் நவநீதகிருஷ்ணன்

"கர்த்தருடைய பரிசுத்தவான்களின் மரணம் அவர் பார்வைக்கு அருமையானது" (பரிசுத்த வேதாகமம்). அன்னாரின் முதலாம் ஆண்டு ஞாபகார்த்த நன்றி செலுத்தும் ஆராதனை நாளை (31.01.2010) ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு நல்லூர் பரியாக்கோபு ஆலயத்தில் நடைபெறும். இதில் உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டிக் கொள்கின்றோம்.

*அப்பா என்றும் உங்களின் நினைவில்:*
மனைவி (ஞானம்), பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்.

தகவல்:-Dr.சுதன்
இல, 38, கம்பல் பிளேஸ், தெகிவளை.
தொ.பே: 0779491181

# மலையக மக்கள் இ.தொ.காவை முற்றிலும் நிராகரித்துவிட்டனர்

## தேர்தல் முடிவுகள் சாட்சியம்; முன்னாள் எம்.பி. யோகராஜன் தெரிவிப்பு

கொழும்பு, ஜன.30

''தமிழ் மக்கள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவையும் அவரது அரசையும் முற்றாக நிராகரித்துள்ளனர். இதேவேளை, மலையக மக்கள் இலங்கை தொழிலாளர் காங்கிரஸை முற்றாக நிராகரித்துவிட்டனர்'' - என்று இ.தொ.காவின் கொழும்பு மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரான ஆர். யோகராஜன் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:-

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சிங்கள மக்களின் ஆணையை மாத்திரமே பெற்றுள்ளார்.

இலங்கையின் தமிழ்பேசும் மக்கள் அனைவரும் அவரை நிராகரித்துள்ளனர்.

ஜெனரல் சரத்பொன்சேகா வடக்கு, கிழக்கிலும் நுவரெலியாவிலும் வெற்றி பெற்றுள்ளமை இதற்கு உதாரணமாகும்.

மேலும், சிறிபான்மையினர் குறிப்பிடத்தக்க வீதத்தில் வாழும் தொகுதிகளும் பொன்சேகா வசமே சென்றுள்ளன.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸிலிருந்து விலகி ஐக்கிய தேசியக் கட்சியில் இணையும் எனது முடிவு சரியானது என்பதை இத்தேர்தல் முடிவுகள் நிரூபித்துள்ளன. குறிப்பாக கொழும்புத் தமிழர்கள் எனது முடிவை அங்கீகரித்துள்ளனர்.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் ஆதரவு இருந்தபோதிலும் நுவரெலியா - மஸ்கெலியா தொகுதியையும், நுவரெலியாவையும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு இரண்டாவது தடவையாகவும் இழந்துள்ளது.

இது, இ.தொ.காவின் ஆலோசனைகளை மக்கள் நிராகரித்துவிட்டனர் என்பதையே புலப்படுத்துகின்றது.

கண்டி, மாத்தளை, பதுளை, இரத்தினபுரி மற்றும் கேகாலை என அனைத்துத் தேர்தல் தொகுதிகளின் முடிவுகளும் மலையக மக்களின் முடிவை வெளிப்படுத்துபவையாகவே அமைந்துள்ளன.

இதேவேளை, வடக்கு, கிழக்கு மக்களும், முஸ்லிம் மக்களும் சம்பந்தன் மற்றும் ஹக்கீமின் ஆலோசனைகளைச் செவிமடுத்துள்ளனர்.

அதிகாரத்திலிருப்பதற்காக மக்களின் கடமைகளைப் புறக்கணிக்கும் தலைவர்களைப் போலல்லாது இவர்கள் மக்களின் கருத்தை வெளிப்படுத்துவதே இதற்குக் காரணமாகும்.

அரசிலிருக்கும் சிறுபான்மைக் கட்சிகள் மீது இது நிச்சயம் தாக்கத்தை ஏற்படுத்தும்.

இதேவேளை, மலையக தேர்தல் முடிவுகள் அடுத்து வரும் நாடாளுமன்றத் தேர்தலில் இ.தொ.காவுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும்.

நுவரெலியாவை இழந்துள்ளதாலும், ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு மூன்று ஆசனங்களை சிங்கள வாக்குகள் மூலம்பெறலாம் என்பதாலும், இ.தொ.காவும், மலையக மக்கள் முன்னணியும் நெருக்கடியைச் சந்திக்க வேண்டியிருக்கும் - என்று அதில் உள்ளது. (வ-ற)

# இறைச்சிக் கோழி விற்பனை

புறொயிலர், கல்பேட்ஸ், முட்டை என்பன மலிவான விலையில் வேண்டிய அளவுகளில் பெற்றுக் கொள்ளலாம். புறொயிலர் மொத்தமாகவும் விற்பனை செய்யப்படும். வியாபாரிகளுக்கு விலைக்கழிவு உண்டு.

தொடர்பு: மலிரி பாம் சென்ரர்,
61, இராமநாதன் வீதி, கலட்டி
தொ.பே: 0217912783

# வேலையாள்கள் தேவை

புடைவைக் கடை ஒன்றுக்கு ஆண், பெண் ஆகிய இருபாலாரும் தேவை. அனுபவம் உள்ளவர்கள் அல்லது வேலை பழகுபவர்களும் விரும்பத்தக்கது. அண்மையில் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

தொடர்பு: இல.55, பெரிய கடை வீதி,
யாழ்ப்பாணம்

# தவறிவிட்டது

பாஸ்கரன் ராஜீவ் என்பவரது கடவுச்சீட்டு இல(N1279149) 27.01.2010 புதன்கிழமை யாழ்ப்பாணத்துக்கும் சுன்னாகத்துக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தந்துதவவும்.

தொடர்பு :- பாஸ்கரன் ராஜீவ்
மயிலணி வடக்கு,சுன்னாகம்.
T.P -0770277607

# CAR FOR SALE

SUZUKI MARRUTI 800
KA XXXX LOW MILEAGE A/C
MINT CONDITION
CONTACT 021 222 5755, 021 2223239
(94337)

# காணி விற்பனைக்கு

திருநெல்வேலி பாற்பண்ணை வீதியில், முத்துத்தம்பி பாடசாலைக்கு அண்மையில் உள்ள 1½ பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:- 071 4977019 (94307)

## சுழிபுரம் பத்திரகாளிக்கு இலட்சார்ச்சனை

சுழிபுரம்,ஜன.30

சுழிபுரம் ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலய ஏகதின இலட்சார்ச்சனை எதிர்வரும் முதலாம் திகதி திங்கட்கிழமை பூரதினத்தன்று அதிகாலை 6 மணி முதல் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது. பிரம்மஸ்ரீ சிவ.நித்தியானந்த சிவாச்சாரியார் தலைமையில் பத்துக்கு மேற்பட்ட சிவாச்சாரியார்கள் கிரியைகளை நிறைவு செய்து வைப்பர். மாலை 6 மணிக்கு அம்பாள் அலங்கரிக்கப்பட்ட தண்டிகையில் வீதியுலா வருவார். (ஒ-28)

# கடை திறப்பு விழா

இன்று (30.01.2010) சனிக்கிழமை
கண்டி வீதி, சாவகச்சேரியில்
(ஆஸ்பத்திரிக்கு அருகில்)

## லிங்கம் கபே

என்னும் உணவகம் குதுாகலத்துடன் திறக்கப்படும் என்பதை அன்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் அறியத் தருவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

கண்டி வீதி,
சாவகச்சேரி.

உரிமையாளர்:
எஸ். லிங்கம்
தொ.பே: 0217211539
0779558699
(94350)

# பெயர் மாற்றம்



59, சங்கிலியன் வீதியில் இயங்கிவந்த ''வெலா பியூட்டி பாலர்'' இன்று (30.01.2010) சனிக்கிழமை முதல் ''பேமினா பியூட்டி கோணர்'' என்ற பெயரில் இயங்கவுள்ளது என்பதை வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்.

டிப்ளோமா வகுப்புக்களும் இன்று ஆரம்பமாகும். (15.02.2010) இற்கு முன் பதிவுகளை மேற்கொள்ளவும்.

59, சங்கிலியன் வீதி,
நல்லூர்.

நிர்வாகத்தினர்.
தொ.பே: 0771028105
0212227182
(94347)



# VACANCIES

- Sales promotion officers
- Marketing Executives

*Vacancies exit for the above posts in a well established institution in Jaffna.*

- *Those interested may apply stating their qualification and past experience.*
- *Give two names of non related referees and your contact number.*
- *preference to applicants with good spoken knowledge of English and Sinhala in addition to Tamil.*

***The persons selected will be offered an attractive salary package not less than fifteen thousand rupees in addition to a considerable commission on business performed.***


***Apply to Box No:3976, C/O Uthayan before 05.02.2010 361, Kasthuriyar Road, Jaffna.***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படங்கள் தரும் பதிவுகள்



பண்டத்தரிப்பு விளாவெளி இந்துமயான அபிவிருத்திச் சபையினரின் ஏற்பாட்டில் அண்மையில் மயானத்திற்கு சுற்றுமதில் அமைக்கும் பணி முன்னெடுக்கப்பட்டபோது எடுக்கப்பட்ட படம்.
இந்த நிகழ்வில் மதிலுக்கான அத்திபாரக்கல்லை மயான அபிவிருத்திச் சபைத்தலைவர் வை. சிவபாலன் நடுவதைப் படத்தில் காணலாம். (130)



யாழ். மத்திய கல்லூரியில் அண்மையில் ஒளிவிழா நிகழ்வு இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படம்.
இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட அருட்தந்தை சாள்ஸ் கொலின்ஸ் அடிகளார் ஒளி ஏற்றுவதையும் அருகில் கல்லூரி அதிபர் எம். ஓங்காரமூர்த்தி, கிறிஸ்தவ மன்றப் பொறுப்பாசிரியர் செல்வி பூகிறிஸ்ரின் ஆகியோர் நிற்பதையும் படத்தில் காணலாம். *(படம்: தமிழினியன்)*



ஆனைக்கோட்டை ஸ்ரீ வல்லியப்பர் சுவாமி ஆலயத்தில் ஆனைக்கோட்டை இந்து இளைஞர் மன்றத்தினரின் அனுசரணையுடன் முதியோரைக் கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்ற போது எடுக்கப்பட்ட படம்.
இந்த நிகழ்வில் கௌரவிக்கப்பட்ட முதியோர்களைப் படத்தில் காணலாம்.



தேசிய சேமிப்பு வங்கியின் வடமாகாண அஞ்சல் வங்கிக்கிளையினால் காங்கேசன்துறைத் தபால்அதிபர் பிரிவில் கணக்குத் திறக்கும் வைபவம் அண்மையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.
இதன்போது அதிகூடிய தொகையை வைப்பிலிட்டவருக்கு வங்கி மு... மகேந்திரசிங்கம் அன்பளிப்பு வழங்குவதைப் படத்தில் காணலாம். (16)



வடமராட்சி லயன்ஸ் கழகத்தின் 2009-2010ஆம் ஆண்டுக்கான புதிய உறுப்பினர்கள் பதவியேற்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படம்.
இந்த நிகழ்வில் பிராந்தியத் தலைவர் ஆர். ஜெயபாலன் மங்கள விளக்கேற்றுவதையும் அருகில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட லயன் எஸ். இரவீந்திரா மற்றும் லயன் தணிகாசலம் ஆகியோர் நிற்பதையும் படத்தில் காணலாம். (134)



கண்டி. - பிலிமத்தலாவை குருத்துவக் கல்லூரியின் விரிவுரையாளராகப் பதவி உயர்வு பெற்றுச் செல்லும் அருட்பணி அ.ஸ்ரீபன் அடிகளாருக்கு நல்லூர் அங்கிலிக்கன் தேவாலயத்தில் பிரிவுபசார விழா அண்மையில் நடத்தப்பட்டது.
நிகழ்வில் குருவின் பாதுகாவலரும் மாதர்சங்க செயலருமாகிய திருமதி எ.ஜெ.புத்திசிகாமணி தலைமை உரையாற்றுவதையும் திருமதி வதனி ஸ்ரீபன் மற்றும் அருட்பணியாளர்கள் மேடையில் அமர்ந்திருப்பதனையும் படத்தில் காணலாம். (படம் : இரா.சுதா)




வடபிரதேச நல்லொழுக்க சம்மேளனத்துக்கு அண்மையில் நிழற்பிரதி இயந்திரம் ஒன்று அன்பளிப்பாக வழங்கப்பட்டபோது எடுக்கப்பட்ட படம்.
சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, சம்மேளனச் செயலாளர் செ.குமாரசிங்கத்திடம் இயந்திரத்தைக் கையளிப்பதையும் அருகில் வட்டுக்கோட்டைத் தொகுதி ஈ.பி.டி.பி பொறுப்பாளர் மகேந்திரன் நிற்பதையும் படத்தில் காணலாம். (29)




இளவாலை, பெரியவிளான் றோ.க.த.க. பாடசாலையின் பரிசளிப்பு வைபவம் அண்மையில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படம் இது.
இந்த நிகழ்வில் ... விருந்தினராக் கலந்து கொண்ட வலிகாமம் கல்வி வலய ஆரம்பக்கல்வி ஆசிரிய ... உதயராட்ணம் மங்கள விளக்கேற்றுவதைப் படத்தில் காணலாம். (16)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனது உயரமே தேசிய அணியில் இடம்பிடிக்க வைத்து சாதனைகள் பலவற்றையும் புரிவதற்கு உதவியது

## தேசிய அணி வீராங்கனை தர்சினி தெரிவிப்பு

**2009 ஆம் ஆண்டு நடைபெற்ற ஆசியக் கிண்ண வலைப் பந்தாட்டப் போட்டியில் இலங்கை அணி சம்பியனானது. இதற்கு முதுகெலும்பாக விளங்கிய முதன்மை வீராங்கனையான சிவலிங்கம் தர்சினியின் அனுபவங்கள் உதயன் வாசகர்களுக்காக இங்கே தரப்படுகின்றன.**

நான் தேசிய அளவில் இடம்பெறுவதற்கு ஆரம்பத்தில் உயரமே எனக்குக் கை கொடுத்தது. ஆரம்பக் கல்வியை புன்னாலைக் கட்டுவன் ஈவினை அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் கற்றேன்.



பின்னர் வசாவிளான் மத்திய மகா வித்தியாலயத்தில் உயர்தரம் வரை கல்வி கற்று, கிழக்கு பல்கலைக்கழகத்திற்குத் தெரிவுசெய்யப்பட்டேன்.

பாடசாலை நாள்களில் பாடசாலை அணிக்காக வலைப்பந்தாட்ட அணியில் இடம் பெற்றேன். எனினும் எமது பாடசாலை அணி கோட்டம் வரை மட்டுமே செல்ல முடிந்தது.

ஆனாலும் கூட உயரம் பாய்தல் 15, 17, 19 வயதுப் பிரிவுகளில் கலந்து கொண்டு பாடசாலை கோட்டம், வலயம் வரை சென்று வெற்றிகளைப் பெற்று வந்தேன்.

பாடசாலைக் கல்வியை நிறைவு செய்த பின்னர் எனது விளையாட்டுக்கு உரிய வகிபாகம் யாழ்ப்பாணத்தில் கிடைக்கப் பெறவில்லை. கழக அணிக்காகவும் விளையாடச் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை.

இதனால் மட்டக்களப்பு பல்கலைக்கழகத்திற்கு ச் சென்றதும் அங்கு விளையாடினேன். அப்போது அங்கு பயிற்றுவிப்பாளராக இருந்த பத்திமா பிரான்சிஸ் எனக்கு தேசிய அணியில் இடம் கிடைக்கும் எனக் கூறி ஊக்குவித்ததுடன், தேசிய அணி

**செவ்வி:- நேசன்**

யில் என்னை இணைப்பதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொண்டார்.

யாழ்.மாவட்ட அணியில் இடம்பெறாத போதிலும் மட்டக்களப்பு மாவட்ட அணியில் எனக்கு இடம் கிடைத்தது. 2004 ஆம் ஆண்டு வவுனியா மாவட்டத்தில் இடம் பெற்ற திறந்த போட்டியொன்றில் மட்டக்களப்பு மாவட்ட அணிசார்பில் கலந்து கொண்டு விளையாடினேன்.



அதன்போது பிரதமராக இருந்த இப்போதைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் அவருடைய பாரியார் திருமதி ஷிராந்தி ராஜபக்ஷவும் கலந்து கொண்டனர். அந்தப்போட்டியில் எமது அணி தோல்வி அடைந்த போதிலும் மகிந்த ராஜபக்ஷவும் வலைப்பந்தாட்ட சங்கத்தின் தலை வியாக இருந்த திருமதிஷிராந்தி ராஜபக்ஷவும் தேசிய அளவில் இணைப்பதாக் கூறி என்னை அழைத்துச் சென்று தேசிய அளவில் பயிற்சியிலும் இணைத்துக் கொண்டார்கள்.



நான் தேசிய அணியில் இணைந்து பயிற்சி பெற்றுக் கொண்டு இருந்த 2004 ஆம் ஆண்டு மார்கழி மாதம் சிங்கப்பூரில் ஒரு பயிற்சி ஆட்டத்திற்காக இலங்கை தேசிய அணி சென்றது. அந்த அணியில் இடம்பெறும் சந்தர்ப்பம் குறுகிய காலத்திலேயே எனக்குக் கிடைத்தது.

அப்போது என்னை 'கோல் சூட்டர்'(Goal Shutter) ஆக அழைத்துச் சென்றார்கள். அதில் எனது பங்களிப்பை முழுமையாகச் செய்து பயிற்றுவிப்பாளர்களின் எதிர் பார்ப்பை ஈடு செய்தேன்.

2005ஆம்ஆண்டு ஆசியக் கிண்ணத் திற்கான போட்டியில் இலங்கைத் தேசிய அணியும் கலந்து கொண் டது. அதில் கலந்து கொண்ட நான் சிறந்த 'கோல் சூட்டர்'(Goal Shutter) ஆக தெரிவு செய்யப்பட்டதுடன் எமது தேசிய அணி மூன்றாம் இடத்தையும் பெற்றுக் கொண் டது.

2005 ஆம் ஆண்டு காலப்பகுதியில் எனக்கு 'செலான் வங்கி' வேலை வாய்ப்புத் தந்து எனது கல்வியையும் விளையாட்டையும் ஊக்குவித்தது.

அதேபோன்று எனது கல்விக்கும் விளையாட்டுக்கும் மட்டக்களப்பு பல்கலைக்கழகத் துணவேந்தர் முதல் பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், பயிற்றுவிப்பாளர்கள் எனப் பலரும் ஆதரவு தந்து எனக்கு பல்வேறு வழிகளிலும் உதவிகளைச் செய்தார்கள்.

தொடர்ந்து நான் தேசிய அணியில் பயிற்சிகளைப் பெற்றுக் கொண்டே வருகின்றேன். கடந்தாண்டு (2009) இல் இடம் பெற்ற ஆசியக் கிண்ணத்திற்கான போட்டியில் இலங்கை அணி சம்பியனானது. இதில் எமது அணி பெற்றுக் கொண்ட 73 புள்ளிகளில் 72 புள்ளிகளை நான் பெற்றுக்கொடுத்தேன்.

சிறந்த 'பேற்றுக் காவலனாகவும்' தெரிவு செய்யப்பட்டேன். தொடர்ந்தும் தேசிய அணியின் பயிற்சிகளில் கலந்து கொண்டே வருகின்றேன்.

திறமை மிக்க யாழ்ப்பாணத்து வீராங்கனைகள் பலரும் தேசிய அணியில் இணைந்து கொள்ளவேண்டும் என்பதே எனது ஆசையும் விரும்பமும் ஆகும். உயரம் கூடியவர்கள் இருந்தால் அவர்களைத் தேசிய அணியில் இணைத்துக் கொள்வதற்கு அணி தயாராகவே இருக்கின்றது. இதனை உரிய முறையில் பயன் படுத்திக்கொள்வது விளையாட்டு ஆர்வலர்களின் பொறுப்பும் கடமையும் ஆகும்.

# விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஜன.30

சண்டிலிப்பாய் பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு இடையே இன்றும், நாளையும் மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவிருந்த கிரிக்கெட் சுற்றுப் போட்டி தவிர்க்க முடியாத காரணத்தினால் பிற்போடப் பட்டுள்ளதாக விளையாட்டுத் உத்தியோகஸ்தர் எஸ். சதிஸ்குமார் தெரிவித்துள்ளார்

(1-23)

* * *

யாழ்ப்பாணம், ஜன. 30

கொக்குவில் வளர்மதி முன்னேற்ற கழகதினால் வருடந்தோறும் நடத்தப்படும் விக்ரம், ராஜன், கங்கு ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்திற்கான கிரிக்கெட் சுற்றுப்போட்டி தொடரில் இன்று சனிக்கிழமை யாழ். பல்கலைக்கழக மைதானத் தில் இடம் பெறவுள்ள ஆட்டங்களில் பங்கு பற்றும் அணிகளின் விவரங்கள் வருமாறு:

காலை 8.30 மணிக்கு - யாழ் கொக்குவில் மத்திய சனசமூக நிலைய வி.க. எதிர் யாழ்.சென்றலைட்ஸ் வி.க. பிற்பகல் 1 மணிக்கு யாழ் பல்கலைக் கழக வி.க எதிர் யாழ். ஜொலிஸ்ரார் வி.க. (1-23)

* * *

யாழ்ப்பாணம், ஜன.30

யாழ். உதைபந்தாட்டக் லீக்கில் அங்கம் வகிக்கும் கழகங்களுக்கும் இடையோன 7 பேர் பங்கு பற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட் டியில் இன்று சனிக்கிழமை குருநகர் சென். றோக்ஸ் விளையாட்டு மைதானத்தில் பிற்பகல் 4 மணிக்கு இடம்பெறவுள்ள ஆட்டத்தில் அரியாலை விளையாட்டுக் கழகமும் பாசையூர் சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன. (1-23)

* * *

யாழ்ப்பாணம், ஜன.30

நல்லூர் பிரதேச செயலகப் பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு இடையேயான ஆண், பெண் இருபாலருக்குமான கரப்பந்தாட்டப் போட்டி இன்று சனிக்கிழமை கொண்டலடி ஞான வைரவர் ஆலய மைதானத் தில் இடம்பெறவுள்ளது.

(1-23)

* * *

நல்லூர் பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு இடையோன மென்பந்துச் சுற்றுப்போட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை யாழ். கனகரட்ணம் வித்தியாலய மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

(1-23)

* * *

வலி. வடக்கு, ஜன.30

உடுவில் பிரதேச செயலாளர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையேயான ஆண்கள், பெண்களுக்கான கரபந்தாட்டப் போட்டிகள் இன்று சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு உடுவில் மத்தி விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளன. (1-86)

# அகில இலங்கை ரீதியில் சம்பியனானதால் சென்.பற்றிக்ஸ் கிரிக்கெட் அணி தரமுயர்வு

வலி.வடக்கு, ஜன.30

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினால் இலங்கை ரீதியில் நடத்தப் பட்ட பாடசாலைகளுக்கு இடையேயான போட்டிகளில்யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரி சம்பியனானதைத் தொடர்ந்து பிரிவு இரண்டு அணிக்கு தரம் உயர்த்தப் பட்டுள்ளது.

இதன் இடிப்படையில் இன்று யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் கொழும்பு மாரவிலை சென்.சேவியர் கல்லூரிக்கும் யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரிக்கும் இடையேயான இரண்டு நாள் போட்டி ஆட்டம் காலை 9 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

ஏற்கனவே யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரி இச் சுற்றுப் போட்டியில் கொழும்பு பண்டார நாயக்க வித்தியாலயம், மாத்தளை சென்.தோமஸ் கல்லூரி மற்றும் கொழும்பு லொயலாக் கல்லூரி என்பவற்றுடன் மோதி சமநிலையில் காணப்படுகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (04-86)

# பட்மின்ரன் சங்கக் கூட்டம் இன்று

யாழ்ப்பாணம், ஜன.30

யாழ். மாவட்ட பட்மின்ரன் சங்கத்தின் வருடந்த பொதுக் கூட்டம் இன்று முற்பகல் 10 மணியளவில் யாழ். மத்திய கல்லூரியில் இடம்பெறவுள்ளது என சங்கத் தலைவர் ஜே. மோகன் தெரிவித்தார். (1-23)




# குறுக்கறுத்தோடும் போட்டியில் வெற்றியீட்டிய வீராங்கனைகள்

வலி.வடக்கு, ஜன.30

வட மாகாண விளையாட்டுத் திணைக்கம் நடத்திய கிராமங்களை குறுக்கறுத்து ஓடும் போட்டியில் வடமராமராட்சிப் பாடசாலைகளுக்கு இடையே நடத்திய ஐந்து கிலே மீற்றர் தூர ஓட்டப் போட்டியில் வெற்றியீட்டிய வீராங்கனைகளின் விவரம் வருமாறு:-

ம.தர்சினி (நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம்), யோ.துர்க்கா ஜெமினா (நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்), ர.நளாயினி (பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை), செ.லாவண்யா (உடுப்பிடடி மகளிர் கல்லூரி), ப.மேரி பிலிப்பின் (பருததித்துறை சென்.தோமஸ் றோமன் கத்தேலிக்க தமிழ் கலவன் பாடசாலை), கி.லக்சனா (பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை), சி.கீர்த்தனா (பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை), சி.சாதுரியா (அல்வாய் ஸ்ரீலங்கா வித்தியாலயம்), ம.பிரவினா (அல்வாய் ஸ்ரீலங்கா வித்தியாலயம்), சி.விேனாதினி (உடுப்பிட்டி மகளிர் கல்லூரி).

இப்போட்டியில் வடமராட்சிப் பாடசாலைகளைச் சேர்ந்த 29 வீராங்கனைகள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (04-86)

# மஞ்சிக் கிண்ண கரபந்தாட்ட இறுதிப் போட்டிக்கு ஆவரங்கால் வி.க., கோப்பாய் ஐக்கிய வி.க அணிகள் தகுதி

யாழ்ப்பாணம், ஜன.30

யாழ். மாவட்ட கரபந்தாட்டச் சங்கத்தினால் அங்கத்துவ கழகங்களுக்கு இடையே நடத்தப்பட்ட மஞ்சி வெற்றிக் கிண்ணத்துக்கான கரபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் ஆண்,பெண் அணிகளுக்கு இடையே இடம்பெற்ற அரை இறுதியாட்டங்களில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழக அணியும் கோப்பாய் ஐக்கிய விளையாட்டுக் கழக அணியும் வெற்றிவாகை சூடின. ஆவரங்கால் நடராஜா இராமலிங்கம் வித்தியால மைதானத்தில் இந்த அரையிறுதி ஆட்டங்கள் நடைபெற்றன.

இதில் முதலில் இடம்பெற்ற பெண்களுக்கான போட்டியில் கோப்பாய் ஐக்கிய விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஆவரங்கால் மத்திய விளையாட்டுக்கழக அணி மோதியது.

5 செற்களைக் கொண்ட இந்தப்போட்டியில் கோப்பாய் ஐக்கிய விளையாட்டுக் கழகப் பெண்கள் அணி 3 செற்களில் 25:22, 25:18, 25:20,என்னும் புள்ளி அடிப்படையில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக்கழக அணியை வென்று இறுதியாட்டத்திற்கு தகுதி பெற்றது.

தொடர்ந்து இடம் பெற்ற ஆண்களுக்கான போட்டியில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக்கழக அணி மோதியது. இதில் ஆவரங்கால் மத்திய விளை யாட்டுக்கழக அணியினர் 23:25,22:25,25:23, 19:25, 15:11, என்னும் புள்ளி அடிப்படை யில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளை யாட்டுக் கழக அணியை வெற்றி கொண்டு இறுதியாட்டத்துக்குதகுதி பெற்றனர். (04-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈராக்கில் அமெரிக்கப்படைகள் ஒகஸ்ட் மாதத்தில் மீளப் பெறப்படும்

## நாடாளுமன்றத்தில் ஜனாதிபதி ஒபாமா தெரிவிப்பு

வாஷிங்ரன், ஜன. 30

''ஈராக்கில் நிலைகொண்டுள்ள அமெரிக்கப் படைகள், ஒகஸ்ட் மாதம் மீளப் பெறப்படும்'' என அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா, புதன்கிழமை நாடாளுமன்ற கூட்டுக் கூட்டத்தில் தாம் பேசுகையில் தெரிவித்துக் கொண்டார்.

''அல்-குவைதாவுக்கு எதிரான யுத்தம் தொடரும் என்று உறுதி கூறிக்கொள்கிறேன். அதேநேரத்தில் ஈராக்கில் தங்கியிருக்கும் அமெரிக்க இராணுவம் எதிர்வரும் ஒகஸ்ட் மாத இறுதியில் விலக்கிக் கொள்ளப்படும். நான் ஜனாதிபதித் தேர்தலுக்குப் போட்டியிடும்போதே ஈராக் போரை நிறுத்திக்கொள்வேன் என்று உறுதி அளித்தேன்'' என்றும் அவர் கூறினார்.

''அதைத்தான் ஜனாதிபதியாக வந்த பின்னர் நான் செய்யப்போகிறேன். ஈரான் அரசுக்கு அமெரிக்கா தொடர்ந்து ஆதரவு அளிக்கும். இந்தப் போர் முடிவுக்கு வருகிறது. நமது துருப்புகள் விரைவில் நாடு திரும்பவிருக்கின்றன'' என்றும் ஒபாமா குறிப்பிட்டார்.

அவரது உரையை அமெரிக்காவிலுள்ள தொலைக்காட்சி நிறுவனங்கள் போட்டிபோட்டுக்கொண்டு ஒளிபரப்பின. அப்போது, அவரது உரையை அமெரிக்கர்கள் ஆர்வத்துடன் கேட்டனர்.

எத்தனை சதவீதம் பேர் அவரது உரையை கேட்டனர் என்று நீல்சன் நிறுவனம் கருத்துக்கணிப்பு நடத்தியது. அதில், அவரது செல்வாக்கு சரிந்து இருப்பது தெரியவந்துள்ளது.

ஏனெனில், அவரது சமீபத்தைய உரையை 4 கோடியே 80 இலட்சம் பேர் மட்டுமே கேட்டுள்ளனர். புஷ் ஜனாதிபதியாக இருந்தபோது அவரது முதல் உரையை 4 கோடி மக்கள் கேட்டுள்ளனர். அதேசமயம், ஈராக்குக்கு அமெரிக்கப் படைகளை அனுப்புவது குறித்து கடந்த 2003 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் அவர் ஆற்றிய உரையை 6 கோடியே 20 இலட்சம் பேர் கேட்டுள்ளனர்.

பில் கிளின்ரன் ஜனாதிபதியாகப் பதவி ஏற்றவுடன் 1993 ஆம் ஆண்டு முதன் முதலாக அவர் ஆற்றிய உரையை 6 கோடியே 69 லட்சம் பேர் கேட்டுள் ளனர். ஜனாதிபதி ஒபாமா பதவி ஏற்றவு டன் அவரது முதல் உரையை 5 கோடியே 23 லட்சம் பேர் கேட்டுள்ளனர்.

அங்கு ஏற்பட்டுள்ள பொருளாதார மந்த நிலை, வேலையில்லாத் திண்டாட்டம், அவற்றை சீரமைக்க உடனடி நடவடிக்கை எடுக்க ஆகியவையே ஒபாமாவின் உரையை கேட்ட மக்களின் தற்போதைய விகிதாசார வீழ்ச்சிக்குக் காரணம் எனக் கூறப்படுகிறது.

# கப்பலில் தவிக்கும் இலங்கைத் தமிழர்களுக்காக குரல் கொடுத்தோர் இந்தோனேஷியாவில் கைது

## உழைக்கும் மக்கள் அமைப்பு கண்டனம்

ஜகர்த்தா, ஜன. 30

இந்தோனேஷியாவின் மேரக் நகரில் கப்பலில் தவித்துவரும் தமிழர்களுக்கு ஆதரவான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள சாரதா நாதன், ஜெசீகா, பமீலா ஆகியோரை இந்தோனேஷிய அரசு கைது செய்துள்ளமைக்கு உழைக்கும் மக்கள் அமைப்பின் சர்வதேசப் பிரிவுத் தலைவர் இகின் மகேந்திரா கண்டனம் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து மகேந்திரா குறிப்பிடுகையில், ''உடனடியாகக் கைதுசெய்யப்பட்டவர்களை விடுவிக்கவேண்டும். அவர்கள் ஏன் கைதுசெய்யப்பட்டனர் என்பதற்கு அரசு விளக்கம் தரவேண்டும்'' எனக் கோரியுள்ளார்.

''அப்பாவித் தமிழர்களைக் கப்பலில் தவிக்கவிட்டுவிட்டு, அவர்களை வைத்து ஆஸ்திரேலிய அரசிடமிருந்து பெரும் பணத்தைக் கறக்கும் முயற்சியில் இந்தோ னேஷிய அரசு ஈடுபட்டுள்ளது. இது மிக வும் அவமானகரமான ஒன்றாகும்'' என் றும் அவர் சாடியுள்ளார்.

இதேபோல மேரக் துறைமுகத்தில் நிறுத்தப்பட்டிருக்கும் கப்பலில் கடந்த 100 நாள்களுக்கும் மேலாக தவித்துக் கொண்டிருக்கும் இலங்கைத் தமிழர்களுக்காகப் பேராடிவரும் தமிழ் ஒருமைப்பாட்டு அமைப்பும் இந்தக் கைது நடவடிக்கையைக் கண்டித்துள்ளது.

கடந்த 100 நாள்களுக்கும் மேலாகக் கப்பலில் இந்தத் தமிழர்கள் தவித்தபடி உள்ளனர். அகதிகளாக அந்தஸ்து கோரி இவர்கள் போராடி வருகிறார்கள். இவர்களில் ஒருவர் உடல்நலம் குன்றி இறந்துவிட்டார். பலர் நோய்வாய்ப்பட்டுள்ளனர்.

எனினும், இவர்களுக்கு எந்தவிதமான விமோசனமும் பிறப்பதற்கான அறிகுறி கிடையாது. இந்நிலையில்தான், தமிழர்களைக் காக்கக் கோரி பல்வேறு அமைப்புகள் போராட்டக் களத்தில் குதித்துள்ளன. ஆனால், இவர்களைத் தற்போது கைது செய்ய அரசு தொடங்கியுள்ளமையால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.




# நான்கு இந்தியர் மீது ஆஸியில் தாக்குதல்!

இந்தியாவைச் சேர்ந்த மூன்று டாக்சி சாரதிகள் உள்ளிட்ட நான்கு இந்தியர்கள் ஆஸ்திரேலியாவில் நடந்த இரு வேறு சம்பவங்களில் தாக்கப்பட்டுள்ளனர்.

பிரிஸ்பேன் நகரில் இந்தச் சம்பவங்கள் நடந்துள்ளன. இதுகுறித்து ஆஸ்திரேலியாவின் 'ஸ்கை நியூஸ்' வெளியிட்டுள்ள செய்தியில், ''பிரிஸ்பேன் நகரில் நடந்த தாக்குதல்களில் நான்கு இந்தியர்கள் காயமடைந்துள்ளனர்'' என குறிப்பிடப்பட்டுள்ளது.

இவர்களில் மூவர் டாக்சி சாரதிகள் ஆவர். இவர்களில் ஒருவர் குறிப்பிடுகையில், தாக்குதல் நடத்தியவர்கள் தன்னை டாக்சியிலிருந்து வெளியே இழுத்துப் போட்டு அடித்தனர் எனக் கூறியுள்ளார் என்றும் இச்செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேபோல ஒரு பீட்சா விற்பனை நிலையில் வேலை பார்த்துவரும் 23 வயது இந்திய இளைஞரை ஒரு கும்பல் கிரிக்கெட் மட்டையால் தாக்கிக் காயப்படுத்திவிட்டு அவரிடமிருந்த பணம் உள்ளிட்டவற்றைப் பறித்துக்கொண்டு தப்பியுள்ளது.

பிரிஸ்பேனில் வசிக்கும் இந்தியரான சட்டத்தரணி சிங் குறிப்பிடுகையில், ''இந்திய இளைஞர்கள் தாக்கப்பட்ட சம்பவம் குறித்து பொலிஸார் என்னிடம் தகவல் தெரிவித்தனர். இது தொடர்பாகத் தாக்குதல் நடத்திய ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். இது குறித்த விரிவான தகவல்கள் எதுவும் உடனடியாக வெளியாகவில்லை'' எனத் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையியே இந்தத் தாக்குதல் சம்பவம் குறித்த தகவல் கிடைத்ததும் இந்தியத் தூதரக அதிகாரி சுஜாதா சிங், பிரிஸ்பேன் விரைந்து பொலிஸ் உயரதிகாரிகளுடன் இது குறித்து ஆலோசனை நடத்தியுள்ளார். இந்நிலையில் இது இனவெறியோடு நடந்த தாக்குதல் இல்லை என பிரிஸ்பேன் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த மாதத்தில் மட்டும் ஆஸ்திரேலியாவில் இதுவரை இந்தியர்களை குறிவைத்து 10 தாக்குதல் சம்பவங்கள் நடைபெற்றுள்ளன.

# ஆண்களைவிட பெண்களுக்கு கூடுதல் நித்திரை தேவையாம்

லண்டன், ஜன. 30

ஆண்களைவிட பெண்களுக்கு கூடுதல் தூக்கம் தேவைப்படுகிறது என லண்டனைச் சேர்ந்த லோப்பரோ பல்கலைக் கழகத்தின் உறக்க ஆராய்ச்சி மைய இயக்குநர் பேராசிரியர் ஜிம் ஹோரான் தெரிவித்துள்ளார்.

''நாள் முழுவதும் சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருக்கும் மூளைக்கு ஓய்வு கொடுப்பதுதான் தூக்கம். சோர்வடைந்த மூளைக்குப் புத்துணர்ச்சி கொடுப்பது தான் தூக்கத்தின் முக்கிய பணி. மூளையின் ஒரு பகுதி கார்டெக்ஸ். இது நினைவாற்றல், தகவல் பரிமாற்றம் ஆகிய பணிகளைச் செய்கிறது'' என்றும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

''ஆழ்ந்த தூக்கத்தின்போது இது வேலை செய்வதை நிறுத்திக்கொண்டு பகல்நேர இயக்கத்தை மறு ஆய்வு செய்கிறது. எனவேதான், மூளைக்கு அதிக வேலை கொடுப்பவர்களுக்கு இரவில் அதிகநேர தூக்கம் தேவைப்படுகிறது'' என்றும் அவர் விளக்கமளித்துள்ளார்.

''பெண்களின் மூளை ஆண்களின் மூளையிலிருந்து மாறுபட்டது. குழந்தைகள், கணவன் என குடும்பப் பொறுப்பு மட்டுமல்லாது, அலுவலகப் பொறுப்புகளையும் பெண்கள் சுமக்கவேண்டியுள்ளது. எனவே, ஆண்களைவிட பெண்களுக்கு அதிகநேர தூக்கம் தேவைப்படுகிறது. சராசரியாக 20 நிமிடமாவது பெண்கள் கூடுதலாக தூங்கவேண்டும்'' என்றும் அவர் பரிந்துரை செய்துள்ளார்.

''நிறுவனத்தின் உயர் பொறுப்பில் உள்ள ஆண்கள் பல்வேறு முடிவுகளை எடுக்கவேண்டிய கட்டாயத்தில் உள்ளனர். அவர்களுடைய மூளை மிகவும் சோர்வடைகிறது. அவர்களுக்கும் சராசரி ஆண்களைவிட கூடுதல் தூக்கம் தேவைப்படுகிறது'' என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# இரு கிளர்ச்சியாளர்களுக்கு ஈரானில் தூக்குத்தண்டனை

ஈரானில் ஆளும் கட்சிக்கு எதிராகக் கிளர்ச்சியில் ஈடுபட்ட இரண்டு பேர் தூக்கிலிடப்பட்டனர். இவர்களுக்கு நீதிமன்றம் மரணதண்டனை விதித்திருந்தது.

கடந்த ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் வெளியான முடிவுகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து எதிர்க்கட்சிகள் நடத்திவந்த போராட்டங்களில் இவ்விருவரும் கலந்து கொண்டவர்களாவர். இவ்வாறு கிளர்ச்சியில் ஈடுபட்ட இருவரும் கடவுளின் எதிரிகள் என்ற அடிப்படையில் தண்டிக்கப்பட்டுள்ளனர்.

ஆயுதக் குழு உறுப்பினர்களான இவ்விருவரும் இஸ்லாமிய ஆட்சியை கவிழ்ப்பதற்கு முயற்சி செய்தவர்கள் என சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. இவ்விருவரும் தூக்கிலிடப்பட்டு கொல்லப்பட்டுள்ளனர்.

கடந்த வருடத்தில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டங்களில் முக்கிய பங்கெடுத்தவர்களுக்கு முதல் தடவையாக இப்போது மரணதண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

தேர்தலை மீளவும் நடத்துமாறு கோரிக்கை விடுத்து ஈரானில் பாரிய ஆர்ப்பாட்டங்களை எதிர்க்கட்சிகள் முன்னெடுத்து வந்தமை குறிப்பிடத்தக்கது.

இதுவரை கிளர்ச்சியில் ஈடுபட்ட 30 பேர் கொல்லப்பட்டுள்ளனர். ஆயிரக்கணக்கானோர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.



சீனத் தலைநகர் பீஜிங்கில் உலக சொக்லட் பொழுதுபோக்குக் கண்காட்சி நடைபெறுகிறது. அதில் சொக்லட்டுகளால் செய்யப்பட்ட உடை, அணிகலன்களை அணிந்து வலம் வந்து பார்வையாளர்களைப் பரவசப்படுத்தும் அழகிகள்.

# உலகில் 3 கோடி 40 லட்சம் பேர் கடந்த ஆண்டில் வேலையிழப்பு

## சர்வதேச தொழிலாளர் அமைப்பு தகவல்

ஜெனிவா, ஜன. 30

உலகம் முழுவதும் கடந்த ஆண்டில் மட்டும் 3 கோடி 40 லட்சம் பேர் வேலை இழந்துள்ளனர். இதனையடுத்து வேலை இல்லாதவர் எண்ணிக்கை 21 கோடி 20 லட்சம் ஆக உயர்ந்துள்ளது. 2007, 2008, 2009 ஆம் ஆண்டுகளில் வேலை இல்லாதவர்களின் எண்ணிக்கை 19 சதவீதம் உயர்ந்துள்ளது.

சர்வதேச தொழிலாளர் அமைப்பு (ஐ.எல்.ஓ.) இந்தப் புள்ளி விவரங்களை வெளியிட்டுள்ளது.

வேலைவாய்ப்பு இன்மையால் அதிகம் பாதிக்கப்பட்டவர்கள் இளம் தொழிலாளர்கள் தாம். இவர்களில் வேலையின்மை 13.4 வீதம் உயர்ந்துள்ளது. 1991 இற்குப் பிறகு இதுவே மிக உயர்ந்த அளவாகும். நிதி நெருக்கடியால் உலகின் மிகப்பெரும் வங்கிகள் நஷ்டமடைந்தபோது, அவற்றைக் காக்க அரசுகள் எப்படி உறுதியாகச் செயற்பட்டனவோ அதே உறுதி இப்போது புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்கவும் தேவைப்படுகிறது'' என சர்வதேச தொழிலாளா் அமைப்பின் இயக்குநர் ஜூவான் சோமவியா தெரிவித்துள்ளார்.

''உலக நாடுகள் தங்கள் முயற்சிகளை ஒருங்கிணைத்து இந்த நிலைமையை மேம்படுத்த முயற்சி மேற்கொள்ள வேண்டும். 2010 இல் உலகின் சராசரி பொருளாதார வளர்ச்சி 3.9 சதவீதமாக இருக்கும் எனக் கணிக்கப்பட்டுள்ளது. அதேசமயம் வேலை இல்லாதவர் எண்ணிக்கை கணிசமாகக் குறையவும் வாய்ப்பில்லை. வேலை இல்லாதவர் அளவு 6.7 சதவீதம் முதல் 7 சதவீதத்திற்குள் இருக்கும்'' என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

''அதேசமயம் பல நாடுகளிலுமுள்ள தொழிற்சாலைகளில் 150 கோடி பேரின் வேலை நிச்சயமற்ற நிலையில் உள்ளது. உலகத் தொழிலாளர்களின் எண்ணிக்கையில் இது 50 சதவீதமாகும். வளர்ச்சியடைந்த நாடுகளின் பொருளாதாரம் 2009 ஆம் ஆண்டில் 3.5 சதவீதம் சுருங்கியது. அதனால்தான் வேலை இல்லாதவர் எண்ணிக்கை 2.4 சதவீதத்தில் இருந்து 8.4 சதவீதமாக உயர்ந்துள்ளது'' என்றும் ஜூவானா சோமவியா கூறியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.பி.எல். அணிகளுக்காக விளையாட பாக். வீரர்கள் அழைக்கப்படவில்லை

புதுடில்லி, ஜன. 30

3ஆவது ஐ.பி.எல். 'ருவென்ரி-20' கிரிக்கெட் போட்டித் தொடரில் விளையாடுவதற்காக பாகிஸ்தான் வீரர்கள் எவருக்கும் அழைப்பு விடுக்கப்படவில்லை'' - என்று ஐ.பி.எல். தலைவரான லலித் மோடி கூறியுள்ளார்.

சில தினங்களுக்கு முன்னர் பாகிஸ்தான் வீரரான ரஸாக் ஐ.பி.எல். தொடரில் டெக்கான் அணி சார்பாக விளையாடுவதற்காக ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார் எனக் கூறப்பட்டிருந்தது. எனினும் அதனை டெக்கான் அணி மறுத்திருந்தது.

இந்த நிலையிலேயே லலித் மோடி இவ்வாறு கூறியுள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறியவை வருமாறு:-

''ஐ.பி.எல். போட்டிகளில் விளையாடுவதற்காக பாகிஸ்தான் வீரர்கள் எவரும் இதுவரை ஒப்பந்தமாகவில்லை.

''பாகிஸ்தான் வீரர்கள் ஐ.பி.எல். போட்டியில் பங்கேற்பது தொடர்பாக வெளியான செய்திகள் அனைத்தும் யூகமானவை. இதுவரை எந்தப் பாகிஸ்தான் வீரரும் ஒப்பந்தமாகவில்லை.

அதேவேளை, எந்த அணியும் பாகிஸ்தான் வீரர்களுக்கு இதுவரை அழைப்பு அனுப்பவில்லை.'' - என்றார்.

''இதற்கிடையே கல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி தன்னை ஒப்பந்தம் செய்ய விரும்புகிறது'' என்று பாகிஸ்தான் வீரர் அப்துல் ரஸாக் கூறியுள்ளார்.

இதுகுறித்த மேலதிகத் தகவல்கள் எதுவும் வெளிவரவில்லை.

## இந்திய அணி அறிவிப்பு

தென்னாபிரிக்காவுக்கு எதிரான முதலாவது டெஸ்ட் போட்டிக்குரிய இந்திய அணியில் புதுமுக வீரர்களான அபிமன்யு மிதுன், சஹா மற்றும் பத்ரிநாத் ஆகியோர் சேர்க்கப்பட்டுள்ளனர். அதேவேளை, காயம் காரணமாக டிராவிட், யுவராஜ்சிங் ஆகியோர் நீக்கப்பட்டுள்ளனர்.

முதலாவது டெஸ்ட் போட்டிக்கான 15 பேர் கொண்ட இந்திய அணியின் விவரம் வருமாறு:-

டோனி (அணித்தலைவர்), ஷேவாக், கௌதம் கம்பீர், டெண்டுல்கர், வி.வி.எஸ். லக்ஷ்மன், எம்.விஜய், பத்ரிநாத், ஹர்பஜன்சிங், சஹீர்கான், இஷாந்த் ஷர்மா, அமித் மிஸ்ரா, சுதிப் தியாகி, பிரக்யான் ஓஜா, அபிமன்யு மிதுன், விருத்திமான் சஹா.

## ஐ.பி.ல். தொடர்பாகக் கருத்து வெளியிட பாகிஸ்தான் வீரர்களுக்குத் தடை விதிப்பு

லாகூர், ஜன. 30

ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டிகள் தொடர்பாக பாகிஸ்தான் வீரர்கள் எவ்விதக் கருத்தும் தெரிவிக்கக் கூடாது என பாகிஸ்தான் கிரிக்கெட் சபை தடை விதித்துள்ளது.

அண்மைக்காலமாக ஐ.பி.எல். தொடர் குறித்து பாகிஸ்தான் வீரர்கள் மாறி மாறி பல்வேறுபட்ட கருத்துக்களைத் தெரிவித்து வந்தனர்.

இந்நிலையிலேயே ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டிகளில் பங்கேற்பது தொடர்பாக பாகிஸ்தான் வீரர்கள் எவரும் எந்தவிதமான கருத்துக்களும் தெரிவிக்கக் கூடாது என்று பாகிஸ்தான் கிரிக்கெட் சபை உத்தரவிட்டுள்ளது.

அதேவேளை, பாகிஸ்தான் அணி நிர்வாகம் தெரிவிக்கும் கருத்துகளையே வீரர்கள் வெளியிடமுடியும் எனவும் கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது.

## தலைவராக ஆசைப்படும் சகலதுறை வீரர் இர்பான்




இந்திய அணியின் ஆரம்ப வீரரான கௌதம் கம்பீரைத் தொடர்ந்து, அணித் தலைவராகும் தனது ஆசையை சகலதுறை வீரரான இர்பான் பதான் வெளியிட்டுள்ளார்.

அண்மையில் இந்திய அணியின் தலைவராகுவதற்கு கம்பீர் விருப்பம் தெரிவித்திருந்தார். இந்நிலையில், இர்பான் பதான், ஐ.பி.எல். அமைப்பின் கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணியின் தலைவராச் செயற்படுவதற்கு விருப்பம் தெரிவித்துள்ளார்.

ஐ.பி.எல். 'ருவென்ரி-20' போட்டியில் நடிகை பிரித்தி ஜிந்தாவின் கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணிக்காக இர்பான் பதான் விளையாடி வருகிறார். மோசமான ஆட்டம் காரணமாக இந்திய அணியிலிருந்து ஒதுக்கணிக்கப்பட்டிருக்கும் இவர், மீண்டும் அணியில் இடம்பிடிப்பதற்காகப் போராடிவருகிறார்.

இந்நிலையிலேயே இர்பான் பதான், அணித்தலைவராகும் விருப்பம் குறித்துக் கருத்து வெளியிட்டுள்ளார்.

இது குறித்து அவர் கூறியவை வருமாறு:-

சமீபத்திய உள்ளூர் போட்டிகளில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி வருவதால், விரைவில் இந்திய அணியில் இடம்பிடிப்பேன் என்ற நம்பிக்கை உள்ளது.

கடந்த ஆண்டு அதிகளவான சர்வதேசப் போட்டிகளில் விளையாடாத போதிலும், உள்ளூர் போட்டிகளில் அதிகளவாகவே விளையாடிவருகிறேன். இதனால், முழு உடற்தகுதியுடன் இருக்கிறேன். அணியிலிருந்து புறக்கணிக்கப்பட்ட - இக்கால கட்டத்தில், துடுப்பாட்டம் மற்றும் பந்துவீச்சுக் குறித்து நிறையவே கற்றுக் கொண்டுள்ளேன். எனவே, இந்திய அணியில் இடம்பிடிக்கும் பட்சத்தில் தொடர்ந்து சகலதுறையிலும் அசத்துவேன்.

முதலாவது ஐ.பி.எல். தொடரின்போது சிறப்பாகச் செயற்பட்ட எங்கள் கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணி, 2ஆவது தொடரில் சோபிக்கத் தவறியது. ஆனால், இம்முறை சாதிப்பதற்கான நிறைய பயிற்சிகளை மேற்கொண்டு வருகிறோம். கிண்ணத்தை வெல்லக்கூடிய அளவுக்கு வீரர்கள் முழுத் உடற்தகுதி பெற்றுள்ளனர்.

பஞ்சாப் அணியின் தலைவராகுவதற்கு அதிக விருப்பம் கொண்டுள்ளேன். இப்பொறுப்புக் கிடைக்கும் பட்சத்தில் முழு மனதுடன் செயற்பட்டு, அணிக்குக் கிண்ணத்தை வென்று தருவதற்குப் போராடுவேன். இதற்கான முடிவு அணி நிர்வாகத்தின் கையில்தான் உள்ளது'' - என்றார்.




## டிராவிட்டுக்கு பெங்களூரில் நேற்று சத்திர சிகிச்சை!



பெங்களூர், ஜன. 30

இந்திய அணியின் துடுப்பாட்ட வீரரான ராகுல் டிராவிட்டிற்கு பெங்களூரில் உள்ள வைத்தியசாலையில் நேற்று சத்திரகிச்சை நடைபெற்றது.

பங்களாதேஷ் அணிக்கு எதிரான 2ஆவது டெஸ்ட் போட்டியின்போது ராகுல் டிராவிட்டுக்கு எலும்பு முறிவு ஏற்பட்டது. இதற்கான சத்திரகிசிச்சையே அவருக்கு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சிகிச்சையின் பின்னர் சிறிய ஒய்வு எடுத்துவிட்டு நேற்று மாலையே அவர் வைத்தியசாலையிலிருந்து வெளியேறியுள்ளார்.

சிகிச்சை செய்யப்பட்டமையால் அவர் 2 முதல் 3 வாரங்கள் வரை ஓய்வில் இருக்க வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதனால், தென்னாபிரிக்காவுக்கு எதிரான முதல் டெஸ்டில் விளையாடாத டிராவிட், 2ஆவது டெஸ்டிலும் ஆடுவதில் சந்தேக நிலை நீடிக்கிறது.

## இறுதியில் முரே தெரிவு

மெல்போர்ண், ஜன. 30



ஆஸ்திரேலிய ஓபன் கிராண்ட்ஸ்லாம் டென்னிஸ் போட்டித் தொடரின் ஆடவர் ஒற்றையர் இறுதிச் சுற்றுக்கு பிரிட்டன் வீரரான அன்ரி முரே தகுதிபெற்றார்

நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆடவர் ஒற்றையர் பிரிவின் முதலாவது அரையிறுதி ஆட்டத்தில் அன்ரி முரே, குரோஷ்யாவின் மரின் சிலிச்சும் மோதினர்.

முதல் செற்டை மரின் சிலிச் எளிதாகக் கைப்பற்றினார். ஆனால், அதன் பிறகு முரேயின் தாக்குதலைச் சமாளிக்க முடியாமல் சிலிச் திண றினார்.

தொடர்ந்து மூன்று செற்களையும் முரே வென்றார். அவர் 3-6, 6-4, 6-4, 6-2 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்று இறுதிச் சுற்றுக்குள் நுழைந்தார்.

அதேவேளை நடந்த ஆடவர் இரட்டையர் பிரிவுக்கான அரையிறுதி ஆட்டத்தில் சிறப்பான ஆட்டத்தை வெளிக்காட்டிய கனடாவின் டானியல் நெஸ்ரர் - செர்பியாவின் நெனாட் ஜிமோன்ஜிக் ஜோடி, குரோஷ்யாவின் இவோ கார்லோவிக் - செர்பியாவின் டுசன் வேமிக் ஜோடியை 6-4, 6-4 என்ற செற் கணக்கில் வீழ்த்தி இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

அதேவேளை நடைபெற்ற மற்றொரு அரையிறுதிப் போட்டியில், அபாரமாக ஆடிய அமெரிக்காவின் பொப் பிரேயன் - மைக் பிரேயன் ஜோடி, ஜேர்மனியின் மைக்கல் கோஹிமான் - பின்லாந்தின் ஜர்க்கோ நீமினென் ஜோடியை 6-1, 6-4 என்ற செற் கணக்கில் வீழ்த்தி இறுதிச் சுற்றுக்கு முன்னேறியது.

## தெற்காசிய விளையாட்டுப் போட்டி: டாக்காவில் நேற்று ஆரம்பம்

11ஆவது தெற்காசிய விளையாட்டுப் போட்டிகள் பங்களாதே தலைநகரான டாக்காவில் நேற்றுக் கோலாகலமாக ஆரம்பமாகியது.

அடுத்த மாதம் (பெப்ரவரி) 9ஆம் திகதி வரை நடைபெறவுள்ள இந்தப் போட்டியில் இந்தியா, பாகிஸ்தான், இலங்கை, பங்களாதேஷ், நேபாளம், ஆப்கானிஸ்தான், மாலைதீவு, பூட்டான் ஆகிய 8 நாடுகள் பங்கேற்கின்றன.

தடகளம், கைப்பந்து, கபடி, கூடைப் பந்து, குத்துச்சண்டை, ஸ்குவாஷ், பளு தூக்குதல் உட்பட மொத்தம் 23 வகையான விளையாட்டுகள் நடைபெறுகின்றன. இதில் இந்த முறை கிரிக்கெட்டும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. 21 வயதுக்குட்பட்டோருக்கான 'ருவென்ரி-20' கிரிக்கெட் போட்டி இடம் பெறுகிறது.

## தென்னாபிரிக்க அணியின் வீரர்கள் இன்னொரு முகத்தைப் பார்ப்பர்-வோன்

''என்னை ஒரு உதவிப் பயிற்சியாளராக மட்டுமே கண்டு வந்த தென்னாபிரிக்க வீரர்களுக்கு, நான் இப்போது எப்படி இருப்பேன் என்பது எனக்குத் தெரியவில்லை. இனிமேல் எனது வித்தியாசமான - இன்னொரு முகத்தை அவர்கள் பார்க்கப்போகிறார்கள்.''

- என்று அந்த அணியின் இடைக்கால புதிய பயிற்சியாளர் வோன், தெரிவித்துள்ளார்.

தென்னாபிரிக்கா அணி இன்று இந்தியாவிற்குச் செல்லவுள்ள நிலையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறியவை வருமாறு:-

''எனக்கு அணிப் பண்பாடு என்பதில் நம்பிக்கை உண்டு. வீரர்கள் தமது ஒழுக்கத்தைத் தாங்களே பின்பற்றவேண்டும். தவறினால் அது என் பொறுப்பிற்கு வந்து விடும். இதில் நான் சமரசம் செய்து கொள்ளமாட்டேன்.''- என்றார்.

## சம்பியனானது வில்லியம்ஸ் ஜோடி

ஆஸ்திரேலிய டென்னிஸ் தொடரின் மகளிர் இரட்டையர் பிரிவின் இறுதிப் போட்டியில் வில்லியம்ஸ் சகோதரிகள் வெற்றிபெற்றுக் கிண்ணத்தைக் கைப்பற்றியுள்ளனர்.

நேற்று நடந்த இந்த இறுதியாட்டத்தில் செரீனா-வில்லியம்ஸ் ஜோடி சிப்பாவேயின் காரா பிளாக் - அமெரிக்காவின் லிஸல் ஹூபர் ஜோடியைச் சந்தித்தது.



இதில் சிறப்பாக விளையாடிய வில்லியம்ஸ் ஜோடி 6-4, 6-3 என்ற செற் கணக்கில் எதிர் ஜோடியை வீழ்த்தி, மகளிர் இரட்டையர் பிரிவுக்கான கிண்ணத்தை சுவீகரித்தது.

நேற்றுமுன்தினம் நடந்த அரையிறுதியாட்டத்தில் வில்லியம்ஸ் சகோதரிகள், அமெரிக்காவின் லிசா ரேமண்ட் - ஆஸ்திரேலியாவின் ரென்னே ஸ்ரப்ஸ் ஜோடியை 6-3, 7-6 என்ற செற் கணக்கில் வீழ்த்தி இறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றிருந்தது.

அதேபோல, மற்றொரு அரையிறுதியில் காரா பிளாக் - லிஸல் ஹூபர் ஜோடி ரஷ்யாவின் மரியாகிரி லென்கோ - போலந்தின் அக்னிஸ்கா ரத் வன்ஸ்காஜோடியை 6-1, 1-6, 6-3 என்ற செற் கணக்கில் வீழ்த்தி இறுதிச் சுற்றுக்குள் நுழைந்தது.

## மூக்குடைக்கும் கிறிஸ்ரியானோ

உதைபந்து அரங்கின் நட்சத்திர வீரரான கிறிஸ்ரியானோ ரொனால்டோ, சமீபகாலமாக முரட்டுத்தனமான ஆட்டத்தை வெளிக்காட்டி வருகிறார். அண்மை யில் எதிரணி வீரரின் மூக்கை உடைத்த இவர், இரண்டு போட்டிகளில் விளையாடுவதற்கான தடையைச் சந்தித்துள்ளார்.

கடந்த 25ஆம் திகதி, நடந்த மலாகா அணிக்கு எதிரான போட்டியில், ரொனால்டோ, தனது ரியல் மாட்ரிட் அணிக்காக இரண்டு கோல் அடித்து, வெற்றிபெற உதவினார். போட்டியின் 70ஆவது நிமிடத்தில் எதிரணி வீரரின் மூக்கை, தனது கையால் உடைத்தார். இதனால் நடுவரால் 'சிவப்பு அட்டை' காட்டப்பட்டு, உடனடியாகக் களத்தை விட்டு வெளியேற்றப்பட்டார்.

இதனால், 2009 டிசம்பரில் அல்மெரியா அணி வீரரின் மூக்கை உடைத்தமைக்காக 'சிவப்பு அட்டை' காட்டப்பட்டிருந்த இவர், தற்போது இரண்டாவது முறையாக இப்பிரச்சினையில் சிக்கியுள்ளார்.



இதுகுறித்து கிரிஸ்ரியானோ ரொனால்டோ கூறியவை வருமாறு-

''எதிரணியினரைக் காயப்படுத்தும் நோக்கத்துடன் விளையாடுபவன் நான் அல்லன். பாட்ரிக் மிட்லிகாவின் மூக்கு உடைபட்டு ரத்தம் சிந்தியதை தொலைக் காட்சியில் பார்த்து தெரிந்து கொண்டேன்.

''பின்னர் மலாகா அணியினர் ஆடை மாற்றும் அறைக்குச் சென்று, அவரிடம் மன்னிப்பும் கேட்டேன். ஆனால், எனக்கு 'சிவப்பு அட்டை' காட்டப்பட்டதை மிகவும் அவமானமாக உணர்கிறேன்''- என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரலாற்றுப் புகழ்பெற்ற இணுவில் கந்தசுவாமி கோயில் திருமஞ்சம்

இன்று 30.01.2010 தைப்பூசத் திருநாளன்று இணுவில் கந்தசுவாமி கோயிலின் நூறாண்டு பழைமை வாய்ந்த திருமஞ்சத்தில் முருகப் பெருமான் வீதியுலா வருகின்றார். அதனையொட்டி இந்த ஆக்கம் இங்கு இடம்பெறுகிறது.

**அமைப்பும் கட்டுமானத் திறனும்**

ஆகம, சிற்ப நுண்விதிகளுக்கு அமைய உருவாக்கம் பெற்ற உபதளக் கட்டமைப்புடன் கூடிய அடித்தளம், கலைநுட்பம் திட்பமும் கொண்டு விளங்குகின்றது.

ஆறு சில்லுகளுடைய இம்மஞ்சம், 16பிரதம கோணங்கள் கொண்டது. புனரமைப்பின் பின்னர் நான்கு முகப்புக் குதிரைகளுடனும் நான்கு சில்லுகளுடனும் இதுதிகழ்கிறது.

பன்னிரு யாளிகள், தமது தலைகளாற் பாரிய விமானத்தைத் தாங்கி நிற்கும் பாவனையில் அமைந்துள்ள இம்மஞ்சம் பன்னிரு கரங்களையும் விரித்து அருள்மழை சொரிந்து வரும் திருமுருக தத்துவத்தின் வெளிப்பாடாகத் திகழ்கிறது.

16 பிரதம கோணங்களுடைய இம்மஞ்சம் தளத்திலிருந்து விமானத்தின் 3ஆவது தளம் வரை மடக்கைச் சிறப்புகளுடன் காணப்படுகின்றது. விமானம் 5 கலசங்களையுடையது.

**மஞ்ச நிர்மாணத்தில் முருகன் அருள் செயற்பாடுகள்**

தமிழகத்தின் புகழ்பெற்ற சிற்பிகள் மூலமே இத்திருமஞ்சத்தை நிர்மாணிக்க விரும்பினார் பெரிய சந்நியாசியார். அவர்தம் வேண்டுகோளைப் ஏற்றுக்கொண்ட முருகனும் அன்றைய தமிழகத்தின் தலைசிறந்த சிற்பிகளின் ஒருவரும் ஸ்தபதியுமாகிய முத்துராக்கப்ப ஆச்சாரியார் அவர்கள் கனவில் தோன்றி-

'யாழ்ப்பாணத்து இணுவில் என்னும்பதியில் சித்தர் மஞ்சம் செய்விக்கப் போகிறார்.

அங்கு சென்றால் உங்கள் கைத்திறனையும் சாதுர்யத்தையும் பயன்படுத்திக் கொள்ளலாம்.'வறுமை நீங்கி வளமாய் வாழலாம்' எனத் திருவாய் மலர்ந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது.

கனவில் முருக தரிசனம் பெற்ற ஸ்தபதி, பெருந்திருமஞ்ச நிர்மாணத்திற்கான கலைஞர் குழாத்தினை உடனடியாகவே தயார் செய்யலானார். இலங்கையின் புராதனத் துறைமுகங்களில் ஒன்றாகிய ஊர்காவற்றுறையின் ஊடாக எமது திருநாட்டிற் காலடி பதிக்கலானார்.

ஸ்தபதியுடன் தரிசனத் திருவிளையாடல் செய்த முருகன், மஞ்சத்தைச் செய்விக்க விரும்பிச் செயற்பட்ட எஜமானன் ஆகிய பெரிய சந்நியாசியாரிடம் சென்று,

''நீ நினைத்தபடியே ஆசாரியார்களைத் தருகிறேன் எனது பக்த கோடிகள் ஊர் காவற்றுறையில் வந்துள்ளார்கள். அவர்களை அழைப்பித்து வந்து ஆதரித்து வேலையைத் தொடங்குவாய்''

என்று கட்டளையிட்ட திருவிளையாடல் இலங்கையின் நவீன திருமஞ்ச வரலாற்றினைத் தொடக்கி வைப்பதாகின்றது.

முருகனின் கனவுக் கட்டளையைத் தலைமேற்கொண்ட, எஜமானன் பெரிய சந்நியாசியாரும் தமிழகத்திலிருந்து வருகை தந்த ஸ்தபதி முத்துராக்கப்ப ஆச்சாரியாரும் ஒருவரை ஒருவர் ஊர்காவற்றுறையில் சந்தித்து அறிமுகம் செய்து கொண்டனர். இருவரும் முருகனின் திருவிளையாடலை ஒருவருக்கு ஒருவர் கூறி எண்ணி எண்ணி வியந்ததாகவும் ஆலய வரலாற்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இன்று மஞ்சத்தடி கந்தசாமி கோவில் அமைந்திருக்கும் இடமே இம்மஞ்சம் நிர்மாணம் பெற்ற இடமாகும். தளவேலை பூர்த்தியெய்திய பின்னர்,இங்கிருந்து கந்தசுவாமி ஆலய வளாகத்திற்கு இழுத்து வரப்பட்டதாகவும் ஆலய வரலாற்றில் குறிப்பிடப் பட்டுள்ளது.

**திருமஞ்சப் புனர் நிர்மாணம்**

1908 அல்லது 1912 இல் வெள்ளோட்டம் கண்ட இத்திருமஞ்சம் 1960 இன் ஆரம்பத்தில் பெரும் ஈடாட்டம் ஒன்றை எதிர்கொண்டது. 1965 இல் வீதியுலாவின் போது அச்சு முறிந்தமை அதன் உலாவினை இடை நிறுத்தலா யிற்று. இதனைக் கண்டு திகைத்துப்போய் உறைந்துநின்ற இணுவில் இந்து சமூகம் திடீரென சுதாகரித்துக் கொண்டது.

அண்மையாக , பரராசசேகரப் பிள்ளையார் ஆலயத்தில் சித்திரத்தேர்த் திருப்பணியில் மும்முரமாக ஈடுபட்டிருந்த திருநெல்வேலி செ.கந்தசாமி ஸ்தபதியாரை அழைத்து வந்து உடன் நிவாரண நடவடிக்கையில் இறங்கலாயினர். தேர்க் கலையுலகில் அன்றைய காலகட்டத்தில் வளர்ந்து வருங்கலைஞராகத் திகழ்ந்த கந்தசாமி,துடிப்புடனும் துரிதமாகவும் செயற்படலானார். பனைமரங்களை எடுத்து முறிந்திருந்த அச்சுக்குப் பதிலாக வைத்து மறுசீரமைப்புச் செய்து,திருமஞ்சத்தை ஓட வைத்து அதன் இருப்பிடத்திற்குக் கொண்டுவந்து இருத்தியதாக கூறப்படு கிறது.

புனர்நிர்மாணம் வேண்டி நின்ற மஞ்சம் அதன் புராதன அமைப்பில் மாற்றங்கள் சிலவற்றைச் செய்து சிற்சில புத்தாக்கம் எனும் செயற்பாட்டின் அடிப்படையில் 40 அடி எனும் அளவில் மீளமைப்புப் பெற்று 1983.06.27 இல் மீள் வெள்ளோட்டம் ஒன்றைக் கண்டது.



தைப்பூசம், பெருந்திருவிழாவின் 12ஆம் நாள் மஞ்சத் திருவிழா என வருடம் தோறும் இரு தடவைகள் வீதி வலம் வரும். இலங்கையில் முதலாவதும் அளவிலும் பெரியதுமாகிய திருமஞ்சம் இணுவில் கந்தசுவாமி திருமஞ்சமே.

**சிறப்பு**

தனது பிரமாண்டத்தன்மையாலும், கலை இலக்கணப் பெருவெளிப்பாட்டுப் பண்பாலும்,இந்துக்களையும்,இந்துக்கள் அல்லாத இரசிகர்களையும் கவர்ந்து நிற்கும் இணுவில் மஞ்சம் யாழ்ப்பாணத்தில் இந்துக்கலை வரலாற்றில் இந்தியப் பாணிக் கலை மரபில் சிறந்து விளங்கும் தரம் கொண்டது என்பதில் ஐயமேதுமில்லை.

வேலுப்பிள்ளை அம்பிகைபாகன்
M.Phill, முன்னாள் துணை விரிவுரையாளர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

# புங்குடுதீவு மடத்துவெளிச் சந்தியில் படையினர் சோதனை மீண்டும் நிறுத்தம்

புங்குதீவு, மடத்துவெளிச் சந்தி ஊடாக வாகனங்களில் பயணிப்போரை சோதனை செய்யும் நடவடிக்கைகள் நேற்று முதல் நீக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் இருந்து தீவுப் பகுதிக்குச் செல்வோர் வழமையாக புங்குடுதீவு மடத்துவெளிச் சந்தியில் வைத்துச் சோதனை செய்யப்பட்டு வந்தனர்.

எனினும் ஜனாதிபதித் தேர்தல் அறிவிப்பு வந்ததையடுத்து நிறுத்தப்பட்ட நடவடிக்கைகள் கடந்த இருநாள்களாக மீண்டும் மேற்கொள்ளப்பட்டு வந்தது ஆயினும் நேற்றிலிருந்து இந்தச் சோதனை நடவடிக்கை நிறுத்தப்பட்டுள்ளது.

அதேவேளை, நயினாதீவுக்குச் செல்பவர்களுக்கான அடையாள அட்டைகளும் குறிகாட்டுவான் இறங்குதுறையில் படையினரிடம் கையளித்துச்செல்லும் நடைமுறையும் நீக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-16-188)


அம்பிகை துணை



காரைநகர் பலகாடு ராஜபுரம்

ஸ்ரீ ராஜ ராஜேஸ்வரி அம்பாள் ஆலய

பாலஸ்தாபன கும்பாபிஷேக விஞ்ஞாபனம்

அம்பிகை அடியார்களே!

ஸ்வதி ஸ்ரீ நிகழும் விரோதி வருடம் தைமாதம் 17 ஆம் திகதி (01.02.2010) திங்கட்கிழமை முற்பகல் 10 மணி 20 நிமிடம் முதல் 10 மணி 45 நிமிடம் வரையுள்ள மீனலக்கின சுப முகூர்த்தத்தில் திருவருள் துணைகொண்டு பாலஸ்தாபன கும்பாபிஷேகம் நடைபெற நிச்சயித்திருப்பதால் அடியார்கள் அன்று காலை 6 மணி முதல் நடைபெறும் கிரியைகளையும் தரிசித்து அம்பிகையின் பாலஸ் தாபனமும், நடைபெறும் திருப்பணிகள் குறைவின்றி நிறைவேறவும், விரைவில் புனராவர்த்தன பிரதிஸ்டா மகா கும்பாபிஷேகமும் நடைபெற அம்பிகையைப் பிரார்த்திப்போமாக.

முதல் நாள் (31.01.2010) நிகழ்வுகளாக காலை 8.30 மணி முதல் விநாயகர் வழிபாடு, பாலஸ்தாபன பிரார்த்தனை, கணபதி ஹோமம், நவக்கிரக ஹோமம், வாஸ்து சாந்தி என்பன நடைபெறும்.

சர்வ சாதகர்
"சிவாகமஞான பாஸ்கரன்"
சிவஸ்ரீ. தா.மகாதேவக்குருக்கள்
(அதிபர், தர்மசாஸ்தா குருகுலம்- இணுவில்)

பிரதம குரு
"சிவாகம கிரியா வித்தகர்"
சிவஸ்ரீ. சுவாமிநாத பாலகணேஸ்வரக்குருக்கள்
நாகபூஷணி அம்பாள், நயினாதீவு

உதவி "வேத ஆகம ஆய்வாளர்"
பிரம்மஸ்ரீ தி.நடராஜக் குருக்கள்
(பொற்பதி விநாயகர் தேவஸ்தான
பிரதமகுரு, கொக்குவில்)

சாதகர்
"சாதகரத்னாகர"
பிரம்மஸ்ரீ சோ.சிவபாலசர்மா
(இணுவில்)

நா.ஞானசம்பந்தக்குருக்கள்
மணற்காடு முத்துமாரி
அம்மன்
தேவஸ்தானம்

ஆலய குரு
"சிவாகம"
சி.சிவசுப்பிரமணியக் குருக்கள்
(சுழிபுரம்)

"அம்பிகையைச் சரணடைந்தால் அதிகவரம் பெறலாம்"

ஆலய பரிபாலகர்
செ. கணேசமூர்த்தி
பலகாடு, காரைநகர்.

அம்பிகை அடியார்கள்.

(ர-564521)


# ஆயுள்வேத மூலிகைகளை பயிரிட குடாநாட்டு மண்வளம் சிறப்பானது

## சுதேச வைத்திய அமைச்சின் செயலர் கருத்து

ஆயுள்வேத மூலிகைகளை வளர்ப்பதற்கு யாழ்ப்பாணத்து மண்வளம் மிகவும் பொருத்தமானது. மூலிகை வகைகளைப் பயிரிட்டு அதன் மூலம் எமக்குத் தேவையான ஆயுள் வேத மருந்துகளைப் பெற்றுக் கொள்ளும் அதேசமயம் அந்நியச் செலாவணியையும் ஈட்டிக்கொள்ள முடியும்.

இவ்வாறு சுதேச வைத்திய அமைச்சின் செயலாளர் ரி.அசோக பீரிஸ் தெரிவித்தார்.

கைதடி அரசினர் சித்தஆயுள்வேத வைத்தியசாலைக்கு நேற்று விஜயம் மேற்கொண்ட அமைச்சின் செயலாளர் அசோக பீரிஸ், சுதேச வைத்திய அமைச்சின் நாவின்னவில் உள்ள வைத்திய ஆராய்ச்சி நிலைய விரிவுரையாளர் பேராசிரியர் பிஜல்உ மாரசிங்க ஆகியோர் பிரதேச செயலக பிரிவைச் சேர்ந்த மூலிகை விவசாயிகளுக்கு பயிற்சி வகுப்பை நடத்தினார்கள்.

இந்தப் பயிற்சி வகுப்பில் பேராசிரியர் பிஜல் மாரசிங்க உரையாற்றுகையில் தற்பொழுது கண்டங்கத்தரி, அமுக்கிரா பற்றி குறிப்பிட விரும்புகின்றேன். ஆயுள்வேத வைத்தியத்தில் மிக முக்கியமானவை இந்த மூலிகைகளாகும். இவற்றை பயிரிட்டு அவற்றின் பலாபலனை நாம் பெற்றுக் கொள்ள வேண்டும். இந்த மூலிகைகளை இங்கு பயிரிடுவதோடு இங்குள்ள மண் வளம் சிறப்பானது என்றார்.

இந்த நிகழ்வில் கைதடி சித்த வைத்திய விரிவுரையாளர் திருமதி வி.சத்தியசீலன், வடமாகாண சுதேச வைத்தியப் பணிப்பாளர் திருமதி சி.துரைரட்ணம் ஆகியோரும் கலந்து கொண்டு மூலிகைச் செய்கை பற்றிய கருத்துரை வழங்கினர். (ஒ-ரி-130)

# இயற்கை விவசாய சிறப்புக் குறித்து வட்டுக்கோட்டையில் இன்று கருத்தரங்கு

வட்டுக்கோட்டை அபிவிருத்தி நிறுவனம் நடத்தும் இயற்கை விவசாயம் தொடர்பான கருத்தரங்கு இன்று காலை 8.30 மணிக்கு வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இக்கருத்தரங்கில் இயற்கை விவசாயம் தொடர்பான அறிவினையும் இயற்கையின் பாதுகாப்பிலும், ஆரோக்கியத்திலும் விவசாயிகளின் பங்கு, புதிய தொழில்நுட்பங்கள் தொடர்பான அணுகுமுறைகளும், காலநிலை மாற்றம், புற்றுநோய் தொடர்பான விளக்கங்களும் மற்றும் விவசாயிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாகக் கலந்துரையாடலும் விளக்கவுரைகளும் நடத்தப்படவுள்ளன.

திருநெல்வேலி விவசாயத் திணைக்களப் பிரதிப்பணிப்பாளர் எஸ்.சிவகுமார்,யாழ் பல்கலைக் கழக உயிரியல் விவசாயத்துறைத் தலைவர் கே.மிகுந்தன்,கமநல சேவைகள் திணைக்கள உதவி ஆணையாளர் ம.பற்றிக்நிறஞ்சன், யாழ்.போதனா வைத்தியசாலைப் புற்று நோயியல் பிரிவு வைத் திய கலாநிதி என்.ஜெயக்குமார்,திருநெல்வேலி விவசாய ஆராய்ச்சி நிலைய ஆய்வுப்பொறுப்பாளர் திருமதி வியரட்ணம், பல்கலைக்கழகப் புவியியற்துறை விரிவுரையாளர் என்.பிரதீபராஜா ஆகியோர் கருத்துரை வழங்கவுள்ளனர்.

இதில் ஆர்வமுள்ள விவசாயிகள் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.(1-16)

# சோல்பரி பிரபுவால் 1953 இல் திறந்து வைக்கப்பட்ட ஊரதீவு மண்டபத்தை மீளத் திருத்துமாறு கோரிக்கை

புங்குடுதீவு,ஜன.30

இலங்கையின் முதற் தேசாதிபதி சோல்பரிப்பிரபுவின் நினைவாகப் புங்குடுதீவு, ஊரதீவு கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தைப் புனரமைத்துத் தருமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மேற்படிமண்டபம் 1953 ஆம் ஆண்டு சோல்பரிப் பிரபுவினால் திறந்து வைக்கப்பட்டது.ஆனால் தற்போது இம்மண்டபம் முற்றாக சேதமடைந்த நிலையில் காணப்படுவதாகவும் - தற்போது உல்லாசப் பயணிகளின் வருகை அதிகரித்திருப்பதால் இம்மண்டபத்தை உல்லாசப்பயணிகளைக் கவரும் முகமாக அமைத்து இப்பிரதேசத்தின் வரலாற்றைப் பறைசாற்ற ஏற்பாடு செய்யுமாறும் அப்பகுதிமக்கள் கோரியுள்ளனர்.

வடக்கின் வசந்தம் வேலைத்திட்டத்தின் கீழ் இந்த மண்டபத்தை புனரமைப்புச் செய்து தருமாறு ஊரதீவு கிராமிய அபிவிருத்திச் சங்கத் தலைவர் ந.இராசதுரை கேட்டுள்ளார். (1-16-188)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாக்கு எண்ணும் நிலையங்களில் இருந்து எதிரணி எம்.பிக்கள் விரட்டியடிப்பு

## தமக்கு ஏற்பட்ட அனுபவத்தை விவரிக்கின்றார் ஜயலத் ஜயவர்த்தன

கொழும்பு, ஜன.30

வாக்குகள் எண்ணும் நிலையங்கள் பலவற்றில் இருந்த எதிர்க்கட்சி எம்.பிக்களும் எதிர்க்கட்சிகளின் பிரதிநிதிகளும் அரச காடையர்களால் விரட்டியடிக்கப்பட்டனர் என்று ஐ.தே.கவின் எம்.பி.டாக்டர் ஜயலத் ஜயவர்தன நேற்றுக் கூறினார்.

அவர் மீது கூட பிரதி அமைச்சர் ஒருவரின் அடியாள்கள் வெற்றுத் தண்ணீர்ப் போத்தல்களை வீசித் தாக்குதல் நடத்தி, வாக்குகள் எண்ணும் நிலையத்தில் இருந்து வெளியேறுமாறு மிரட்டினர் என்றும் அவர் சொன்னார்.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இந்த அனுபவத்தை விளக்கினார்.

அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு:-

வாக்குகள் எண்ணும் சாவடிகள் பலவற்றில் பெரும் எண்ணிக்கையில் மோசடிகள் இடம்பெற்றன. அங்கிருந்த எம்.பிக்கள் கூட அரச காடையர்களால் விரட்டியடிக்கப்பட்டனர்.

நீர்கொழும்பில் உள்ள வாக்குகள் எண்ணும் சாவடி ஒன்றில் நானும் எனது பிரதிநிதிகளும் இருந்தோம். அங்கு பிரதி அமைச்சர் சரத் குணரட்ணவும் அவரது அடியாள்களும் வந்து எங்களை மிரட்டினர்.

மஹிந்த ராஜபக்ஷ 61 வீதத்தால் வெற்றிபெற்றுவிட்டார் எனக் கூறி எம்மை அங்கிருந்து வெளியேறுமாறு கூறினர். 10 நிமிடங்களக்குள் வெளியேறாவிட்டால் தாம் வெளியே வைத்துப் பார்த்துக்கொள்வார்கள் என்று மிரட்டினர்.

அத்தோடு என்னைப் புலி என்று ஏசி என்மீது வெற்றுத் தண்ணீர் போத்தல்களை வீசித் தாக்குதல் நடத்தினர். இதனால், எனது பிரதிநிதிகள் உயிர் அச்சத்தால் அங்கிருந்து வெளியேறினர். இது தொடர்பாக நான் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் முறைப்பாடு செய்தேன். பொலிஸிலும் முறைப்பாடு செய்தேன். எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

இதேபோல், அநுராதபுரம் மற்றும் மாத்தளை உள்ளிட்ட பல இடங்களில் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. எதிர்க்கட்சி எம்.பிக்களும் கூட வாக்குகள் எண்ணும் சாவடிகளில் இருந்து விரட்டப்பட்டுள்ளனர். இதனால், அரசு தமக்கு ஏற்றாற்போல் வாக்கு எண்ணிக்கைகளைத் திரிபுபடுத்தியது. ஆகவே, இந்தத் தேர்தல் முடிவுகளை எம்மால் ஏற்க முடியாது - என்றார்.

(அ-சி)

## மணவாளக் கோல உற்சவம்

புலோலி தேவரன் அருள்மிகு ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்மன் கோவில் உற்சவம் எதிர் வரும் 2ஆம் திகதி செவ்வாய்க் கிழமை நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் விசேட பூசை வழிபாடுகளுடன் சுவாமி வீதி யுலாவும் இடம் பெறும். (ஒ-236)


கிரிக்கெட் சுற்றுப்போட்டி

**அரியாலை ஸ்ரீ கலைமகள் விளையாட்டுக் கழகம்**

நடத்தும் ★6பேர் கொண்ட 5 Over கிரிக்கெட் சுற்றுப்போட்டி ★

பங்குபற்ற விரும்பும் அணிகள் பின்வரும் இடங்களில் விண்ணப்பப்படிவங்களைப் பெற்று 09.02.2010ஆம் திகதிக்கு முன்னர் ஒப்படைக்கவும்.

★ லக்ஷன் வீடியோ சென்ரர், கன்னாதிட்டி சந்தி, யாழ்ப்பாணம்.
★ அஷ்வின் வீடியோ அன் ஓடியோ அன் போன் சொப், இல.37, டேவிற் வீதி, யாழ்ப்பாணம்.
★ வெலா சிகை அலங்கரிப்பு நிலையம், கஸ்தூரியார்வீதி அருகில்.
★ கலைமகள் சனசமூக நிலையம், அரியாலை.
★ நியூ லக்சி ஹாட்வெயார், ஸ்ரான்லி கல்லூரி முன்பாக.

தொடர்புகளுக்கு: 0771275378, 0776547609, 0772334201

(C/564524)



**வீடு வாடகைக்குத் தேவை**

சிறிய குடும்பம் வசிப்பதற்கு வீடு வாடகைக்குத் தேவை.

தொடர்பு: 0774440172, 0774296595



புதுக்கடை திறப்பு விழா

# PC SOLVE

சுன்னாகத்தில் இன்று (30.01.2010) சனிக்கிழமை மு.ப.8.00 மணி முதல் 9.00 மணி வரையுள்ள சுபவேளையில் எம்மால் புதிதாக அமைக்கப்பட்ட PC SOLVE எனும் கணனி ஸ்தாபனத்தை ஆரம்பித்து வைக்கவுள்ளோம்.

அனைவரையும் இந்த நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

சகல விதமான கணனி உபகரணங்களை மலிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

ஸ்ரேசன் வீதி,
சுன்னாகம்.

கு.திருவேரகன்
உரிமையாளர்
0714623852

(94365)



## QUOTATIONS FOR LENDING A BUILDING ON LEASE FOR UN-HABITAT OFFICE

Please quote your monthly rate of rent expected for lending your building on lease for the UN-HABITAT office Jaffna. The building should be situated preferably within the Municipal limits of Jaffna. The building should conform to the following requirements:-

i) Should have 2000 square feet floor area
ii) Should have a secure garage for parking vehicle
iii) Should have pipe borne water and electricity service
iv) Attached toilet facilities

Preferable if the following requirements are also available:-

The building should have all four boundary walls put up to a minimum height of 7 feet

Compound with, at least, 30 perches land in extent

Those who are in possession of a building with the above requirements are requested to quote their monthly rate of rent on or before 15th of February, 2010 please.

**K.Parameswaran**
**District Manager UN-HABITAT,**
**No. 84, Temple Road, Jaffna.**

(சி/564515)


# மீள்குடியமர்வு, நல்லிணக்கத்தை மீள வலியுறுத்துகின்றது ஜப்பான்

## ஜனாதிபதிக்கு அனுப்பிய வாழ்த்துச் செய்தியில் தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 30

ஜனாதிபதித் தேர்தலில் வெற்றியீட்டியுள்ள மஹிந்த ராஜபக்ஷவை அதற்காக வாழ்த்தியுள்ள ஜப்பான், நாட்டுக்குள் இடம்பெயர்ந்தோரின் மீள்குடியமர்தலைத் துரிதப்படுத்தி பூர்த்தி செய்யும்படியும், நல்லிணக்கத்துக்கான அரசியல் நடவடிக்கை முயற்சிகளை முன்னெடுக்கும்படியும் இலங்கையை வற்புறுத்தியிருக்கின்றது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் தற்போதைய வெற்றியை ஒட்டி ஜப்பானிய வெளிவிவகார அமைச்சர் கட்சூயா ஒகடா வெளியிட்ட அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் வெற்றிக்காக அவரை ஜப்பான் வாழ்த்துகின்றது. கடந்த ஒக்ரோபர் மாதம் முதல் முன்னேற்றம் கண்டு வரும் இடம்பெயர்ந்த மக்களின் மீள்குடியமர்வைத் துரிதப்படுத்தி இலாவகமாகப் பூர்த்தி செய்ய இலங்கை தகுந்த நடவடிக்கைகளை எடுக்கும் என்றும், நாட்டின் பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்புவதில் இலங்கை மக்கள் ஒன்றுபட்டு உழைப்பார்கள் என்றும் ஜப்பான் நம்புகின்றது.

தேசிய நல்லிணக்கத்துக்கான அரசியல் நடவடிக்கைகளை ஜனாதிபதி மஹிந்த ராஜபக் ஷவின் தலைமை யின் கீழ் இலங்கை உறுதியாகவும், திறமையாகவும் முன்னெ டுக்கும் என்றும் ஜப்பான் பலமாக நம்பு கின்றது. - இப்படி ஜப்பான் வெளிவி வகார அமைச்சர் அந்தச் செய்தியில் மேலும் தெரிவித் திருக்கின்றார்.

(சி)

## 'லங்கா' ஆசிரியர் சீ.ஐ.டியால் கைது!

கொழும்பு, ஜன. 30

சிங்கள வார இதழான 'லங்கா' பத்திரிகையின் ஆசிரியர் சந்தன சிறிமல்வத்தே குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் நேற்று மாலை கைதுசெய்யப்பட்டார்.

சிரேஷ்ட அரச அதிகாரி ஒருவருக்குச் சொந்தமானதாகக் கருதப்படும் ஆடம்பர மாளிகை ஒன்று கதிர்காமப் பிரதேசத்தில் இருப்பதாகத் தெரிவித்து சிங்கள வார இதழான 'லங்கா' பத்திரிகையில் இந்த மாதம் வெளியான ஒரு கட்டுரை தொடர்பில், விசாரணைகளுக்குத் தோற்றுவதற்காக குற்றப்புலனாய்வுத் திணைக்களத்துக்கு நேரில் சமுகமளிக்கும்படி அப்பத்திரிகையின் ஆசிரியர் பணிக்கப்பட்டிருந்தார் என்று கூறப்படுகின்றது.

தொலைபேசி மூலம் இந்த அழைப்பு தமக்கு விடுக்கப்பட்டுள்ள போதும், அது குறித்து எழுத்தில் தமக்கு அறிவுறுத்தல் வழங்குமாறு தாம் குற்றப்புலனாய்வுப் பொலிஸாருக்குப் பதில் அளித்திருக்கின்றார் என்று அப்பத்திரிகையின் ஆசிரியர் முன்னதாகத் தெரிவித்திருந்தார்.


## பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம் சௌக்கிய சேவை கூட்டுறவு சிக்கன சேமிப்பு கடன் நிவிர்த்தி சங்கத்தின் 49-ஆவது பொதுக்கூட்டம் நிகழும் விரோதி வருடம் நாளை (31.01.2010) ஞாயிறு காலை 9.30 மணியளவில் தலைவர் செ.பேரின்பநாதன் அவர்கள் தலைமையில் யாழ்.போதனா வைத்தியசாலை மருத்துவ சத்திர சிகிச்சை கிளினிக் பகுதியில் நடைபெறும்.

சகல அங்கத்தவர்களையும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

(94351) சி.பாக்கியலிங்கம் செயலாளர்.


## யாழ் நகரில் இன்னும் பாவனைக்கு வராத வீதி!

யாழ்.கடற்கரை வீதியில் முதலாம் குறுக்கு வீதிக்கு மேற்காக முன்னர் இயங்கிய யாழ். மாநகர சபை மற்றும் பழைய பொலிஸ் நிலையப்பகுதி வரையான இடங்கள் இன்னும் மக்கள் பாவனைக்கு அனுமதிக்கப்படவில்லை. என்று தெரியவரு கின்றது.

## ஐ.தே.க அமைப்பாளர் நன்றி கூறுகிறார்

ஜனாதிபதித் தேர்தலில் எதிர்க்கட்சிகளின் பொதுவேட்பாளர் ஜெனரல் சரத் பொன்சேகாவிற்கு வாக்களித்த வடக்கு, கிழக்கு வாக்காளர்களுக்கு ஐ.தே. கட்சி யாழ்.மாவட்ட அமைப்பாளர் சா.சத்தியேந்திரா மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துள்ளார்.

ஒத்துழைப்பு நல்கிய யாழ்.பல்கலைக் கழக மாணவர்களுக்கும், தமிழ் கட்சிகளுக்கும் அவர் நன்றி கூறுகிறார். (ஒ)


மீண்டும் புதுப்பொலிவுடன் நவீன இயந்திரங்களுடன்

## பல் வைத்திய நிலையம்

★ பல் சம்பந்தமான வைத்திய ஆலோசனைகள்.
★ பல் பிடுங்குதல்.
★ பல் அடைத்தல்.
★ பல் சுத்தம் செய்தல்.
★ வேர் முறைச் சிகிச்சை.
★ பல் கட்டுதல்.

பார்வையிடும் நேரம்
தினசரி:
மதியம் 12.30Pm- 1.30Pm
மாலை 4.30Pm- 7.00Pm
ஞாயிறு 10Am- 12.30Pm

Dr. முருகானந்தன் கிளினிக்,
மருதடி (பஸ் டிப்போ அருகில்), பிரதான வீதி, பருத்தித்துறை.

(C/564518)



## விற்பனைப்பிரதிநிதிகள் தேவை

NESTO

நெஸ்ரோ பிஸ்கட், சொக்லட் வகைகள் என்பவற்றை விற்பனை செய்வதற்கு விற்பனைப் பிரதிநிதிகள் உடன் தேவை.

* G.C.E A/L சித்தியடைந்தவர்கள்.
* ஆங்கிலத்தில் எழுத வாசிக்கத் தெரிந்தவர்கள்.
* குறைந்தது 5வருட அனுபவமுள்ளவர்கள்.

இவை மூன்று தகைமைகளும் உள்ளவர்கள் உறவினர் அல்லாத இரு சிறந்த வர்த்தகர்களின் நற்சான்றிதழ்களுடனும் கிராம சேவையாளரின் சிபார்சுக் கடிதத்துடனும் சுய எழுத்தில் தயாரிக்கப்பட்ட சுயவிவரக் கோவையுடனும் கல்விச் சான்றிதழ்களுடனும் (30.01.2010) இன்றிலிருந்து 05.02.2010 வரை காலை 9மணி முதல் நண்பகல் 12மணிவரை நேரில்வரவும்.

* சம்பளம், கொமிசன் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

**சிவா நறுமணப் பூங்கா**

288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் T.P 0212222567

(C/564513)


## மரண அறிவித்தல்

### திருமதி கனகரட்ணம் தங்கம்மா



சுதுமலை கிழக்கு, மலைவேம்படி ஒழுங்கை, மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கனகரட்ணம் தங்கம்மா நேற்று (29.01.2010) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் கனகரட்ணத்தின் அன்பு மனைவியும் இராஜேஸ்வரன் (லண்டன்), றஜனி (கனடா), லதா (சுவிஸ்), சுரேஸ்வரன் (கனடா), லோஜினி (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சுதுமலை கிழக்கு,*
*மலைவேம்படி ஒழுங்கை, மானிப்பாய்.* (94366)

தகவல்: கணவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இந்தியாவின் 61ஆவது குடியரசு தினத்தை முன்னிட்டு இந்திய கலாசார நிலையத்தினர் இலங்கையின் பல பகுதிகளிலும் நடத்திவரும் பரதநாட்டிய நிகழ்வு நேற்று யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்ற போது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

இதில் யாழ்.மாவட்ட மேலதிக அரச அதிபர் ரூபினி வரதலிங்கம் மங்கள விளக்கேற்றுவதையும் பிரதம விருந்தினராக கலந்துகொண்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா , நல்லை ஆதீன முதல்வர் சோமசுந்தர பரமாச்சார்ய சுவாமிகள், யாழ். நகர மேயர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா ஆகியோர் முன்வரிசையில் அமர்ந்திருப்பதையும் நிகழ்வில் கலந்துகொண்டோரில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம். *(படங்கள்: சுகந்தன்)*

# நெல்லியடி ம.ம. வித்தியாலயத்தில் இவ்வாண்டு ஆங்கில மொழிமூலம் ஜி.சீ.ஈ. உயர்தர வகுப்பு

## நடத்துவதற்கு கல்வி அமைச்சு அனுமதி

நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் 2010 இல் ஜி.சீ.ஈ. (உயர்தர) ஆங் கில மொழிமூல வகுப்புக்களை நடத்து வதற்கான அனுமதியை கல்வி அமைச் சின் செயலாளர் எம்.எம்.எக்.டி. பண்டார வழங்கியுள்ளார்.

வலயக் கல்விப் பணிப்பாளர், மாகாணக் கல்விப் பணிப்பாளர், வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செய லாளர் ஆகியோரின் பரிந்துரையின் அடிப்படையில் இந்த அனுமதி வழங் கப்பட்டுள்ளது. இதன்படி இவ்வருடம் (2010) ஆங்கில மொழி மூலமான ஜி.சீ.ஈ. (உ/த) வகுப்புகளுக்குரிய கணித, விஞ்ஞான மற்றும் கலைப் பிரிவுகள் இக்கல்லூரியில் ஆரம்பிக்கப் படவுள் என.

தகுதியுள்ள மாணவர்கள் விண்ணப் பிக்கலாம் என்று அதிபர் அறிவித்துள்ளார். (ஒ)

# பொன்சேகா அரசியல் தஞ்சம் கோரவில்லை என்கிறது ஆஸி.

கொழும்பு, ஜன. 30

ஆஸ்திரேலியா உள்ளிட்ட நாடுகளிடம் சரத் பொன்சேகா அரசியல் தஞ்சம் கோரியுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது. ஆனால் இதுவரை அப்படி ஒரு கோரிக்கை பொன்சேகாவிடமிருந்து வரவில்லை என்று ஆஸ்திரேலியா மறுத்துள்ளது.

பொன்சேகாவுக்கு தற்போது நேரம் சரியில்லை. என்ன வேண்டுமானாலும் நடக்கலாம் என அவர் அஞ்சுகிறார்.

இந்த நிலையில், தற்போது ஆஸ்திரேலியா உள்ளிட்ட சில வெளிநாடுகளிடம் பொன்சேகா புகலிடம் கோரி அணுகியிருக்கிறார் என செய்திகள் கூறுகின்றன.

ஆனால் இதுவரை அப்படி ஒரு கோரிக்கை வரவில்லை என்று ஆஸ்திரேலிய வெளியுறவு அமைச்சர் ஸ்டீபன் ஸ்மித் கூறியுள்ளார்.

இதுகுறித்து அவர் கூறுகையில், இது தொடர்பாக முறைப்படி எந்தக் கோரிக்கையும் எங்களுக்கு வரவில்லை. இருப்பினும் இரண்டு விடயங்கள் முக்கியமானவை. ஒன்று பொன்சேகா சுதந்திரமாக நடமாட அனுமதிக்கப்பட வேண்டும். இரண்டாவது அவருக்குரிய பாதுகாப்பு அளிக்கப்பட வேண்டும் - என்று கூறினார்.

முன்னதாக கொழும்பில் செய்தியாளர்களிடம் பேசிய பொன்சேகா, தற்காலிக புகலிடம் தொடர்பாக அமெரிக்கா, பிரிட்டன் தூதரகங்களுடன் பேசியுள்ளேன். ஆஸ்திரேலிய தூதருடனும் பேசவுள்ளேன்.

ஆனால் நாட்டை விட்டு வெளியேற முடியாமல் அரசு தடுத்துக் கொண்டிருக்கிறது - என்று கூறினார்.

---

# கட்சி ஆதரவாளர்களிடையே மோதல் இறக்காமத்தில் பாதுகாப்பு அதிகரிப்பு

அம்பாறை,ஜன.30

அம்பாறை இறக்காமத்தில் இரு கட்சி ஆதரவாளர்களுக்கிடையே ஏற்பட்ட மோதல்ச் சம்பவங்களையடுத்து பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

கடந்த புதன்கிழமை காலை ஜனாதிபதித் தேர்தல் முடிவுகள் வெளிவரத் தொடங்கியதிலிருந்து இரு கட்சி ஆதரவாளர்களுக்கிடையில் சிறு சிறு மோதல்கள் இடம்பெறத் தொடங்கின.

இதனையடுத்து, இப்பிரதேச வீதி களிலும் சந்திகளிலும் விசேட அதிரடிப் படையினரும், பொலிஸாரும் பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்டனர்.

இதேவேளை, புதன்கிழமை காலை 11.30மணியளவில் இறக்காமம் மொறட்டுவ சந்தியில் இருகட்சி ஆதரவாளர்களுக்கிடையே இடம்பெற்ற கைகலப்பு மற்றும் கற்பிரயோகத்தால் வீட்டு முற்றத்தில் நின்று கொண்டிருந்த ஆசிரியர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

இவர் கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றன எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

# சுமுக நிலைக்கு வந்துள்ள யாழ்.நகர வீதிகள்

வண்ணை, ஜன.30

யாழ்.நகர மையப்பகுதி வீதிகளில் தற்போது நெருக்கடி நிலை தணிந்துள்ளது. அதேபோல் போக்குவரவு நெரிசல்களும் குறைந்துள்ளன.

ஏ-9பாதை திறக்கப்பட்டதும் அதனைத் தொடர்ந்து நத்தார், புதுவருடம், தைப்பொங்கல் போன்ற திருநாள் காலங்கள் வந்தமையால் நகரில் ஏற்பட்டிருந்த சனப்புழக்கம் ஜனாதிபதி தேர்த லையடுத்து குறைந்து சுமுக நிலைக்கு திரும்பியுள்ளது.

அதே வேளை ஆனைப்பசிக்கு சோளப் பொரி போன்று யாழ்.நகரில் பழுதடைந்து மோசமாக காட்சியளித்த வீதிகளும் கல வைத்தார் போட்டு செப்பனிடப்பட்டுள்ளன.(ஒ-160)

---

# வாக்கு எண்ணுதலில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

றிய ஐ.தே.கவின் பொதுச் செயலாளரும் எம்.பியுமான திஸ்ஸ அத்தநாயக்கவே இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தல் நீதியானதாகவும் நியாயமானதாகவும் இருந்தது என்று சொல்ல முடியாது. வாக்குச் சாவடிகளில் அசம்பாவிதங்கள் எவையும் பெரிதாக இடம்பெறாத போதிலும், வாக்குகள் எண்ணும் நிலையங்களில் பாரிய மோசடிகள் இடம்பெற்றுள்ளன.

வாக்குகள் எண்ணும் அதிகமான நிலையங்களில் இருந்த எதிர்க்கட்சிகளின் பிரதிநிதிகள் விரட்டப்பட்டுள்ளனர். சில நிலையங்களில் இரவு 11 மணிக்குப் பின்னரே எமது பிரதிநிதிகள் உள்வர அனுமதிக்கப்பட்டனர்.

குண்டசாலையில் உள்ள வாக்குகள் எண்ணும் நிலையங்களுக்கு எமது பிரதிநிதிகள் பிற்பகல் நான்கு மணிக்கு அனுமதிக்கப்படுவர் என்று தேர்தல் ஆணையாளர் கூறினார். ஆனால் அவ்வாறு நடக்கவில்லை. இரவு 7.30 மணிக்குப் பிறகே அனுமதிக்கப்பட்டனர்.

அந்த வாக்குகள் எண்ணும் நிலையங்களுக்குக் கொண்டுவரப்பட்ட 42 வாக்குப் பெட்டிகள் வேறு இடங்களுக்கே கொண்டு செல்லப்பட்டன. அநுராதபுரம் கச்சேரியில் இருந்த எமது பிரதிநிதிகள் விரட்டியடிக்கப்பட்டனர். அதேபோல் வாக்குகளின் எண்ணிக்கை கணினியில் திரிபுபடுத்தப்பட்டுள்ளது.

இவ்வாறு பல மோசடிகளைச் செய்தே அரசு இத்தேர்தலில் வெற்றிபெற்றது. தேர்தலுக்கு முன்பிருந்தே அரசால் தேர்தல் சட்டங்கள் மீறப்பட்டன.

அரச ஊடகங்கள் முறைகேடாகப் பயன்படுத்தப்பட்டன. அரச சொத்துகளும் அவ்வாறே பாவிக்கப்பட்டன. அலரிமாளிகையில் விருந்துபசாரம் நடத்தப்பட்டது. சரத் பொன்சேகாவின் ஆதரவாளர்கள் எதுவித குற்றச்சாட்டுகளும் இல்லாமல் கைதுசெய்யப்பட்டனர்.

**வடக்கிலும் மக்கள் மிரப்பட்டனர்**

அதேபோல், தேர்தல் தினத்தன்றும் வடக்கில் குண்டுகளை வெடிக்கச் செய்து அரசு மக்களை மிரட்டியது. காலை 9 மணி வரை மக்கள் வெளியே வரவில்லை. மொத்தத்தில் இத் தேர்தல் மோசடிமிக்க தேர்தலாகவே இருந்தது.

தேர்தல் முடிவுகளை எம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது. வாக்குகள் எண்ணும் போது ஏற்பட்ட மோசடிகள் தொடர்பான விவரங்களை நாம் தேடிக்கொண்டிருக்கின்றோம்.

தகவல்கள் அனைத்தும் கிடைத்ததும் அவற்றை நாம் நாட்டு மக்களுக்கும் சர்வதேசத்திற்கும் தெரியப்படுத்துவோம். அதேபோல், தேர்தல் முடிவுகளுக்கு எதிராக நீதிமன்றமும் செல்வோம்.

தேர்தலின்போது பொலிஸாரிலும் படையினரிலும் அதிகமானவர்கள் அரசின் பிழையான உத்தரவை நிராகரித்து மிகவும் நேர்மையாகச் செயற்பட்டனர். அவர்களுக்கும் இத் தேர்தலில் பொன்சேகாவுக்கு வாக்களித்த மக்களுக்கும் நாம் இச்சந்தர்ப்பத்தில் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

எந்தச் சவால்கள் வந்தாலும் அவற்றை எதிர்கொண்டு மக்களுக்குச் சேவை செய்யும் நோக்கில் சரத் பொன்சேகா தொடர்ந்தும் அரசியலில் ஈடுபடுவார் என்று அவர் எம்மிடம் கூறியுள்ளார்.

தேர்தலின் பின்னர் அரசு எமது ஆதரவாளர்களைப் பழிவாங்க ஆரம்பித்துள்ளது. அரசு இதை உடன் நிறுத்த வேண்டும். அரசு தொடர்ந்தும் ஜனநாயக மீறல் செயற்பாட்டில் ஈடுபடுவதை நாம் ஏற்கமாட்டோம்.

அடுத்து நாடாளுமன்றத் தேர்தல் இடம்பெறவுள்ளது. இத்தேர்தலை எப்படி எதிர்கொள்வது என்று நாம் இன்னும் தீர்மானிக்கவில்லை. தேர்தல் அறிவிக்கப்பட்டதும் அது தொடர்பாக கட்சித் தலைவர்களுடன் பேசி நாம் முடிவெடுப்போம் - என்றார்.(அ-சி)

# பொதுத் தேர்தலுக்கு.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கைப்பற்ற முடியாது என்பதை உணர்ந்துள்ள அரசு, அடுத்த பொதுத் தேர்தலில் தான் மீண்டும் வெற்றி பெற்று புதிய அரசை அமைத்தாலும் கூட அரசமைப்பை மாற்றுவதற்கான அதிகாரத்தை தற்போதைய தேர்தல் முறைமையின் கீழ் பெறமுடியாது என்பதையும் நன்கு உணர்ந்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

புதிய அரசை அமைத்து அதன் மூலம் இனப்பிரச்சினைக்கான தீர்வுத் திட்டம் ஒன்றை முன்னெடுக்கப் போகின்றார் என்று கூறிவரும் அரசுத் தலைவர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, அதனை நடைமுறைப்படுத்துவதற்காக அரசமைப்பை மாற்றவேண்டியவராக உள்ளார் என்று சுட்டிக்காட்டப்படுகின்றது.

**நாடாளுமன்றத்தைக் கலைக்கு முன்னர்...**

இந்தப் பின்னணியில், தற்போதைய விகிதாசாரப் பிரதிநிதித்துவத் தேர்தல் முறைமையின் கீழ் பொதுத் தேர்தல் நடத்தப்பட்டால், அரசமைப்பை மாற்றக்கூடிய பலம் தமக்கு நாடாளுமன்றத்தில் கிட்டவே கிட்டாது என்பதை ஜனாதிபதி நன்கு உணர்ந்துள்ளார் என்றும் கூறப்பட்டது.

அதனால் -

தற்போதைய நாடாளுமன்றத்தைக் கலைத்தும் புதிய பொதுத் தேர்தலுக்கு உத்தரவிட முன்னர் -

தற்போது எதிரணியில் எஞ்சியிருக்கும் எம்.பிக்களுடன் நேரடியாகத் தொடர்பாடலை நடத்தி அவர்களில் இருபதுக்கும் குறையாதோரின் ஆதரவை இந்தக் கடைசி நேரத்தில் திரட்டி, அதன் மூலம் மொத்தமாக நூற்றியைம்பது எம்.பிக்களின் (நாடாளுமன்றின் மூன்றில் இரு பங்கு எம்.பிக்களின்) ஒத்துழைப்புடன் தேர்தல் முறைமையை மாற்றுவதற்கான அரசமைப்புத் திருத்தத்தை முன்னெடுக்கும் இறுதிநேர எத்தனம் அரசுத் தரப்பால் இப்போது மேற்கொள்ளப்படுவதாகக் கூறப்படுகின்றது.

மூன்றில் இரு பங்கு எம்.பிக்களின் ஆதரவை இந்த விடயத்துக்குத் திரட்டக்கூடிய வாய்ப்பு இருக்குமானால் - அதற்கான ஒத்துழைப்பு கிட்டுவதற்கு சந்தர்ப்பம் இருக்குமானால் -

நாடாளுமன்றத்தை உடனடியாகக் கலைப்பதைத் தள்ளிப்போட்டு, அந்த முயற்சியில் ஈடுபடவும் -

எதிர்வரும் ஏப்ரலில் தற்போதைய நாடாளுமன்றின் பதவிக்காலம் தன்பாட்டில் முடிவடைய முன்னர் அந்தத் தேர்தல் முறைமையை மாற்றுவதற்கான அரசமைப்பு மாற்று நடவடிக்கைகளை ஒப்பேற்றவும் -

அரசுத் தலைமை விரும்புகின்றது என்று கூறப்படுகின்றது.

**தொகுதி வாரி எம்.பி. முறையை விரும்பும் எதிரணி உறுப்பினர்கள்**

தற்போதைய நாடாளுமன்றத்தில் கட்சிகள் மாறி அமைச்சர் பதவிகளை ஏற்றுக்கொண்டுள்ள பலர் உள்ளனர். அவர்களும் அதேவேளை எதிரணியில் இப்போது மிச்சம் இருக்கும் எம்.பிக்களில் பலரும் கூட, இனிமேல் விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையின் கீழ் தாங்கள் அடுத்த தேர்தலில் எம்.பியாகத் தெரிவு செய்யப்படுவது துர்லபமே எனக் கருதுகின்றார்கள் எனக் கூறப்படுகின்றது.

அதனால் மீண்டும் 1978 இற்கு முந்திய - தொகுதிவாரி தேர்தல் முறைமை வந்தால், ஏதேனும் தேர்தல் தொகுதிக்கு கட்சியின் வேட்பாளர் நியமனம் கிடைக்கும் பட்சத்தில் தாம் அந்தத் தொகுதியில் மட்டும் கவனம் செலுத்தி, வென்று தங்களை எம்.பியாக்கலாம் என்ற நம்பிக்கையில் அவர்கள் உள்ளனர் என்று கூறப்படுகின்றது.

இந்தக் காரணத்தினால் தற்போதைய நாடாளுமன்றத்தின் எம்.பிக்கள் பலர் தேர்தல் முறைமையை மாற்றும் இந்தக் கடைசி நேர முயற்சிக்கு முழு ஒத்துழைப்பு வழங்கக்கூடும் என நம்பப்படுகின்றது.

தற்போதைய விகிதாசாரத் தேர்தல் முறைமைக்கு மாறாக -

- மாவட்ட ரீதியில் விகிதாசாரப் பிரதிநிதித்துவமும் தொகுதி ரீதியில் நேரடித் தேர்வும் கலந்து ஒரு முறைமையைப் புதிதாக ஏற்படுத்துவதன் மூலம் நாடாளுமன்றத் தேர்தல்களில் மூன்றில் இருபங்கு பெரும்பான்மையுடன் - புதிய அரசமைப்பை உருவாக்குவதற்கான பலத்துடன் - வெற்றியீட்ட முடியும் என அரசு கருதுவதாகக் கூறப்படுகின்றது.(அ-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவாந்துறைப் படிப்பகம்
சேநகர சபை, யாழ்ப்பாணம்.

# 'லங்கா ஈ நியூஸ்' இணைய அலுவலகத்தில் இனந்தெரியாதோர் புதனன்று கைவரிசை!

ராஜகிரியவில் உள்ள 'லங்கா ஈ நியூஸ்' இணையத்தள அலுவலகத்திற்கு நேற்றுமுன் தினமிரவு சென்றுள்ள இனந்தெரியாத நபர்கள், அங்கு எவரும் இல்லாத நிலையில் அலுவலகத் தின் வாயில் கதவைச் சீல் வைத்துள்ளனர்.

ஜனாதிபதித் தேர்தல் பிரசாரப் பணிகள் மேற்கொள்ளப்பட்ட காலத்தில் இந்த இணையத்தளத்தினருக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டிருந்தது. அத்துடன் தேர்தல் நடைபெற்ற தினத்தில் இருந்து அந்த இணை யத்தளத்தை இலங்கையில் உள்ள வர்கள் பார்வையிட முடியாதவாறு அதி கார பூர்வ மற்ற முறையில் தடைசெய்யப்பட்டுள்ளது.

ஜெனரல் சரத் பொன்சேகாவுக்கு சார் பாக செயற்பட்டு வந்த இந்த இணையத் தளத்தில் சிறப்புக் கட்டுரை எழுதி வரும் பிரகீத் ஹெக்நேலியகொட கடந்த 25 திகதி இரவு இனந்தெரியாதவர்களால் கடத் திச் செல்லப்பட்டார். அவருக்கு என்ன நேர்ந்தது என்பது குறித்த தகவல்கள் நேற் றுவரை வெளியாகவில்லை என்றும் தெரி விக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## பொன்சேகா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஏதேனும் கட்டுப்பாடு விதிக்கும்படி யான உத்தரவு ஏதும் மேலதிகாரிகளினால் தங்கள் தரப்புக்கு விதிக்கப்பட்டதான தகவல் எதுவும் தனக்குக் கிடைக்க வில்லை என்று குடிவரவு, குடியகல்வுக் கட்டுப்பாட்டு அதிகாரியான பி.பி.அபேக் கோன் தெரிவித்தார். (சி)

## ஜனநாயகம் இன்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யிட்ட கருத்துக்களுக்கும் அவர் தற்போது வெளியிட்டுள்ள கருத்துக்களுக்கும் முற் றும் முழுதான வேறுபாடு உள்ளது. தேர் தல் ஆணையாளரின் உரையின் மூலம் ஏதேனும் மர்மம் ஏற்பட்டுள்ளதை காண முடிகிறது. ஏதாவது சம்பவமொன்று நேர்ந் தால் அதனைத் தனியாக தானே அனுப விக்க வேண்டும் என தேர்தல் ஆணை யாளர் தெரிவித்துள்ளார்.

இதனடிப்படையில் இந்த நிலைமை குறித்து கவனத்தில் கொள்ள வேண்டும். இது குறித்து ஐக்கிய தேசிய முன்னணி தீர்மானமொன்றை எடுத்துள்ளது. ஏனைய கட்சிகளுடன் இது பற்றி கலந்துரையாடி வருகிறோம்.

### சரத் மீது அடிப்படையற்ற குற்றச்சாட்டுகள்

அதேவேளை பொது வேட்பாளர் சரத் பொன்சேகாவுக்கு எதிராக சுமத்தப்படும் குற்றச்சாட்டுகள் அடிப்படையற்றவை. அவர் சுதந்திரமாகப் பணியாற்ற சந்தர்ப்ப மளிக்கப்பட வேண்டும். அவருக்கு ஏற் படுத்தப்படும் அழுத்தங்கள், இடையூறுக ளில் இருந்த அவரை விடுவிக்க வேண் டும். எந்ததொரு தேர்தலின் பின்னரும் அனைத்து தரப்பினரும் மீண்டும் கூடி ஒற்றுமையாகப் பணியாற்ற வேண்டும் என்பதே எமது நிலைப்பாடு.

எனினும் ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் அவ்வாறான நிலைமை ஏற்பட வில்லை. நாடு முழுவதும் வன்முறை பரவி வருகிறது. அரசின் வன்முறையா ளர்கள் பல்வேறு வகையில் தமது எதிர்வாதி களை பழிவாங்கி வருகின்றனர்.

தேர்தல் தினத்தில் அமைதியைப் பேணிய பொலிஸாரால் தற்போது அமை தியை பேண முடியாதுள்ளது. தேர்தலின் பின்னர் அமைதியை நிலைநாட்ட வேண் டும் எனவும் சகலரும் ஒன்றிணைய வேண் டும் எனவும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்த போதிலும் அவ்வாறான நிலை மையை ஏற்படுத்துவதற்கான முனைப்பு களை அரசு மேற்கொள்ளவில்லை. அரசு இராணுவத்தினரைப் பயன்படுத்தி கொழும் பில் விடுதியை சுற்றிவளைக்க முடியுமானால் சாதா ரண மக்களைப் பாதுகாக்க ஏன் நடவடிக்கை எடுக்க முடியாது?

எந்த ஜனாதிபதித் தேர்தலிலும் ஒரு வேட்பாளர் வெற்றிப் பெற்று ஏனைய வேட் பாளர்கள் தோல்வியடைவார்கள். எனினும் ஒரு போதும் ஜனநாய கம் தோற்பதற்கோ, தோற்கடிக்கப்படவோ இடமளிக்க முடி யாது.

### ஜனநாயகத்தைப் பாதுகாக்க சகல கட்சிகளும் ஒத்துழைக்க வேண்டும்

ஜனநாயகம் தோல்வியடைவ தென்பது மக்களின் அடிப்படை உரிமை மற்றும் வாக்குரிமை இல்லாமல் செய் யப்படுவதாகும். தேர்தலில் வாக்குகளைப் பயன்படுத்தி மக்களுக்கு எதிராக வன் முறையைக் கட்டவிழ்த்து விடுவது ஜன நாயகத்தை மீறுவதாகும். ஜனநாயகத்தை பாதுகாப்பதற்காக சகல அரசியல் கட்சிக ளும் பேதமின்றி இந்தச் சந்தர்ப்பத்தில் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்.

அதேவேளை, ஜனாதிபதித் தேர்தலில் ஜெனரல் சரத் பொன்சேகாவுக்கு ஆதரவு வழங்குமாறு மக்கள் கேட்டுக்கொண்ட னர். அதனடிப்படையில் ஐக்கிய தேசிய முன்னணி அவருக்கு ஆதரவு வழங்க தீர்மானித்தது. அவருக்கு ஆதரவு வழங் கிய அனைவருக்கும் நன்றிக் கூறுகி றோம். அதேபோல் தேர்தலில் உரிய முறையில் பணியாற்றிய பாதுகாப்புத் தரப் பினர் உள்ளிட்ட அனைவருக்கும் நன்றி கூறுகிறோம்.

தேர்தல் தினத்தன்று காலை 7 முதல் மாலை 4 மணிவரை வன்முறைகள் இன்றி அமைதியாகத் தேர்தல் நடைபெற்றது. எனினும் அன்றைய தினம் இரவு வாக்கு எண்ணும் மையங்களுக்குள் தமது வன் முறை குழுக்களுடன் பிரவேசித்த அமைச் சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் வாக்கு எண்ணும் பணிகளைப் பார்வை யிடச் சென்ற பலரை விரட்டியடித்தனர்.

தமது கட்சியின் ஆதரவாளர்களை தவிர ஏனைய கட்சிகளின் ஆதரவாளர் களை வாக்கு எண்ணும் நடவடிக்கை களை பார்வையிட அனுமதிக்கவில்லை. இது சம்பந்தமாக விரிவாக ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்கும் நோக்கில் விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

ஆளும் தரப்பினர் சிலர் வாக்கு எண்ணும் மையங்களில் கணக்கெடுப்பை அவதானித்துக் கொண்டிருந்தவர்களை அச்சுறுத்தியுள்ளனர். மேலும் தமது அதி காரிகளைக் கூட பாதுகாத்து கொள்ள முடி யாமல் போனது என ஆணையாளர் தமது அறிக்கையில் கூறியுள்ளார் - என்றார் ரணில். (அ-சி)

# பொலிஸ் வாகனம்-லொறி நேருக்கு நேர் மோதி விபத்து

### 10 படையினர் உட்பட 13 பேர் படுகாயம்

கொழும்பு, ஜன. 30

ஜனாதிபதித் தேர்தலை ஒட்டிய விசேட கடமையைப் பூர்த்திசெய்த பின்னர் முகா முக்குத் திரும்பும் படையினரை ஏற்றி வந்த பொலிஸாரின் 'கப்' வாகனம் ஒன்று எதிரே வந்த லொறியுடன் நேருக்கு நேர் மோதியதில் பத்து இராணுவத்தினரும் மற் றும் மூவரும் படுகாயமடைந்தனர்.

குருநாகல் பொலிஸ் பிரிவில் உள்ள நரம்வல என்ற இடத்தில் நேற்று முன்தி னம் இரவு இந்த விபத்து இடம்பெற்றி ருக்கின்றது.

இரண்டு வாகனங்களினதும் சாரதிகளும் மற்றொருவரும் நரம்வல ஆதார வைத்திய சாலையில் சிகிச்சை பெற்றுவரும் அதே சமயம், காயமுற்ற படையினர் குருநாகல் வைத்தியசாலைக்குக் கொண்டு விரையப் பட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

## இருபது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலா 50 ஆயிரம் ரூபா வீதம் மொத் தம் 7 லட்சத்து 50 ஆயிரம் ரூபாவை யும், சுயேச்சை வேட் பாளர்கள் ஐவரும் தலா 75 ஆயிரம் ரூபா வீதம் மொத் தம் 3 லட்சத்து 75 ஆயிரம் ரூபாவை யும் செலுத்தியிருந் தனர்.

எனினும், இவர் களுக்கு அளிக்கப் பட்ட வாக்குகளின் மொத்த எண்ணிக்கை 20 ஆயிரத்து 494 என தேர்தல்கள் செயலகம் மேலும் அறிவித்துள்ளது.

இவர்கள் பெற்ற வாக்குகள் அளிக் கப்பட்ட வாக்குக ளில் ஐந்து வீதத் திற்கும் குறைவாக இருந்தமையால் இவர்கள் தமது கட் டுப்பணத்தை இழந்துள்ளனர் என் றும் செயலகம் குறிப் பிட்டுள்ளது.

## பொன்சேகாவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காலம் தொடர்பில் கவனம் செலுத்தப் படும் எனவும் அமெரிக்கா குறிப்பிட்டுள்ளது.

தேவை ஏற்படின் ஜெனரல் சரத் பொன் சேகாவிற்கு அமெரிக்கா உதவிகளை வழங்கும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக ஜெனரல் சரத் பொன்சேகா வின் பாதுகாப்பு தொடர்பில் இலங்கைக் கான அமெரிக்கத் தூதரகம் அவதானம் செலுத்தி வருகிறது என அமெரிக்க ராஜாங்கத் திணைக்களப் பேச்சாளர் பிலிப் க்ரோலி தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, அபிவி ருத்திப் பணிகளை முன்னெடுக்க வேண் டும், மாகாண ரீதியான அதிகாரப் பரவலாக் கம் தொடர்பில் கவனிக்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அரசியல் தீர்வுத் திட்டம் தொடர்பான ஜனாதிபதியின் முனைப்புக்கள் வரவேற்கத் தக்கவை என்றும், தொடர்ந்தும் அமெரிக்கா, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் இணைந்து செயற்படும் என்றும் அவர் தெரிவித்தார்.


இணுவிலில்
உலகப்
பெருமஞ்சம்
அருள்மிகு
இணுவில் கந்தசுவாமி கோயிலில்
தைப்பூச
மஞ்சத் திருவிழா



இன்று மாலை 6.30 மணிக்கு ஆறுமுகப் பெருமானுக்கு வசந்த மண்டபப்பூசை இடம்பெற்று இரவு 7 மணிக்கு பல்லாயிரக்கணக்கான மின்சார தீபங்களால் அலங்கரிக்கப்பட்ட உலகப் பெருமஞ்சத்தில் சுவாமி திருவீதியுலா வரும் அருட்காட்சி இடம்பெறும். அடியவர்கள் அனைவரும் இக்காட்சியைக் கண்டு முருகனின் அருளைப் பெறுவீராக.

மஞ்சத் திருவிழா சிறப்புற வாழ்த்துவோர்

ஓடு, செங்கல், சீமெந்து அனைத்து வகைப் பொருள்களையும் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள
ஆனந்தா கட்டடப் பொருள் விற்பனை நிலையம்
கே.கே.எஸ்.வீதி, இணுவில்.

விதுசிகா ஸ்ரோர்ஸ்
கே.கே.எஸ்.வீதி, இணுவில்.
அன்பளிப்புப் பொருள்கள், அழகுசாதனப் பொருள்கள், பாடசாலை உபகரணங்களைப் பெற்றுக்கொள்ள.

மோட்டார் சைக்கிள் உதிரிப்பாகங்கள் கட்டடப் பொருள் வியாபாரம்
கஜமுகன் மோட்டோர்ஸ்
கே.கே.எஸ்.வீதி, இணுவில்.



SM CONSULTANT SERVICE
UK STUDENT VISA

2009ம் ஆண்டு யூன் - டிசம்பர் காலப்பகுதியில் நூற்றுக்கு மேற்பட்ட மாணவர்களுக்கு லண்டன் student Visa பெற்றுக்கொடுத்துள்ளோம் என்பதை மாணவர்கட்கு மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

★ யாழ். மாணவர்களுக்கு லண்டனில் விசா பெற்றுக் கொடுப்பதில் மக்களின் நன் மதிப்பைப் பெற்று முன்னணி வகிக்கும் ஒரே நிறுவனம்.
★ பெப்ரவரி, ஏப்ரல் மாதங்களுக்கான பிரவேசத்திற்குரிய நடவடிக்கைகள் ஆரம்பமாகியுள்ளன.
★ விண்ணப்பிக்க விரும்புவோர் உடனடியாகத் தொடர்பு கொண்டு தேவையான விபரங்களைச் சமர்ப்பித்து தற்போது அமுலில் உள்ள இலகுவான நடைமுறையின் கீழ் விசாக்களைப் பெற்றுக்கொள்ளுங்கள்.
★ சந்தர்ப்பத்தினைப் பயன்படுத்திக்கொள்ளுங்கள்!!!



தங்குமிட ஒழுங்குகள், விமான நிலைய அழைப்பு ஏற்பாடுகள் மற்றும் விசா சம்பந்தமான மேலதிக ஆலோசனைகள் என்பன எமது லண்டன் ஆலோசகரால் நேரடியாக வழங்கப்படும்.

அனைத்து விபரங்கட்கும் தினமும் (ஞாயிறு உட்பட) காலை 8.00 மணிமுதல் மாலை7.00 வரை அலுவலகத்தில் நேரடியாகச் சந்தித்துக் கொள்ளலாம்.
அனைத்து சேவைகளும் நம்பிக்கைக்குரியவை என்பதனை உத்தரவாதத்துடன் உறுதிப்படுத்துகின்றோம்.

021 222 3818
021 567 3818
077 452 8818
தொடர்புகளிற்கு:
இல: 148, கோயில்வீதி, (யுனிசெவ் முன்பாக) யாழ்ப்பாணம்.



LAVA HOSPITAL
75, கோயில் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே. 222 4333
ஸ்கான் (Scan), ECG கணனி மயப்படுத்தப்பட்ட ஆய்வுகூட வசதிகள் மூலம் மேற்கொள்ளப்படுகிறது.
(சி/562626)
Basic Body Checkup
'அடிப்படை உடற் பரிசோதனைகள்
★ உடல் பருமனானவர்களைப் பரிசோதிப்பதற்கான
Obesity package - 1200/=



CHEMISTRY
கடந்த கால வினா விடை வகுப்புக்கள் (2000-2009வரை)
சனி, ஞாயிறு, திங்கள், செவ்., புதன் 5.30-6.30Pm
ஆரம்பம்:- இன்று 30.01.2010 (5.30Pm)
S.VASU
NAVALAR
Annaipanthy, Jaffna.





ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்களின் வெற்றி
எமது மக்களின் அமைதிக்கும்
13வது சீர்திருத்தத்தை செயற்படுத்தி,
செழுமைப்படுத்துவதற்கும்
கிடைத்த வெற்றியாகும்!



இலங்கை மக்கள் ஜனநாயகப் பேரவை (சுவிஸ்)
செயலாளர் : கி. ராஜ்மோகன் தொ.பே: 0041764732717, 0041765344385



காணி விற்பனைக்கு
யாழ்.நகருக்கு சுமார் 6Km தூரத்திலும் நல்லூர் கோவிலுக்கு அண்மையிலும் கல்வியங்காடு, 3ஆம் கட்டை வீதியில் பாதுகாப்பு மிக்க அமைதியான சூழலில் தூய்மையான குடிதண்ணீர் உள்ளது. இரண்டு வீடுகள்கட்டக்கூடிய 4¾ பரப்புக்காணி விற்பனைக்குண்டு.
உடன் தொடர்பு கொள்ளவும்: 0776081693


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 30.01.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org